முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், காஞ்சிபுரம்

(மகளிர் நீதிமன்றம்,காஞ்சிபுரம்)

முன்னிலை: திரு. ப.உ. செம்மல், எம்.ஏ.,எல்எல்.எம்.,

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி

முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், காஞ்சிபுரம்

2025ம் ஆண்டு ஜுலை திங்கள் 24 ஆம் நாள் வியாழக்கிழமை

அமர்வு வழக்கு எண்.77/2018

(CNR. No.TNKP060007842018)

திருப்பெரும்புதூர் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்ற முதல்நிலைப் பதிவேட்டு வழக்கு எண்.40/2018 குன்றத்தூர் காவல் நிலைய குற்ற எண். 1101/2018.

| | |
|---|---|
| குற்ற முறையிடுபவர் | காவல் ஆய்வாளர், குன்றத்தூர் காவல் நிலையம்( குற்ற எண். **1101/2018**) |
| எதிரிகளின் பெயர்கள் | 1. அபிராமி க/பெ. விஜய்<br>2. மீனாட்சிசுந்தரம் என்கிற சுந்தரம் த/பெ. ராஜன் |

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற **07.04.2021** தேதியிட்ட R.O.C.No.814/2020/RG/F1(P.Dis.No.36/2021 உத்தரவின்படி CASE SUMMARY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

| Sl.No. | CASE SUMMARY | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | The period of remand of the accused | : | Name of the accused<br>1. அபிராமி க/பெ. விஜய் | Date of remand<br>02.09.2018 | Released on bail<br>Still in Judicial custody |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 2. மீனாட்சிசுந்தரம் என்கிற சுந்தரம் த/பெ. ராஜன் | 02.09.2018 | Still in Judicial custody |
| Ii | Date of filing of the complaint/Final report in the court | : | Filing of complaint<br>01.09.2018 | Filing of Final report<br>29.11.2018 அன்று இறுதி அறிக்கை திருப்பெரும்புதூர் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | |
| Iii | Date of committal of the case to the court of Sessions | திருப்பெரும்புதூர் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் 17.12.2018 அன்று மேலனுப்புகை (Committal) செய்யப்பட்டுள்ளது.. | | | |
| Iv | Date of questioning of the accused u/s 228, 240, 246 and 251 of the Code of Criminal procedure, 1973, as the case may be | 19.07.2019அன்று செங்கற்பட்டு மகளிர் நீதிமன்றத்தால் முதல் எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 120(B) மற்றும் 302 (2 எண்ணிக்கைகள்) 2வது எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 120(B) மற்றும் 302 உடன் இணைந்த 109 (2 எண்ணிக்கைகள்)ஆகியவற்றின்படி குற்றசாட்டுகள் வனையப்பட்டுள்ளது. | | | |
| v | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior court except routine petitions like petitions u/s 317 of the Code. | | | | |
| Vi | Date of examination in Chief and Cross | Name of the examination | Name of the witness | Date of Chief | Date of cross |
| | | P.W.1 | திரு. விஜய் | 02.08.2019 | 05.08.2019 |
| | | P.W.2 | திருமதி.கவிதா ராமகிருஷ்ணன் | 16.08.2019 | 16.08.2019 |

| | | | |
|---|---|---|---|
| P.W.3 | திரு.பூபதி | 16,08.2019 | 16.08.2019 |
| P.W.4 | திரு. செந்தில் | 19.08.2019 | 19.08.2019 |
| P.W.5 | திரு. முத்து | 19.08.2019 | 19.08.2019 |
| P.W.6 | திரு. சரவணகுமார் | 26.08.2019 | 26.08.2019 |
| P.W.7 | திரு. கோபாலகிருஷ்ணன் | 23.09.2019 | 23.09.2019 |
| P.W.8 | திருமதி. பிந்து | 27.09.2019 | 27.09.2019 |
| P.W.9 | திரு. விஜயன் | 27.09.2019 | 27.09.2019 |
| P.W.10 | திரு. கார்த்திகேயன் | 04.10.2019 | 04.10.2019 |
| P.W.11 | திரு. ரமேஷ் | 04.10.2019 | 04.10.2019 |
| P.W.12 | திருமதி.பூர்விஷாரவி | 14.10.2019 | 14.10.2019 |
| P.W.13 | டாக்டர். பிரியா | 21.10.2019 | 24.01.2020 |
| P.W.14 | திரு. லலித்குமார் | 21.10.2019 | 21.10.2019 |
| P.W.15 | திரு.குமார் | 27.12.2019 | 27.12.2019 |
| P.W.16 | திருமதி.ஜமுனா சிவசங்கரன் | 30.12.2019 | 30.12.2019 |
| P.W.17 | திரு.விஜயன் | 10.02.2020 | 10.02.2020 |
| P.W.18 | திரு. செல்வம் | 17.02.2020 | 17.02.2020 |
| P.W.19 | திரு. கார்த்திகேயன் | 17.02.2020 | 17.02.2020 |
| P.W.20 | திருமதி. ஜெயந்தி | 21.02.2020 | 21.02.2020 |
| P.W.21 | திருமதி.பாக்யசாந்தி | 09.04.2021 | 03.09.2021 |
| P.W.22 | திரு. சார்லஸ் | 09.04.2021 | 17.09.2021 |
| P.W.23 | Tmt..Hemalatha | 09.09.2024 | 09.09.2024 |
| P.W.24 | திரு. கைலாசம் | 09.09.2024 | 09.09.2024 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | P.W.25 | திரு. வேலு | 08.04.2025 | 08.04.2025 |
| Vii | Details of the examination of the accused u/s 313 of the Code | 07.07.2025 | | | |
| Viii | Details of abscondance of an accused and his appearance/production, as the case may be; and | Nil | | | |
| Ix | Grant of stay by superior courts and the results there of | Nil | | | |

குற்றச்சாட்டுகள் எதிரிகள்மீது

கொலை செய்ய குற்றமுறு சதித்திட்டம் தீட்டியகுற்றம் - இ.த.ச. பிரிவு 120(B) – 1 மற்றும் 2 எதிரிகள் மீது.

இரு குழந்தைகளை கொலை செய்த குற்றம் -இ.த.ச.பிரிவு 302 ( 2 எண்ணிக்கைகள்) - முதல் எதிரி மீது.

1வது எதிரியின் கொலைக்குற்றத்திற்கு தூண்டுதலாக இருந்தது - இ.த.ச. பிரிவு 302 உடன் இணைந்த 109(2 எண்ணிக்கைகள்) - 2வது எதிரி மீது..

எதிரிகளின் பதிலுரை

குற்றவாளிகள் இல்லை

நீதிபதியின் முடிவு

முதல் எதிரி இ.த.ச. பிரிவு **120(B)** உடன் இணைந்த இ.த.ச. பிரிவு **302** மற்றும் இ.த.ச. பிரிவு **302 ( 2** எண்ணிக்கைகள்**)** ன்படி குற்றவாளி.

**2**வது எதிரி இ.த.ச. பிரிவு **120(B)** உடன் இணைந்த இ.த.ச. பிரிவு **302** மற்றும் இ.த.ச. பிரிவு **302** உடன் இணைந்த இ.த.ச. பிரிவு **109 ( 2** எண்ணிக்கைகள்**)** ன்படி குற்றவாளி.

நீதிமன்றம் அளித்த தண்டனை அல்லது உத்தரவு

இறுதியில், இவ்வழக்கு முதல் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவு 120(B) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302 மற்றும் இ.த.ச. பிரிவு 302( 2 எண்ணிக்கைகள்) ஆகியவற்றின்படியான குற்றச்சாட்டுகளும் 2ம் எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவு 120(B) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302 மற்றும் இ.த.ச. பிரிவு 302 உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 109 ( 2 எண்ணிக்கைகள்) ஆகியவற்றின் கீழான

குற்றச்சாட்டுகளும் அரசு தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்று கண்டுணர்ந்து இவ்வழக்கு 1 வது எதிரிக்கு இ.த.ச. பிரிவு 120(B) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302 ன்கீழ் ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்கி அவர் இறுதி மூச்சுவரை (சாகும்வரை) சிறையில் இருந்து தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் அத்துடன் ரூ.5000/- அபராதம்விதித்தும் அபராதம் கட்டத்தவறினால் 3 வருடங்கள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தும் 1வது எதிரியின் மீதான இ.த.ச. பிரிவு 302 (2 எண்ணிக்கை) ன் கீழ் ஒவ்வொரு எண்ணிக்கைக்கும் ஒவ்வொரு ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்கியும் அவர் இறுதி மூச்சுவரை (சாகும்வரை) சிறையில் இருந்து தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் அத்துடன் ரூ.5000/- அபராதம் ஒவ்வொரு எண்ணிக்கைக்கும் விதித்தும் அபராதம் கட்டத்தவறினால் 3 வருடங்கள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தும் அதேபோல் 2 வது எதிரிக்கு இ.த.ச. பிரிவு 120(B) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302 ன்கீழ் ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்கி அவர் இறுதி மூச்சுவரை (சாகும்வரை) சிறையில் இருந்து தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் அத்துடன் ரூ.5000/- அபராதம் விதித்தும் அபராதம் கட்டத்தவறினால் 3 வருடங்கள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தும் 2வது எதிரியின் மீதான இ.த.ச. பிரிவு 302 உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 109 (2 எண்ணிக்கை) ன் கீழ் ஒவ்வொரு எண்ணிக்கைக்கும்ஒவ்வொரு ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்கி அவர் இறுதி மூச்சுவரை (சாகும்வரை) சிறையில் இருந்து தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் அத்துடன் ரூ.5000/- அபராதம் ஒவ்வொரு எண்ணிக்கைக்கும் விதித்தும் அபராதம் கட்டத்தவறினால் 3 வருடங்கள்கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தும் தண்டனை தீர்ப்பும், தீர்ப்பு

தண்டனையும் வழங்கப்படுகிறது. முதல் எதிரிக்கு விதிக்கப்பட்ட மொத்த அபராதத்தொகை ரூ.15,000/-. 2வது எதிரிக்கு விதிக்கப்பட்டமொத்த அபராதத்தொகை ரூ.15,000/-. ஆக இவ்வழக்கில் மொத்தமாக விதிக்கப்பட்ட மொத்த அபராதத்தொகை ரூ. 30,000/-.

இவ்வழக்கில் உள்ள வழக்குச்சொத்துக்களான இந்நீதிமன்ற P.I. No. 9/2025ல் உள்ள சா.பொ.1 முதல் சா.பொ.7 ஆகியவற்றை இவ்வழக்கில் மேல்முறையீடு எதுவும் இருப்பின் மேல்முறையீடு முடிந்த பிறகு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது. சா.பொ.8 இருசக்கர வாகனத்தை இவ்வழக்கில் மேல்முறையீடு எதுவும் இருப்பின் மேல்முறையீடு முடிந்த பிறகு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அரசுக்கு ஆதாயம் செய்ய உத்தரவிடப்படுகிறது.

| | |
|---|---|
| அரசு தரப்பு வழக்கறிஞர் | திரு.S.சசிரேகா |
| எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் | M/s.J.B. Solomon Peter Kamal, Doss, R.Kisothkumar and M.A. Praveena- முதல் எதிரிக்கு |
| | M/s. A. K. Somasundaram, P. Raja, E. Kumari, M. Jagadhisan, T. Umamaheshwaran, S.A. Roshan – 2ம் எதிரிக்கு |

இவ்வழக்கு என் முன்னர் **15.07.2025** அன்று முடிவான விசாரணைக்காக வந்தபோது அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திருமதி. எஸ். சசிரேகா அவர்கள் முன்னிலையாகியும் முதல் எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் M/s.J.B. Solomon Peter Kamal, Doss, R.Kisothkumar and M.A. Praveena முன்னிலையாகியும் 2ம் எதிரி தரப்பில் வழக்குரைஞர்கள் M/s. A. K. Somasundaram, P. Raja, E. Kumari, M. Jagadhisan, T. Umamaheshwaran, S.A. Roshan முன்னிலையாகியும் , இருதரப்பு வாதங்கள்

கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்புரை</u>

<u>குற்றப்பத்திரிக்கையின் சுருக்கம்:</u>

1ம் எதிரி கதவு எண்.2 அங்கனீஸ்வரர் கோவில் தெரு, மூன்றாம் கட்டளை சென்னை 129 என்ற விலாசத்தில் தன் கணவர் மற்றும் குழந்தைகளுடன் வசித்து வந்தார். 2ம் எதிரி கங்கையம்மன் கோவில் தெரு, புதுவட்டாரம், குன்றத்துார் சென்னை 69 சேர்ந்தவர். இவ்வழக்கின் புகார்தாரரும் 1ம் எதிரியின் கணவருமான விஜய் க.எண.2, அங்கனீஸ்வரர் கோவில் தெரு, மூன்றாம் கட்டளை, சென்னை 128 என்ற முகவரியில் வசித்து வருகிறார்.

1ம் எதிரி சாட்சி விஜயை 08.01.2011 அன்று பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் செய்து கொண்டார். இவர்கள் திருமணம் காதல் மற்றும் பெரியோர்களால் நிச்சயித்த திருமணமாகும். இந்த சட்டப்பூர்வமான திருமணத்தின்படி அவர்களுக்கு அஜய் என்ற 6 வயது மகனும் (1ம் எதிரியால் கொலை செய்யப்பட்டவர்) கார்னிகா என்ற 4 வயது மகளும் (1ம் எதிரியால் கொலை செய்யப்பட்டவர்) இருந்தனர்.

இந்நிலையில் 1ம் எதிரி, 2ம் எதிரியிடம் இச்சம்பவத்திற்கு இரண்டு மாதத்திற்கு முன்பிருந்து சட்டவிரோதமான முறையில் கள்ள உறவு கொண்டிருந்தார். சாட்சி விஜய்

இல்லாத சமயங்களில் 2ம் எதிரி 1ம் எதிரி வீட்டிற்கு அடிக்கடி சென்றுள்ளார். இச்சம்பவத்திற்கு 20 நாட்களுக்கு முன்பு இது குறித்து, சந்தேகம் கொண்ட சாட்சி விஜய் 1ம் எதிரியை கண்டித்துள்ளார். அதனால் கோபித்த கொண்ட 1ம் எதிரி 2ம் எதிரியின் வீட்டிற்கு சென்று தங்கியுள்ளார். பின்னர், இச்சம்பவத்தில் கொலையுண்ட குழந்தை அஜய் 2ம் எதிரியின் வீட்டை அடையாளம் காட்ட சாட்சிகள் விஜய், 1ம் எதிரியின் தம்பி மணிகண்டபிரசன்னா மற்றும் 1ம் எதிரியின் தந்தையான சௌந்தர்ராஜன் ஆகியோர் 2ம் எதிரியின் வீட்டிற்குச் சென்று 1ம் எதிரியை சமாதானப்படுத்தி வீட்டிற்கு அழைத்துச் சென்றுள்ளார்கள்.

மேற்கண்ட முறையில் 1ம் எதிரிக்கு, 2ம் எதிரி தங்கள் கள்ள உறவிற்கு இடைஞ்சலாக இருந்த குழந்தைகள் அஜய் மற்றும் கார்னிகாவிற்கு மேற்கண்ட வேதிப்பொருட்கள் கலந்த மாத்திரைபனை பாலில் கலந்து அருந்தச் செய்யுமாறு 1ம் எதிரியை துாண்டுதல் செய்ததின் பேரில் 1ம் எதிரி மேற்கண்ட முறையில் குழந்தைகளை கொலை செய்துள்ளார். 1ம் எதிரி கொலை செய்ய 2ம் எதிரி மேற்கண்ட விதத்தில் உடந்தையாக செயல்பட்ட காரணத்தினால் 2ம் எதிரி 120(பி) உடன்/இணைந்த பிரிவு 302/109 இந்திய தண்டனை சட்டப்படி (2 எண்ணிக்கை) குற்றம் புரிந்தவர்களாகிறார்கள்.

எனவே, மேற்கண்ட சங்கதிகளின் படி 1ம் மற்றும் 2 ம் எதிரிகள் 120(பி) , 302 (2எண்ணிக்கை) உடன் இணைந்த 120(பி) /109 இந்திய தண்டனை சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்திருப்பதாக குன்றத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) குன்றத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் மேற்படி காவல் நிலைய குற்ற எண். 1101/2018ல் 1 மற்றும் 2 எதிரிகள் மீது தாக்கல் செய்த இறுதி அறிக்கையை திருப்பெரும்புதூர் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் பெற்று தனது நீதிமன்ற கோப்பில் முதல்நிலைப் பதிவேட்டு வழக்கு எண். 40/2018 வழக்காக எடுத்துக்கொண்டது. மேற்படி நீதித்துறை நடுவர் பிறப்பித்த உத்தரவின்படி 1 மற்றும் 2 எதிரிகள் மேற்படி நடுவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்கள். 1 மற்றும் 2 எதிரிகள் முன்னிலையானதும் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிகளுக்கு கு.வி.மு.ச. பிரிவு 207ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3) 1 மற்றும் 2 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 120(பி), 302 மற்றும் 302 உடன் இணைந்த 109 ஆகியவற்றின் கீழான குற்றங்கள் முற்றிலும் அமர்வு நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்படத்தக்கது என்று நடுவர் நீதிமன்றம் கருதி, அவ்வாறே முடிவு செய்து அமர்வு நீதிமன்ற விசாரணைக்காக கு.வி.மு.ச. பிரிவு 209ன் கீழ் நடுவர் நீதிமன்றம் காஞ்சிபுரம் மாவட்ட நீதிமன்றம் எண்.2க்கு விசாரணைக்காக அனுப்பி வைத்தது. முதல்நிலை பதிவேட்டு வழக்கு கோப்பை மாவட்ட நீதிமன்றம் எண்.2

பெற்று பரிசீலனை செய்து தனது நீதிமன்ற கோப்பில் அமர்வு வழக்கு எண்.77/2018 வழக்காக எடுத்து சட்டப்படியான விசாரணைக்கு செங்கல்பட்டு மகளிர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தது. 1 மற்றும் 2 எதிரிகள் செங்கல்பட்டு மகளிர் நீதிமன்றத்தில் முன்னிலையானார்கள்.

4) 1 மற்றும் 2 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றசாட்டுகள் குறித்து 1 மற்றும் 2 எதிரிகளிடம் வினவப்பட்டபோது அதனை 1 மற்றும் 2 எதிரிகள் மறுத்தனர். அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களில் இருந்து முதல் எதிரி இ.த.ச. பிரிவுகள் 120(பி) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302 மற்றும் இ.த.ச. 302 ( 2 எண்ணிக்கைகள்)கீழும் 2 வது எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 120(பி) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302 மற்றும் 302 உடன் இணைந்த 109 ( 2 எண்ணிக்கைகள்) ன் கீழும் ஆகியவற்றின் கீழான குற்றம் புரிந்துள்ளார்கள் என்பதற்கு மேலெழுந்தவாரியான ஆதாரங்கள் இருப்பதாக தெரிய வந்ததால் முதல் எதிரிமீது இ.த.ச. பிரிவுகள் 120(பி) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302 மற்றும் இ.த.ச. 302 ( 2 எண்ணிக்கைகள்)கீழும் 2 வது எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 120(பி) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302 மற்றும் 302 உடன் இணைந்த 109 ( 2 எண்ணிக்கைகள்) ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு எதிரிகளிடம் படித்து காண்பித்து விளக்கிக்கூறப்பட்டு 1 மற்றும் 2 எதிரிகளிடம் வினவப்பட்டது. மேற்படி குற்றச்சாட்டுகளை 1 மற்றும் 2 எதிரிகள் மறுத்தனர். எனவே வழக்கு முழுமையான விசாரணைக்காக உத்தரவிடப்பட்டது.

**5**) <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் வழக்கு விவரங்கள் பின்வருமாறு</u>

அசா-1 திரு.விஜய் தற்போது நெ.2, அக்னீஸ்வரன் கோவில் தெரு, மூன்றாம் கட்டளை, சென்னை 128 என்ற முகவரியில் வசித்து வருகிறார். வங்கிகடன் மீடியேட்டராக பணியாற்றுகிறார். அசா-1க்கும் 1வது எதிரி அபிராமிக்கும். 2011, செப்டம்பர் 8ம் தேதி திருமணம் நடந்தது. அவர்கட்கு 6 வயதுடைய அஜய் என்ற மகனும் 3 வயதுடைய கார்னிகா என்ற பெண் குழந்தையும் இருந்தார்கள். அஜய் குன்றத்தூரில் லிட்டில் பிளவர்மெட்ரிக்குலேஷன் பள்ளியில் முதலாம் வகுப்பு படித்து வந்தார், கார்னிகா வீட்டில் இருந்தார்.

அ**.**சா**-4** திரு. செந்தில், தற்போது நெ.4/55, ராகவேந்திரா நகர், சிக்கராயபுரம், கோவூர், சென்னை என்ற முகவரியில் வசித்து வருகிறார். மணி மெடிக்கல் என்ற பெயரில் மெடிக்கல் ஷாப் நடத்தி வருகிறார். கடை முகவரி நெ.4/323ஏ, குன்றத்தூர் பிரதான சாலை, கோவூர், சென்னை 128 ஆகும். அசா-4 செந்தில் கடையை கடந்த 6 வருடமாக நடத்தி வருகிறார். எதிரிகளில் அபிராமியை அசா-4க்கு தெரியும். 30.08.2018 அன்று மதியத்திற்கு மேல், நேரம் சரியாக ஞாபகம் இல்லை, அபிராமி மருந்து சீட்டு கொண்டு வந்து மருந்து கேட்டார். அசா-4 அந்த சீட்டை வாங்கி பார்த்து, அதில் எழுதியிருந்த மருந்து விவரத்தை பார்த்துள்ளார். Trapic-mf 10 மாத்திரையும், Becalm 0.5mg 8 மாத்திரையும், Becosules 5 மாத்திரையும் அந்த மருந்து சீட்டில் எழுதப்பட்டிருந்தது. மேற்கண்ட 3 மாத்திரைகளையும் எடுத்து கொடுத்துவிட்டு

அதற்கான ரூபாய் 298.80 பைசா வாங்கி கொண்டு மருந்தையும் மருந்துக்கு உண்டான சீட்டையும் திருப்பி கொடுத்துவிட்டார்.

அ.சா-**2-** திருமதி கவிதா ராமக்கிருஷ்ணன், தற்போது நெ.24, குன்றத்தூர் பிரதான சாலை என்ற முகவரியில் குடியிருந்து வருகிறார். எண்.2, அக்னீஸ்வரன் கோவில் தெரு, மூன்றாம்கட்டளை என்ற முகவரியில் இதற்கு முன்பு வசித்து வந்தார். எதிரிகள் இருவரையும் அவருக்கு தெரியும். 30.08.2018 அன்று சுமார் மாலை 5.30 மணியிலிருந்து 6 மணிக்குள்ளாக அவர் குடியிருக்கும் வீட்டிற்கு மேல் மாடியில் குடியிருந்த எதிரி அபிராமி முதல் மாடியிலிருந்து இறங்கி கீழே வந்தார். அவருக்கு அந்த சமயத்தில் கையில் அடிபட்டு கட்டு போட்ட நிலையில் இருந்தார். அப்போது 2ம் எதிரி அசா-2 விடம் உங்கள் கையில் உள்ள காயம் எப்படி உள்ளது என்று கேட்டார். அசா-2 அதற்கு நன்றாக இருக்கிறது பரவாயில்லை என்று சொல்லியுள்ளார். அந்த சமயத்தில் 2ம் எதிரியும் அபிராமியும் அங்கிருந்து அபிராமியின் வண்டியில் புறப்பட்டார்கள் அபிராமி ஓட்டினார், பின்னால் இரண்டாம் எதிரி உட்கார்ந்து சென்றார், அந்த வண்டியில் உட்கார்ந்து கிளம்புவதற்கு முன்பாக 2வது எதிரி முதல் எதிரியிடம் தான் சொன்னதை போல மாத்திரைகளை கலந்து கொடுத்து முடித்துவிட்டு தனக்கு தகவல் சொல் என சொன்னார், அதை அசா-2 கேட்டுள்ளார் அப்போது அசா-2 அபிராமியிடம் ஏன் என்ன ஆச்சு எதற்காக மாத்திரை கலந்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுள்ளார், அதற்கு அபிராமி தன்னுடைய குழந்தைகளுக்கு உடல்நிலை சரியில்லை அதற்காக மருந்து கொடுக்க வேண்டும் என்று சொல்லியுள்ளார் இந்த நிகழ்வு நடப்பதற்கு 2 மாதத்திற்கு முன்புதான் அபிராமி அசா-2க்கு பழக்கம் ஆனார். ஆடி மாதம் கோலிலுக்கு

போவதற்காக அபிராமியின் இரண்டு சக்கர மோட்டார் வாகனத்தை இரவல் கேட்டிருந்ததால் அசா-2க்கு அவர் பழக்கம். அசா-2ன் கூட அபிராமி 2 முறை கோலிலுக்கு வந்திருக்கிறார் அவ்வாறு போய் வரும்போது அசா-2வும் அபிராமியும் பேசிக்கொண்டதால் அசா-2க்கு அபிராமி பழக்கமானார். அவ்வாறு பழக்கம் ஏற்பட்ட பிறகு 2 முறை அபிராமியின் வீட்டிற்கு 2ம் எதிரி வந்து சென்றார் அதை அசா-2 பார்த்துள்ளார், அபிராமியிடம் அசா-2 அவர் யார் என்று கேட்க, அபிராமி அசா-2விடம் தன் கணவன் மூலம் 2ம் எதிரி தனக்கு நண்பர் என்றும் குடும்ப நண்பர் என்றும் சொல்லியுள்ளார். அசா-2 இரண்டு முறை அந்த சமயத்தில் அபிராமியிடம் உனக்கு 2 குழந்தைகள் இருக்கிறது. கணவர் இல்லாத நேரத்தில் 2ம் எதிரி வந்து போகக்கூடாது என கூறியுள்ளார் கொலை சம்பவம் நடப்பதற்கு 15 நாட்களுக்கு முன்பு அபிராமி காணாமல் போய்விட்டார். அபிராமியின் கணவர் விஜய் அப்போது தேடியுள்ளார், அவர்களிடமும் கேட்டுள்ளார். அந்த சமயத்தில் 1ம் எதிரி 2ம் எதிரியின் வீட்டில் ஒரு இரவும் ஒரு பகலும் தங்கியிருந்தார் அவரை போய் விஜயும் அபிராமியின் அப்பாவும் தம்பியும் பேசி 2 நாட்கள் கழித்து விஜயின் வீட்டிற்கு கூட்டி வந்தார்கள். அதன்பிறகு அபிராமியை கூப்பிட்டு அசா-2 இவ்வாறு நடக்காதே என்று அறிவுறித்தியுள்ளார். அதிலிருந்து அபிராமி அசா-2விடம் சரியாக பேசுவது கிடையாது. அதன்பிறகு 30.08.2018 அன்று தான் மருந்து மாத்திரை கலந்து கொடுக்கும்படி 1ம் எதிரியிடம் 2 எதிரி சொன்னதை அசா-2 கேட்ட நிகழ்வு நடந்த நாளாகும்.

அ.சா.1 விஜய் 30.08.2018 அன்று இரவு அசா-1 பணி முடித்து வீட்டிற்கு வந்த பிறகு அசா-1 விஜய்யின் மனைவி அபிராமி பாத்திரத்தில் பால் கலந்து எடுத்து வந்து இரண்டு குழந்தைகளுக்கும் விஜய்க்கும் கொடுத்தார். விஜய் அந்த பாலை குடித்தார் அது கசப்பாக இருக்கிறது என்று சொல்லியுள்ளார். அதற்கு சர்க்கரை போட மறந்துவிட்டேன் போட்டு தருகிறேன் என்றும் எதிரி சொன்னதால் விஜய் தனக்கு பால் வேண்டாம் தனக்கு டயர்டாக இருக்கிறது தான் தூங்க போகிறேன் என்று சொல்லிலிட்டு தூங்க போய்விட்டார்.

அடுத்த நாள்காலை 31.08.2018 அன்று காலை விஜய் எழுவதற்கு தாமதமாகி பகல் 12 மணியளவில் எழுந்தார். அதன்பிறகு விஜய் அவசர அவசரமாக குளித்துவிட்டு தன் அலுவலகத்திற்கு போவதற்கு தயாரானார். அப்போது தன் மனைவியிடம் சமைக்கவில்லையா என்று கேட்டார். அப்போது தன் மனைவி தானும் தன் குழந்தைகளும் பெரியபனிச்சேரியில் உள்ள தன்னுடைய அம்மாவின் வீட்டிற்கு போக இருப்பதாகவும் அங்கு போய் சாப்பிட்டுக்கொள்கிறோம் என்றும் சொன்னார். அசா-1 விஜய் பிறகு பாப்பா என்ன செய்கிறது என்று கேட்டார், அதற்கு விஜய்யின் மனைவி பாப்பா தூங்கி கொண்டிருக்கிறது என்று சொன்னாள் வழக்கமாக விஜய் அலுவலகத்திற்கு செல்வதற்கு முன்பாக தன் மகளுக்கு முத்தம் கொடுத்துவிட்டு செல்வேன், அதேபோல் அன்றும் தன் மகளுக்கு முத்தம் கொடுப்பதற்காக போனார். அப்போது விஜய்யின் கையை அபிராமி பிடித்து இழுத்து அவள் இரவெல்லாம் இருமிக் கொண்டிருந்தாள் சரியாக தூங்கவில்லை அதனால் அவளை தொந்தரவு செய்ய வேண்டாம் என்று சொன்னாள். அந்த சமயத்தில் விஜய்யின் மகன் அஜய் உறாலில் உள்ள

டீவியை பார்த்து கொண்டிருந்தான். விஜய் அவனை பார்த்து போய்ட்டு வரேன்பா, பாய் என்று சொல்லிலிட்டு புறப்பட்டு அலுவலகம் போய்விட்டார்.

மதியம் பிற்பகல் 3.30 மணியளவில் அபிராமி விஜய்க்கு போன் செய்து, பாப்பா எழுந்துவிட்டாள், தாங்கள் மூவரும் பெரியபனிச்சேரிக்கு அம்மா வீட்டிற்கு போகிறோம், இன்று உங்களுக்கு பிறந்தநாள், அதனால் நீங்கள் அங்கு வந்துவிடுங்கள் என்று சொன்னாள். அதன்பிறகு விஜய் அலுவலகத்தில் வேலையை பார்க்க ஆரம்பித்தார்.

அ.சா**--14** திரு. லலித்குமார் தற்போது நெ.8/1, பள்ளத்தெரு, குன்றத்தூர், சென்னை 69 என்ற முகவரியில் குடியிருந்து வருகிறார். அதே முகவரியில் முன்புறத்தில் விஷால் ஜூவல்லரி என்ற கடையை கடந்த 25 ஆண்டுகளாக நடத்தி வருகிறார். அந்த கட்டிடத்திற்கு பின்புறத்தில் அவர் வீடும் முன்புறத்தில் கடையும் உள்ளது. 31.08.2018 அன்று மதியம் 1 மணியளவில் ஆஜர் எதிரி அபிராமி அவர் கடைக்கு வந்து செயினை அடமானம் வைப்பதாக சொன்னார், தான் அந்த நகையை வாங்கி கொண்டு ரூபாய் 12 ஆயிரம் தான் வரும் என்று சொன்னார், அதற்கு உடல்நிலை சரியில்லை அதனால் அவர் தனக்கு கூடுதலாக பணம் தேவை என்றும், அந்த நகையை விலைக்கு எடுத்து கொள்ளுங்கள் என்றும் சொன்னார். தான் அந்த நகையை ரூபாய் 17ஆயிரம் விலைமதித்து ரூபாய் 17ஆயிரம் ரொக்கத்தை அபிராமிக்கு கொடுத்துவிட்டு நகையை தான் கிரையத்திற்கு வாங்கி கொண்டார்.

அ.சா.1 விஜய் 31.08.2018ம் தேதி அன்று முழுவதும் பகல் மற்றும் இரவு தன் வேலையை முடித்துவிட்டு 01.09.2018 அன்று காலையில் வீட்டிற்கு

அலுவலகத்திலிருந்து திரும்பி வந்தார். அப்போது விஜய் அபிராமிக்கு போன் செய்துள்ளார். 4, 5 முறை அழைத்துள்ளார், நாட்ரீச்சபில் என்று வந்தது. அதனால் அபிராமியின் தம்பி பிரசன்னாமணிகண்டனுக்கு போன் செய்ததும் அவர் எடுத்தார், அவரிடம் அபிராமியிடம் போனை கொடுக்கும்படி சொல்லியுள்ளார். அப்போது அவர் அக்கா அங்கு கிடையாது என்று விஜய்யிடம் சொல்லியுள்ளார் குழந்தைகள் இருக்கிறார்களா என்று கேட்டுள்ளார். அதற்குகுழந்தைகளும் இங்குகிடையாது மாமா என்று சொல்லியுள்ளார். அதனால் விஜய் பெரியபனிச்சேரியில் உள்ள அவர்கள் வீட்டிற்கு போனார். அங்கு போய்விட்டு விஜய்யும் பிரசன்னா மணிகண்டனும் புறப்பட்டு குன்றத்தூரில் உள்ள மீனாட்சி சுந்தரம் வீட்டிற்கு போனார்கள். எதனால் விஜய் அங்கு போனார் என்றால் இந்த சம்பவம் நடந்த 20 நாட்களுக்கு முன்பு அபிராமி மீனாட்சி சுந்தரம் வீட்டில் தங்கியிருந்தாள். அபிராமி எங்கு தங்கியிருக்கிறார் என்று தெரியாமல் விஜய் இருந்துள்ளார், அந்த சமயத்தில் விஜய்யின் மகன் அஜய், விஜய்யிடம் அம்மா அடிக்கடி குன்றத்தூரில் உள்ள ஒரு அங்கில் வீட்டிற்கு போய் வருவாங்க என்று சொல்லியுள்ளார். விஜய் அஜயிடம் அந்த வீடு தெரியுமா என்று கேட்டுள்ளார், அஜய் தெரியும் என்று சொல்லி விஜய் அஜயை அழைத்துகொண்டு, அபிராமியின் அப்பா சௌந்தரராஜன், அபிராமியின் தம்பி பிரசன்னாமணிகண்டன், விஜய் எல்லோரும் குன்றத்தூரில் உள்ள மீனாட்சி சுந்தரம் வீட்டிற்கு போனார்கள், அவர்கள் போன அந்த சமயத்தில் மீனாட்சி சுந்தரம் வீட்டில் அபிராமி இருந்தாள். விஜய் அபிராமியை தன் வீட்டிற்கு வரும்படி அழைத்துள்ளார். முதலில் வர மறுத்த அபிராமியை , அதன்பிறகு அபிராமியின் அப்பா, தம்பி எல்லோரும் பேசி சமாதானம் செய்து அபிராமியை

பெரியபனிச்சேரியில் உள்ள அபிராமியின் அம்மா வீட்டிற்கு கூட்டி சென்றார்கள். விஜய் தன் வீட்டிற்கு வந்துவிட்டார். பிறகு 4 நாட்கள் கழித்து அபிராமியும் குழந்தைகளும் விஜய் வீட்டிற்கு வந்துவிட்டார்கள். அன்றிலிருந்து அபிராமி குழந்தைகளிடம் சரியாக பேசாமாலும் சிடு சிடு என எரிந்து விழுவதுமாக இருந்தாள். அதனால் தான் 1.9.2018 அன்று விஜய்யும் பிரசன்னா மணிகண்டனும் குன்றத்தூரில் உள்ள மீனாட்சி சுந்தரம் வீட்டிற்கு போனார்கள், அங்கு போய் பார்த்த போது அபிராமி அங்கு இல்லை. அதனால் மூன்றாம் கட்டளையில் உள்ள விஜய்யின் வீட்டிற்கு வந்துள்ளார்கள். அப்போது விஜய்யின் வீட்டின் கதவு வெளியே பூட்டுபோட்டு பூட்டாமல் தாழ்ப்பாள் மட்டும் போட்டு பூட்டிய நிலையில் இருந்தது. விஜய்யும் பிரசன்னாவும் அந்த தாழ்ப்பாளை திறந்து கொண்டு வீட்டிற்கு போனார்கள். உள்ளே போனவுடன் பிரசன்னா மாமா பசங்க இரண்டுபேரும் கட்டிலில் தூங்கி கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல விஜய் உள்ளே போய் பார்த்துள்ளார், அப்போது முகம் மட்டும் வெளியே தெரியக்கூடிய நிலையில் உடல் முழுவதும் பெட்ஷீட் போட்டு போர்த்திய நிலையில் தூங்குவது மாதிரி குழந்தைகள் இருந்தார்கள். அப்போது விஜய் தன் மகன் அஜயின் கன்னத்தை அஜய், அஜய் என்று தட்டியுள்ளார், அவனிடம் எந்த ஒரு ரியாக்ஷனும் இல்லை. பெட்ஷிட்டை விலக்கிவிட்டு அஜயை தூக்கியபோது, அஜயின் கழுத்து தொங்கியது. அஜய்யின் உதட்டின் வலது பக்கத்தில் நுரைபோல் காய்ந்த நிலையில் இருந்தது. பக்கத்தில் இருந்த மகளை பார்க்க அவளும் பேச்சு மூச்சு இல்லாத நிலையில் கிடந்தார். விஜய்யின் மகன் அஜய்க்கு மார்பில் கீரல்மாதிரி இருந்தது, மார்பு, வயிறு ஆகிய பகுதிகளில் நீலம் பதிந்து கருப்பாக காணப்பட்டது. கார்னிகாவிற்கு கழுத்து அழுத்தியதால் ஏற்படக்கூடிய கருப்பு நிறம்

இருந்தது, மார்பு, வயிற்று பகுதிகளில் நீலநிறம் பதிந்து காணப்பட்டது. விஜய்யின் அழுகை சத்தம் கேட்டு அக்கம் பக்கம் உள்ளவர்கள் வந்துவிட்டார்கள் அதன்பிறகு விஜய்க்கு என்ன செய்வது என்று தெரியாமல் குன்றத்தூர் காவல்நிலையம் சென்று புகார் எழுதி கொடுத்தார். புகாரில் உள்ள கையொப்பம் விஜய்யுடையதுதான், அதில் உள்ள விவரங்கள் விஜய் எழுதி கொடுத்த விவரங்கள் தான் அந்த புகார் அ.த.சா.ஆ 1.

அ.சா.2 திருமதி. கவிதா இராமகிருஷ்ணன். 31.08.2018 அன்று அசா-2 தன் வீட்டில் இல்லை. அன்று அசா-2 வடபழனியில் புத்தூர் கட்டு போடுவதற்காக வடபழனிக்கு போய்விட்டு வந்தார், அன்று பகலில் நடந்த விவரம் அ.சா-2க்கு தெரியாது அன்று இரவு 8 மணியளவில் தான் தன் வீட்டிற்கு வந்துள்ளார். 01.09.2018 அன்று காலை 5.30 மணியளவில் மேல் மாடியில் உள்ள விஜயின் வீட்டில் அழுகின்ற சத்தம் கேட்டு அசா-2ம் அவரின் வீட்டின் உரிமையாளர் முத்து, சுமதி ஆகியோர்கள் மேல்மாடிக்கு போய்பார்த்தார்கள் அப்போது குழந்தைகள் கார்னிகாவும், அஜய்யும் இறந்து போய்கிடந்தார்கள். விஜய் காவல் நிலையம் போய் புகார் கொடுத்துவிட்டு வந்தார். போலிசார் வந்து அசா-2ஐ வீட்டில் வைத்து விசாரித்தார்கள். அசா-2 விஜயிடம் உங்களுக்குள் என்ன நடந்தது என்று கேட்டுள்ளார் அப்போது விஜய் முந்தாநாள் பாலில் ஏதோ கலந்து அஜய், கார்னிகாவிற்கு கொடுத்துவிட்டு தனக்கும் கொடுத்தார் என்றும் அந்த பாலை தான் குடித்தபோது கசப்பாக இருக்கிறது என்று தன் மனைவியிடம் சொன்னபோது பூஸ்டு கம்மியா இருக்கிறது, போட்டு தருகிறேன் என்று சொல்லி வாங்கிசென்றாள், விஜய் தனக்கு பால் வேண்டாம் என்று சொல்லிவிட்டதாகவும், விஜய்

குழந்தை கார்னிகாவிற்கு தினமும் கொடுப்பது போல் போய் முத்தம் கொடுக்க போனபோது அபிராமி வேண்டாம் குழந்தை தூங்கிவிட்டது என்று சொன்னார் என்றும் சொன்னார். விஜயிடம் நீங்கள் வெளியே சாப்பிட்டு கொள்ளுங்கள் என்று அபிராமி சொன்னதாகவும் சொன்னார். அன்று விஜய்க்கு பிறந்த நாள். அதனால் விஜயை தன் அம்மா வீட்டிற்கு வரும்படி அபிராமி விஜயிடம் சொன்னதாக சொன்னார் 31.08.2018 அன்று இரவு பணி முடித்து திரும்பும்போது நேரமாகிவிட்டதால் அபிராமியின் அம்மா வீட்டிற்கு விஜய் போனார் அங்கு அபிராமி இல்லை. அங்கிருந்து அபிராமியின் தம்பியை கூட்டி கொண்டு விஜய் தாங்கள் குடியிருக்கும் வீட்டிற்கு வந்தார். அங்கு வந்து பார்த்தபோது அவர் வீட்டின் கதவு வெளியே தாழ்ப்பாள் மட்டும் போடப்பட்ட நிலையில் இருந்தது. அவர் உள்ளே போய் பார்க்கும்போது குழந்தைகள் இருவரும் இறந்த நிலையில் இருந்தார்கள். அப்போது விஜய் அழுது கொண்டிருந்த போதுதான், தாங்கள் அங்கு போனார்கள்.

அ.சா- **22:-** திரு.சார்லஸ் தற்போது இ2, இராயப்பேட்டை காவல்நிலையத்தில் சட்டம் ஒழுங்கு பிரிவில் ஆய்வாளராக பணியாற்றி வருகிறார். அவர் கடந்த 01.09.2018 அன்று டி 13, குன்றத்தூர் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்த போது, மூன்றாம் கட்டளை அக்னீஸ்வரன் கோவில் தெருவை சேர்ந்த திரு.விஜய் என்பவர் நிலையம் ஆஜராகி காலை சுமார் 5.30 அளவில் கொடுத்த புகாரினை பெற்று டி.13, குன்றத்தூர் காவல்நிலைய குற்ற எண் 1101/2018, சட்டப்பிரிவு 302 (2 எண்ணிக்கை) இதச வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார்

செய்தார். அந்த புகார் ஏற்கனவே அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அவர் பதிவு செய்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.23. பின்னர் கொடுத்த புகாரினையும், முதல் தகவல் அறிக்கையின் அசலையும் துரித தபால் மூலம் கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருபெரும்புத்தூர் அவர்களுக்கும் மற்றும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தார். மேற்படி வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே மேற்படி சம்பவ இடமான நெ.2, அக்னீஸ்வரன் கோவில் தெரு, மூன்றாம் கட்டளை, குன்றத்தூர், சென்னை என்ற இடத்திற்கு சென்று காலை சமார் 6.30 மணிக்கு சாட்சிகள் முத்து மற்றும் பஞ்சாட்சரம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடம் குறித்து பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். மேலும் சாட்சிகள் முத்து மற்றும் பஞ்சாட்சரம் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பார்வை மகஜர் அ.சா.ஆ2. அவர் தயாரித்த மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.24. பிறகு அன்றையதினமே காலை 7 மணி முதல் 8 மணி வரை சம்பவ இடத்தில் வைத்து பஞ்சாயத்தார்கள் கன்னியப்பன், ரவிசந்திரன், மணி, சௌந்தராஜன், சசிகுமார் ஆகியோர்கள் முன்னிலையில் இறந்து போன சிறுவன் அஜய், வயது 6, கார்னிக்கா, வயது 4 இருவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தார் அஜயின் பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ25 மற்றும் கார்னிகாவின் பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ26.

அ.சா**-3-** திரு. பூபதி, தற்போது நெ.6, அக்னீஸ்வரன் கோவில் தெரு, மூன்றாம் கட்டளை என்ற முகவரியில் குடியிருந்து வருகிறார். அவர் லோடு ஆட்டோ வைத்து ஓட்டி வருகிறார். 1ம் எதிரியை அவருக்கு தெரியும், இரண்டாம் எதிரியை அவருக்குத் தெரியாது. 01.09.2018 அன்று விடியற்காலை 5 மணியளவில் வெளியூர் லோடிற்கு போவதற்காக புறப்பட்டு கொண்டிருந்தார். அப்போது விஜய் வீட்டில் அழுகின்ற சத்தம் கேட்டது, அசா-3 வெளியே வந்து பார்த்துள்ளார். அசா-3 விஜய் வீட்டிற்கு போய் என்ன என்று கேட்டபோது, அவரது குழந்தைகள் இரண்டு பேரும் வாயில் நுரை தள்ளிய நிலையில் இறந்து போய் கிடந்தனர் என்று சொன்னார். என்ன என்று கேட்டுள்ளார். 30.08.2018 அன்று பாத்திரத்தில் பால் கலக்கி அபிராமி விஜய்க்கும் குழந்தைகளுக்கும் கொடுத்தார்கள். அப்போது விஜய் பாலை குடித்து பார்த்து கசப்பாக இருப்பதாக சொல்லி திருப்பி கொடுத்துவிட்டார், சர்க்கரை போட்டு மீண்டும் கொண்டுவந்து கொடுத்த போது, விஜய் வேண்டாம் என்று சொல்லிவிட்டார் என்ற விவரங்களை சொல்லியுள்ளார். 31.08.2018 அன்று பகல் 1 மணியளவில் தான் வேலைக்கு புறப்பட்டு கொண்டிருந்தேன் என்றும் தன் மகள் கார்னிகாவிற்கு முத்தம் கொடுத்துவிட்டு போகலாம் என்று போனபோது தன்னை தன் மனைவி தடுத்துவிட்டதாகவும் அதன்பிறகு தான் வேலைக்கு கிளம்பி போய்விட்டதாக சொன்னார். 1.09.2018 அன்று அதிகாலை வந்து பார்த்தபோது குழந்தைகள் இறந்துகிடந்தது என்று சொன்னார். அதன்பிறகு போலிசார் அசா-3ன் வீட்டருகே வந்து அசா-3ஐ விசாரித்துள்ளார்கள்.

அ.சா--**5** திரு. முத்து, தற்போது நெ.2, அக்னீஸ்வரன் கோவில் தெரு, மூன்றாம் கட்டளை என்ற முகவரியில் குடியிருந்து வருகிறார். கடந்த 6 வருடத்திற்கு முன்பு 3 மாத கைக்குழந்தையுடன் அபிராமி அவருடைய வீட்டிற்கு வாடகைக்கு வந்தார். 01.09.2018 அன்று அதிகாலை 5 மணிக்கு அபிராமி வீட்டில் அழுகை சத்தம் கேட்டது. அசா-5ம் அவரின் மனைவியும் போய் பார்த்துள்ளார்கள். விஜய் படபடப்பாக இருந்துள்ளார். குழந்தைகள் இரண்டும் நுரைதள்ளிய நிலையில் இருந்தது, என்னப்பா என்று கேட்டுள்ளார். அபிராமி எங்கே என்றும் கேட்டுள்ளார். அதற்கு விஜய் அபிராமி குழந்தைகளுக்கு ஏதோ கலந்து கொடுத்திருக்கிறாள் என்று சொல்லி விட்டு புகார் கொடுக்க போவதாக சொல்லிவிட்டு போனார். அரைமணி நேரம் கழித்து காவல் நிலையத்திலிருந்து ஆய்வாளர் வந்தார். சம்பவ இடத்தை பார்வையிட்டார்கள். வரைபடம் போட்டார்கள். அவரிடம் ஒரு கையெழுத்து வாங்கினர். அவரிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அவருடையதுதான். அந்த பார்வை மகஜர் அ.த.சா.ஆ2.

அ.சா--**6** திரு. சரவணகுமார், தற்போது நெ.2/433, 3வது பிரதான சாலை, கமலாநகர், நன்மங்கலம், கோவிலம்பாக்கம், சென்னை என்ற முகவரியில் குடியிருந்து வருகிறார். அவர் பிறந்த குழந்தைகளை புகைப்படம் எடுக்கும் தொழில் செய்து வருகிறார். எதிரிகள் இருவரையும் தெரியும். முதல் எதிரி அபிராமி அவருடைய தாய் மாமா செல்வத்தின் மகள். 01.09.2018 அன்று காலை 6 மணிக்கு அபிராமியின் கணவர் விஜய் அவருக்கு போன் செய்து குழந்தைகள் இருவருக்கும் மாத்திரை கொடுத்து

அபிராமி கொலை செய்துவிட்டார் என்று சொன்னார். அசா-6 அந்த போனை கட் செய்துவிட்டு தன் அம்மா, அப்பா, உறவினருக்கு தகவல் சொல்லிலிட்டு மூன்றாம் கட்டளையில் உள்ள விஜயின் வீட்டிற்கு புறப்பட்டு சென்றார். அசா-6 போனபிறகு இரண்டு குழந்தைகளின் பிரேதத்தையும் போலிசார் ஆம்புலென்சில் எடுத்து சென்றார்கள். குரோம்பேட்டை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு பார்மாலிட்டி முடித்தபிறகு இரண்டு குழந்தைகளின் பிரேதத்தையும் விஜயிடமும் தன்னிடமும் தன் மாமா கார்த்திகேயனிடமும் ஒப்படைத்தார்கள். அந்த பிரேதங்கள் இரண்டையும் அபிராமியின் அப்பா இருக்கும் செல்வம் வீட்டிற்கு எடுத்து சென்று நல்லடக்கம் செய்தார்கள். அன்று இரவு விஜய் தனியாக இருக்க பயந்த காரணத்தால் அவருடன் அசா-6ம், கார்த்திகேயனும் மூன்றாம் கட்டளையில் உள்ள விஜயின் வீட்டிற்கு போய் விஜய்க்கு துணையாக தங்கினார்கள்.

அ.சா-**10** திரு. கார்த்திகேயன் தற்போது நெ.342, கோவிலம்பாக்கம், 200அடி ரோடு, சுண்ணாம்பு கொளத்தூர் என்ற முகவரியில் வசித்து வருகிறார். அவர் ஓலா கேப் வைத்து நடத்தி வருகிறார். எதிரிகளில் அவருக்கு 1ம் எதிரி அபிராமியை தெரியும், அவர் அசா-10ன் அண்ணன் சௌந்தராஜனின் மகள் ஆவார். 01.09.2018 அன்று காலையில் 6.45 மணியிலிருந்து 7 மணிக்குள்ளாக தன் அக்கா மகன் சரவணகுமார் தான் தனது வீட்டில் இருக்கும் போது தனக்கு போன் செய்து, அபிராமியின் கணவர் விஜய் தனக்கு போன் செய்ததாகவும், அப்போது அபிராமி குழந்தைகளுக்கு மாத்திரை போட்டு கொடுத்து கொன்றுவிட்டு ஓடிபோய்விட்டதாக தன்னிடம் சொன்னதாக

சரவணகுமார் அசா-10 விடம் சொல்லியுள்ளார். அசா-10 தன்னுடைய வீட்டிலிருந்து உடனே கிளம்பி அபிராமியின் வீட்டிற்கு போனார் அப்போது காலை 8 மணி இருக்கும். அசா-10 அந்த வீட்டிற்கு போனபோது அங்கு நிறைய பேர் இருந்தார்கள். அவர்களிடம் கேட்டபோது, குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு இரண்டு குழந்தைகளையும் கொண்டுபோய்விட்டதாக சொன்னார்கள். அங்கிருந்து புறப்பட்டு குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு போனார். அன்று மாலை 4.30 மணியாவில் போஸ்டுமார்டம் முடித்து இரண்டு குழந்தைகளின் பிரேதத்தை கொடுத்தார்கள். அப்போது அங்கிருந்த அசா-10, சரவணகுமார், விஜய் மற்றும் உறவினர்கள் எல்லோரும் சேர்ந்து பெரியபனிச்சேரியில் உள்ள அண்ணன் சௌந்தராஜன் வீட்டிற்கு கொண்டுபோய் தங்களுடைய குலவழக்கப்படி சடங்குகள் செய்து மயானத்தில் அடக்கம் செய்தார்கள் அன்று விஜய் அப்செட்டாகவே இருந்தார். அப்போது அவனை கூப்பிட்டு கொண்டு அசா-10, சரவணகுமார், விஜய் மூவரும் விஜய் வீட்டிற்கு இரவு 10.30 மணிக்கு வந்துவிட்டார்கள் இரவில் விஜயின் வீட்டில் தங்கியிருந்து அடுத்த நாள் காலையிலும் அங்குதான் இருந்தார்கள். காலை 11.30 அல்லது 11.45 மணிக்கு அபிராமியை ஆய்வாளர் மற்றும் இரண்டு பெண் காவலர்கள் சேர்ந்து கூட்டி கொண்டு வந்தார்கள். அவர்களை பார்த்து யார் என்று கேட்டார்கள். அசா-10 அபிராமிக்கு சித்தப்பா முறை வேண்டும் என்று சொன்னார் அபிராமி வீட்டிற்குள்ளிருந்து மாத்திரை சீட்டு. மாத்திரை, மாத்திரை இருந்த அட்டை ஆகியவற்றை எடுத்து கொடுத்தார். அவர் எடுத்து கொடுத்த மாத்திரைகளின் பெயர் Taficing. T.Becolma, Becosuls ஆகும். இந்த மாத்திரைகளை எடுத்ததற்கு சாட்சிகளாக இருக்கிறீர்களா என்று அசா-10ஐ யும் சரவணகுமாரையும் பார்த்து

கேட்டார்கள். அவர்கள் இருப்பதாக சம்மதம் தெரிவித்தார்கள். போலிசார்கள் லேப்டாப்பில் வேலை செய்தார்கள். அவர்களையும் அங்கேயே இருக்க சொல்லிலிட்டு அந்த லேப் டாப்பை வெளியே எடுத்து கொண்டு போய்விட்டு 20 நிமிடத்தில் வந்தார். அந்த தட்டச்சு செய்த மகரில் அசா-10 மற்றும் சரவணகுமார் கையெழுத்து செய்தார்கள். ஏற்கனவே அதாஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள கைப்பற்றுதல் மகரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அசா-10 .

அ.சா.22 திரு. சார்லஸ் பிரேத விசாரணை மேற்கொண்ட பின்னர் இரண்டு பிரேதங்களையும் பெண் காவலர் 36528, திருமதி.பாக்கியசாந்தி, டி 13, குன்றத்தூர் காவலர் மூலமாக சம்மந்தப்பட்ட உரிய ஆவணங்களுடன் பிரேத பரிசோதனை மேற்கொள்ள வேண்டி அரசு பொது மருத்துவமனை குரோம்பேட்டைக்கு அனுப்பி வைத்தார். அன்றையதினமே சம்பவ இடத்தில் வைத்து சாட்சிகள் விஜய், கவிதா மற்றும் பூபதி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து அவர்களது வாக்குமூலத்தை தனித்தனியே பதிவு செய்தார். அன்றையதினமே சென்னை கோயம்பேடு பேருந்துநிலையத்தின் பின்னர் அமைந்துள்ள இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் இடத்திற்கு சென்று இருசக்கர வாகனம் உள்ளே வரும் வழியில் உள்ள சிசிடிவி கேமிராவில் 31.08.2018 அன்று 16.42 மணி முதல் 17.00 மணி வரை பதிவான விவரங்களை சிடி-யில் பதிவு செய்து கொடுக்குமாறு கேமிராக்களை பராமரிக்க ஒப்பந்தம் செய்திருந்த ஸ்ரீமங்கலம் ஏஜென்சி நிறுவனத்தில் பணிபுரிந்த திருகோபாலகிருஷ்ணன் என்பவரிடம் கேட்டார். அதன்படி மேற்படி கோபாலகிருஷ்ணன்

மேற்படி சிசிடிவி பதிவுகளை பதிவு செய்து சிடி-யும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65(பி) சான்றிதழையும் வழங்கினார். சிடி அ.சா.பொ.5. பிரிவு 65பி இந்திய சாட்சிய சட்டத்தின் கீழ் வழங்கிய சான்றிதழ் அ.சா.ஆ26 . மேற்படி சிடியை படிவம்91 மூலம் கைப்பற்றினார். அந்த படிவம்91 அ.சா ஆ.27. அப்பொழுதே சாட்சி கோபாலகிருஷ்ணன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

அ.சா**--7** திரு.கோபாலகிருஷ்ணன் தற்போது நெ.27/7, மணலி புதுநகர், சென்னை -103 என்ற முகவரியில் குடியிருந்து வருகிறார். அசா-7 கோயம்பேட்டையில் உள்ள இருசக்கர வாகனம் நிறுத்தக்கூடிய இடங்களை கண்காணிக்கக்கூடிய பொறுப்பில் இருக்கிறார். 01.09.2018 அன்று அவரை குன்றத்தூர் போலிசார் வந்து டி-என்-85-C-9360 என்ற நெம்பரை சொல்லி விசாரித்தார்கள். வண்டி உள்ளே இருக்கிறதா என்று செக் பண்ண வேண்டும் என்று சொன்னார்கள். தங்களிடம் உள்ள சிஸ்டத்தில் வண்டி நெம்பரை பதிவு செய்தால் அது உள்ளே பார்க்கிங் ஏரியாவில் இருக்கிறதா இல்லையா என்பதை சொல்லிவிடும். அசா-7 சிஸ்டத்தில் டி-என்-85-C-9360 என்ற எண்னை பதிவு செய்து தேடினார், அந்த வண்டி நெம்பர் டி-என்-85-C-9360, 31.08.2018 அன்று மாலை 4.45 மணிக்கு உள்ளே வந்து உள்ளே இருப்பதை போல் காட்டியது. அந்த 31.08.2018 மாலை 4.45 மணிக்கு பதிவான சிசிடிவி கேமிராவில் பதிவான கேமிரா பதிவை தான் பார்த்தார், அதில் ஒரு பெண் அந்த வண்டியை உள்ளே கொண்டு வந்து விடுவது பதிவாகியிருந்தது. அந்த பெண் 1வது எதிரி அபிராமி. போலிசார் கேமிரா புட்டேஜ் வேண்டும் என்று கேட்டார்கள், அதை எடுத்து அசா-7 போலிசாரிடம்

கொடுத்தார், அந்த புட்டேஜ் சா.பொ.5. அசா-7விடம் காண்பிக்கப்படும் படிவம் 95ல் உள்ள கையொப்பம் அவருடையதுதான், அதில் உள்ள கோபாலகிருஷ்ணனின் கையொப்பம் அ.த.சா.ஆ4 ஆகும். அதற்காக அசா-7 ஒரு சான்றிதழ் வழங்கினார், அதில் அசா-7ன் கையொப்பம் இருக்கிறது. அந்த சான்று அ.த.சா.ஆ5 ஆகும்.

அ.சா.1 விஜய் புகார் கொடுத்த 20 நிமிடத்தில் ஆய்வாளர் விஜய் வீட்டிற்கு வந்தார். வந்து வீட்டில் இருந்த பாடிகளை பார்த்துவிட்டு வீடு முழுவதும் தேடிப்பார்த்தார், வெளியேயும் தேடிப்பார்த்தார், உள்ளேயும் தேடிப்பார்த்தார், பிறகு விஜய்யை அழைத்து என்ன நடந்தது என்று கேட்டார். விஜய் அவரிடம் நடந்த எல்லா விவரங்களையும் சொல்லியுள்ளார். விஜய் வீட்டிற்கு வந்தபோது வீட்டில் அபிராமி இல்லை என்ற விவரத்தையும் சொன்னார் அதன்பிறகு பாடிகளை குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். குரோம்பேட்டை மருத்துவமனை சவக்கிடங்கில் இருந்த விஜய்யின் குழந்தைகளின் பிரேதங்களை பார்க்க போனார். அப்போது போஸ்ட்மார்டம் செய்ய வேண்டும் அதனால் உங்கள் குழந்தைகளை பார்க்க முடியாது என்று சொன்னார்கள். அன்று போஸ்ட்மார்டம் முடித்து இரண்டு உடல்களையும் மாலையில் கொடுத்தார்கள். பெரியபனிச்சேரி கொண்டுபோய் முறைப்படி இரண்டு உடல்களையும் அடக்கம் செய்தார்.

அ.சா**--8** திருமதி. பிந்து, தற்போது வேடந்தாங்கல் ரோடு, படாளம் கூட்ரோடு, மதுராந்தகம் தாலுக்கா, பழையனூர் என்ற முகவரியில் வசித்து வருகிறார். கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் நெ.24/4 முத்தமிழ் தெரு, நாகர் கோவில்

என்ற முகவரியில் உள்ள காருணியா ஹாஸ்டலில் சமையல் வேலை பார்த்து வந்துள்ளார். அந்த ஹாஸ்டலில் வேலைக்கு போய்வரும் பெண்களும் இன்டர்வியூக்கு வந்து போகும் பெண்களும் வந்து தங்கி செல்வார்கள். 01.09.2018 அன்று காலை 7மணிக்கு 25 வயது மதிக்கதக்க ஒரு பெண் வந்தார். விடுதியில் தங்குவதற்கு இடம் வேண்டும் என கேட்டுள்ளார். அவர் தனது பெயர் அபிராமி என்றும் சென்னையிலிருந்து வந்திருப்பதாகவும் சொன்னார். விடுதியில் தங்க அறை வேண்டும் என கேட்டார். அந்த அபிராமியிடம் அசா-8 பிந்து தங்கள் மேடம் கிளாடிஸ்கில்டா வெளியே போயிருப்பதாகவும் 5 மணிக்குதான் வருவார் என்று சொல்ல அதுவரைக்கும் காத்திருப்பதாக அபிராமி சொன்னார். குளிப்பதற்கு மட்டும் ஏற்பாடு செய்து கொடுக்கும்படி கேட்க அசா-8 பிந்து மேடம் கிளாடிஸ்கிட்டாவிடம் கேட்டுவிட்டு அபிராமி குளிக்க சம்மதம் கொடுத்துள்ளார். குளித்து விட்டு வந்து காத்திருப்பதாக அபிராமி அவரிடம் சொன்னாள். ஆனால் விடுதியின் மேல் மாடியில் குளிப்பதற்காக போன அபிராமி கீழே வந்திருக்கிறார், அவர் தங்களிடம் சொல்லாமல் விடுதியை விட்டு வெளியே போய்விட்டாள். பிறகு மாலை செய்திதாளை பார்த்துவிட்டு அபிராமி கொலை வழக்கில் சம்மந்தப்பட்டிருக்கிறார் என்பதை தெரிந்து கொண்டார். பிறகு மறுநாள் 02.09.2018ம் தேதி அன்று குன்றத்தூர் ஆய்வாளர் நாகர்கோவிலில் உள்ள தங்கள் விடுதிக்கு விசாரணைக்காக வந்தார். அபிராமியின் புகைப்படத்தை தன்னிடம் காட்டி ஆய்வாளர் தன்னிடம் கேட்டார். தான் நடந்த விவரத்தை ஆய்வாளரிம் சொல்லியுள்ளார். முதல் எதிரி அபிராமிதான் 01.09.2018 அன்று நாகர் கோவிலில் உள்ள விடுதியில் வந்து அறை கேட்டவர்.

அ.சா--**9** திரு. விஜயன் தற்போது நெ.7, அக்னீஸ்வரன் கோவில் தெரு, மூன்றாம் கட்டளை, குன்றத்தூர் என்ற முகவரியில் வசித்து வருகிறார். தான் மளிகை கடை அந்த தெருவில் வைத்திருக்கிறார். 02.09.2018 அன்று காலை 6 மணியளவில் கோயம்பேடு பேருந்து நிலையம் பைக் ஸ்டேன்டில் போலிசார்கள் நின்று கொண்டிருந்தார்கள். அங்கு தனக்கு தெரிந்த ஒரு ஆண் போலிசார் நின்று கொண்டிருந்தார், அவரிடம் என்ன சார் இந்த பக்கம் நின்று கொண்டிருக்கிறீர் என கேட்டுள்ளார். அப்போது அந்த போலிஸ்காரர் அபிராமி என்ற பெண் பைக்கை எடுப்பதற்காக இங்கு வர இருப்பதால் அவரை பிடிப்பதற்காக காத்துக்கொண்டிருப்பதாக சொன்னார். அவர் அசா-9விடம் பேசிக்கொண்டிருக்கும்போதே அங்கிருந்த பெண் போலிஸ்காரர்கள் அபிராமி வந்துவிட்டாள் அவளை பிடிக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டே ஓடினார்கள். அப்போது அபிராமி வண்டியை எடுத்து கொண்டு ஏறி சுந்தரத்துடன் போகும் போது, போலிசாரை பார்த்துவிட்டு கீழே விழுந்துவிட்டார். அதில் சந்தரத்திற்கு கையில் அடிபட்டது. இரண்டு எதிரிகளையும் போலிசார் அந்த இடத்திலிருந்து பிடித்து கொண்டு பைக் ஸ்டேன்டில் வைத்து விசாரித்தார்கள். பெண் போலிசார் அங்கு இருந்தார். அபிராமி முதலில் வாக்குமூலம் கொடுத்தார். அபிராமி வைத்திருந்த செல்போனையும் இருசக்கர வாகனத்தையும் போலிசார் எடுத்து கொண்டார்கள். அசா-9ம் நண்பன் ரமேஷிடம் ஓரமாக நின்று கொண்டனர். அபிராமி சொன்னதை பெண் போலிஸ் ஒருவர் லேப்டாப்பில் டைப் செய்தார். அந்த போலிஸ் விசாரித்த போது தனக்கும் பிரியாணி கடையில் வேலை பார்க்கும் சுந்தரத்திற்கும் இரண்டு மாதத்திற்கு முன்பு தொடர்பு ஏற்பட்டதாகவும், தாம்

சந்தோஷமாக இருக்க வேண்டும் என்றால் குழந்தைகளையும் தன் கணவரையும் கொன்றுவிட வேண்டும் என்ற எண்ணத்தில் யோசித்து அதனால் தன் இரண்டு குழந்தைகளுக்கும் மாத்திரை கொடுத்து கொன்றுவிட்டதாக சொன்னார். தன் கணவர் வேலைக்கு போய்விட்டதாகவும் சொன்னார். அசா-9விடம் காண்பிக்கப்படும் 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து அவருடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் அத.சா.ஆ.6. அவரிடம் காண்பிக்கப்படும் மற்றொரு கையொப்பத்தை செல்போன்கள் கைப்பற்றியதற்காக போட்டார். அந்த மகஜர் அ.த.சா.ஆ.7. ரோஸ்கலர் ஸ்கூட்டி வண்டி எனர் TN85C9360, Sumsung, Gionee என்ற இரண்டு செல்போன்களை அபிராமியிடமிருந்து போலிசார் வாங்கினார்கள். அந்த போன்களை அவரால் அடையாளம் காட்ட முடியும். Gionee போன் சா.பொ.6. Sumsung (black color) போன் சா.பொ.7. அதன்பிறகு சுந்தரத்திடம் விசாரித்தார்கள். அவரிடம் காண்பிக்கப்படும் 2வது எதிரி சுந்தரத்தின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் மட்டும் அவருடையதுதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் மட்டும் அத.சா.ஆ.8.

அ.சா**--11** திரு. ரமேஷ் தற்போது நெ.10, அக்னீஸ்வரன் கோவில் தெரு, மூன்றாம் கட்டளை என்ற முகவரியில் குடியிருக்கிறார். அசா-11 ரமேஷ் காய்கறி கடையும், மளிகை கடையும் வைத்திருக்கிறார். எதிரிகள் இருவரையும் அவருக்கு தெரியும். 02.09.2018 அன்று காலை 4 மணிக்கு அவரும் அவரின் நண்பர் விஜயனும் கோயம்பேட்டிற்கு இருசக்கர வாகனத்தில் போனார்கள், அந்த வண்டியை கோயம்பேடு பார்க்கிங்கில் போட்டுவிட்டு காய்கறி வாங்க மார்கெட்டிற்கு போனார்கள். காய்கறி வாங்கி டாடாஏசில்

லோடு செய்துவிட்டு அசா-11ம் விஜயனும் பார்க்கிங் செய்த மோட்டார் சைக்கிளை எடுக்க காலை 6 மணிக்கு போனார்கள். பார்க்கிங்கிலிருந்து அந்த வண்டியை எடுத்து கொண்டு வெளியே வந்தபோது, அவரது நண்பன் விஜயனுக்கு தெரிந்த போலிஸ்காரர் ஒருவர் இருந்தார், அவருடன் பேசுவதற்கு விஜயன் போனான் விஜயனும் அந்த போலிஸ்காரரும் பேசிக்கொண்டிருந்தார்கள். அசா-11 அருகில் நின்று கொண்டிருந்தார். அப்போது அங்கிருந்த பார்க்கிங்கிலிருந்து சுந்தரமும், அபிராமியும் பார்க் செய்திருந்த வண்டியை எடுத்து கொண்டு வெளியே வந்தார்கள். அங்கிருந்த 5, 6 போலிசார்கள் அந்த இடத்தில் அபிராமியை மடக்கி பிடிக்க போகும்போது வண்டியுடன் அபிராமியும் சுந்தரமும் கீழே விழுந்தார்கள். சுந்தரத்திற்கு கையில் அடிபட்டுவிட்டது, எந்த கை என்று ஞாபகம் இல்லை. அந்த போலிஸ்காரர்கள் சுந்தரத்தை அருகில் இருந்த மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அபிராமியை அந்த இடத்தில் வைத்து போலிசார் விசாரித்தார்கள். அப்போது அபிராமி தன்னுடைய குழந்தைகளுக்கு மாத்திரைகளை கொடுத்து கொல்ல முயன்றதாகவும், ஆனால் அவர்கள் அப்போது சாகவில்லை என்றும் அதனால் அவர்களின் கழுத்தை நெறித்து கொன்றுவிட்டதாகவும் வாக்குமூலம் சொன்னார். அதன்பிறகு சுந்தரம் அங்கு வந்தார், சுந்தரமும் அதேபோல் வாக்குமூலம் கொடுத்தார், அவர் தானும் அபிராமியும் உல்லாசமாக இருப்பதற்கு குழந்தைகள் இடையூராக இருப்பதால் அந்த குழந்தைகளை கொன்றுவிட்டு வரும்படி அபிராமியிடம் தான் சொன்னதாகவும் சொன்னார்: அதற்காக சாட்சிகளாக இருந்து கையெழுத்து போடுவீர்களா என்று தங்களிடம் போலிசார் கேட்டார்கள். தாங்கள் ஒப்புக்கொண்டோம். அதன்படி எதிரிகள் சொன்னதை எழுதிய தாளில் தாங்கள்

கையொப்பம் செய்தார்கள். 1வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் அசா-11னுடையதுதான். அந்த கையொப்பம் அத.சா.ஆ.9 ஆகும். 2வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் அசா-11னுடையதுதான், அந்த கையொப்பம் அ.த.சா.ஆ 10 ஆகும். அப்போது சுந்தரத்திடமிருந்து ஒரு செல்போனை போலிசார் வாங்கினார்கள். அந்த போன் வெள்ளை நிறம் ஆகும், ஜியோனி கம்பெனி ஆகும். அபிராமியிடமிருந்து கருப்பு கலர் சாம்சங் போனை போலிசார் வாங்கினார்கள். வண்டியையும் கைப்பற்றினார்கள். அந்த வண்டி பிங்க் கலர் ஸ்கூட்டி பெப் ஆகும். அதன் பதிவு எண் TN-85-C-9360 ஆகும். அந்த வண்டி சா.பொ.8 ஆகும் வண்டி கைப்பற்றியதற்காக கையொப்பம் செய்தார்கள், அந்த மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அசா-11னுடையதுதான், அந்த மகஜர் அ.த.சா.ஆ.11. போன்களை கைப்பற்றியதற்காக அவர்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். அசா-11விடம் காண்பிக்கப்படும் இரண்டு போன்களையும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் அசா-11னுடையதுதான், அந்த ஆவணம் அ.த.சா.ஆ.7. அந்த போன்கள் சா.பொ.6 மற்றும் சா.பொ.7 அதன்பிறகு அவர்கள் புறப்பட்டு ஊருக்கு போய்விட்டார்கள்.

அ.சா.4 செந்தில், 02.09.2018 அன்று மதியம் போல, குன்றத்தூர் ஆய்வாளர், மற்றும் 2 பெண் போலிசாருடன் அபிராமியை அழைத்து கொண்டு அசா-4ன் கடைக்கு வந்தார்கள், அபிராமி அசா-4ன் கடையை போலிசாரிடம் அடையாளம் காட்டினார். அசா-4 கொடுத்த கேஷ்பில்லை வைத்து அசா-4ஐ விசாரித்தார். அதில் குறிப்பிட்டுள்ள மருந்தை அசா-4 கொடுத்தேன் என்று ஆய்வாளரிடம் சொல்லியுள்ளார். அசா-4ன் பில்

புக்கை ஆய்வாளர் வாங்கி பார்த்துள்ளார். அசா-4ன் கடையின் உரிமத்தை வாங்கி பார்த்தார். பிறகு மருந்தாளுனர் என்பதற்கான சான்றிதழையும் வாங்கி பார்த்தார். அசா-4ன் முன்பாக அபிராமியை ஆய்வாளர் விசாரித்தார். அப்போது அபிராமி ஆய்வாளரிடம் தன்னுடைய கள்ளகாதலன் சுந்தரம் என்பவர் போட்டு கொடுத்த திட்டத்தின்படி மருத்துவரிடம் சென்று மருந்துசீட்டை வாங்கி அசா-4ன் கடையில் வந்து மருந்து வாங்கி குழந்தைகளுக்கு பாலில் கலந்து கொடுத்து கொன்றதாக வாக்குமூலம் அளித்தார். அபிராமி சொன்னதை ஆய்வாளர் எழுதி கொண்டார். அசா-4விடம் காண்பிக்கப்படும் பில்புக்கில் உள்ள 30.08.2018 தேதியிட்ட பில்.எண் 5263 என்ற ரசீதின் கார்பன் காப்பி சா.பொ1. போலிசார் அசா-4ஐ கடையில் வைத்து விசாரித்துள்ளனர்.

அ.சா.6 சரவணகுமார் 02.09.2018 அன்று காலை 11.30 மணியளவில் போலிசார் அபிராமியை கூட்டி கொண்டு அந்த வீட்டிற்கு வந்தார்கள். மாத்திரை எங்கே என்று அபிராமியிடம் கேட்டார்கள். அபிராமி மாத்திரை இருந்த இடத்தை கையை காட்டி அபிராமியே சென்று மாத்திரைகளை எடுத்து போலிசாரிடம் கொடுத்தார். அந்த மாத்திரைகளை அங்கிருந்து எடுத்ததற்காக அசா-6விடமும் கார்த்திகேயனிடமும் கையெழுத்து வாங்கினார்கள். Traffic mc என்று எழுதப்பட்ட மூன்று மாத்திரையும் Becalm, Becosulos என்ற மேலும் இரண்டு வகையான மாத்திரைகளை எடுத்தார்கள். ஒரு வருடம் ஆகிவிட்டதால் அந்த மாத்திரைகளின் பெயர் ஞாபகம் இல்லை. அந்த மகஜர் அ.த.சா.ஆ.3. அந்த மாத்திரைகளை அசா-6 ஆல் அடையாளம் காட்ட முடியும். Traffic mc என்று எழுதப்பட்ட 1 மாத்திரை உள்ள 7 மாத்திரைகள் இல்லாத அட்டை சா.பொ.2. Becalm என்று எழுதப்பட்ட 1 மாத்திரை மட்டும் உள்ள 4 மாத்திரை இல்லாத

அட்டை சா.பொ.3. Becosulos என்று எழுதப்பட்ட 1 மாத்திரை உள்ள 7 மாத்திரைகள் இல்லாத அட்டை சா.பொ.4.

அ.சா**--17** திரு.விஜயன் தற்போது நெ.77, D, வால்மிகி தெரு, கிழக்கு தாம்பரம், சென்னை 59 என்ற முகவரியில் வசித்து வருகிறார். தான் காஞ்சிபுரம் மண்டலத்தில் காஞ்சிபுரம்-2 சரக மருந்துகள் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார். அவருடைய பணியானது 3 மாதங்களுக்கு ஒரு முறை அவருடைய சரகத்தில் அமைந்துள்ள மருந்து கடைகளில் விற்பனை செய்யப்படும் மருந்துகள் முறையான விற்பனை ரசீதுகள் கொண்டு விற்கப்படுகிறதா என்பதை ஆய்வு செய்வது ஆகும். ஆய்வில் ஏதாவது தவறு நடந்தது கண்டுபிடிக்கப்பட்டால் மருந்து கட்டுப்பாட்டு இயக்குநருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். குன்றத்தூர் நெடுஞ்சாலை எண் 4/323A இலக்கியா திருமண மண்டபத்தின் கீழ்தளத்தில் அமைந்துள்ள மணி மெடிக்கல்சை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார். மேற்படி மணி மெடிக்கல்சை ஆய்வு செய்வது தொடர்பாக கடந்த 03.06.2019 அன்று குன்றத்தூர் காவல் ஆய்வாளர் அவரிடம் மணி மெடிக்கல்சில் முறையான ரசீதுகளின் அடிப்படையில் விற்பனை நடைபெற்றதா என்பதை பற்றி விசாரணை மேற்கொண்டார். அதற்கு அவர் அந்த மணி மெடிக்கல்ஸ் முறையான ரசீதின் அடிப்படையில்தான் மருந்து விற்பனை செய்தார்கள் என்று சொன்னார். காவல் ஆய்வாளர் அவரை விசாரித்துள்ளார்.

அ.சா**--18** திரு. செல்வம் தற்போது நெ.100/44, அனுகா கார்டன், சிவசக்தி நகர், சிக்கராயபுரம்,குன்றத்தூர் என்ற முகவரியில் வசித்து வருகிறார். ஆட்டோ டிரைவராக

வேலை செய்து வருகிறார். அவர் படிக்கவில்லை. 03.06.2019 அன்று குன்றத்தூர் அருகே நான்கு ரோட்டில் மதியம் 3, 4 மணியளவில் அவர் ஆட்டோ ஓட்டிகொண்டு போனபோது அவர் ஆட்டோவை முந்திக்கொண்டு ஒரு லாரி வந்தது. அந்த லாரி அவருடைய ஆட்டோவின் டாப்பில் லேசாக உரசிவிட்டது, நிற்காமல் போனது. அதனால் அந்த லாரியை விரட்டி சென்று முந்தி போய் நின்று மடக்கி கேட்டபோது, அந்த லாரி டிரைவருக்கும், கிளினருக்கும் அசா-18க்கும் வாய்தகராறு ஆனது. தாங்கள் மூவரும் காவல்நிலையம் போய் பேசிக்கொள்ளலாம் என சொல்லி 3பேரும் குன்றத்தூர் காவல்நிலையம் போனார்கள். அங்கு வைத்து பேச்சு வார்த்தை நடந்தது. அவருக்கு ஆதரவாக பேச கார்த்திகேயன் எனபவரை கூப்பிட்டார், அவரும் வந்து பேசினார். பேச்சு வார்த்தையில் சமாதானமாகி லாரி ஓட்டுநரும் டிரைவரும் அவருடைய ஆட்டோவின் டாப்பை ரிப்பேர் பார்த்து சரிசெய்து கொடுப்பதாக சொன்னதால் ஒப்புக்கொண்டு வெளியே வந்து பேசிக்கொண்டிருந்தனர். அப்போது ஆய்வாளர் அவரையும் கார்த்திகேயனையும் கோவூரில் உள்ள ஒரு மருந்துகடைக்கு கூட்டி சென்றார், அங்கு அவரிடம் சாட்சி கையொப்பம் போடமுடியுமா என்று கேட்டார். அந்த மருந்து கடையிலிருந்து ஒரு புக் ஒன்று எடுத்தார்கள், அதற்காக எழுதிய தாளில் படித்து பார்த்து கார்த்திகேயன் கையெழுத்து போட்டார். அவர் படித்து பார்த்துவிட்டு அசா-18ஐ யும் போட சொன்னதால் அவரும் கையொப்பம் செய்தார். அந்த கையெழுத்துதான் அவரிடம் காட்டப்படும் புத்தகம் கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் ஆகும். அந்த புத்தகத்தை அவரால் அடையாளம் காட்டமுடியும். இந்த புத்தகத்தைதான் அன்று அவர் முன்பு கைப்பற்றினார்கள். அந்த புத்தகத்தில் உள்ள

பில்.நெ.5263 ஆனது சா.பொ. 1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ21 ஆகும். போலிசார் அவரை விசாரித்துள்ளனர்.

அ.சா-**19** திரு. கார்த்திகேயன் தற்போது நெ.12/343, 5வது தெரு, மூகாம்பிகை நகர், சிக்கராயபுரம், குன்றத்தூர் என்ற முகவரியில் வசித்து வருகிறார். அவர் வெல்டிங் வேலை-செய்து வருகிறார். அவர் அதிமுகவில் கிளை செயலாளராக இருக்கிறார். 03.06.2019 அன்று சிக்கராயபுத்தில் உள்ள அவருடைய கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்தபோது, அவர் தம்பி செல்வம் தன்னுடைய ஆட்டோவில் நான்குரோடு அருகே போனபோது விபத்தாகி தகராறு ஆகிவிட்டதாக போன் மூலம் தகவல் சொன்னான். அவர் அவனை குன்றத்தூர் காவல்நிலையத்திற்கு நீ போய்விடு தான் அங்கு வந்துவிடுகிறேன் என்று சொல்லிவிட்டு அவர் புறப்பட்டு குன்றத்தூர் காவல்நிலையம் போனார். அவரின் தம்பியும் அங்கு வந்துவிட்டார். அவர் தம்பியின் வண்டியை விபத்தில் சேதப்படுத்தியவர்களும் காவல்நிலையம் வந்திருந்தார்கள். ஆய்வாளர் அவர்களிடம் எல்லோரும் லோக்கலாக இருப்பதால் இதை பெரிதுபடுத்த வேண்டாம், சமாதானமாக போய்விடுங்கள் என்று சொன்னார். அதனால் அவர்கள் சமாதானம் ஆகிவிட்டனர். அவரை இரட்டை கொலை சம்மந்தமாக மருந்துகடையில் பில் புத்தகம் எடுக்க போவதாகவும் அதற்கு சாட்சியாக இருக்கும்படியும் ஆய்வாளர் கேட்டார். அவரையும் செல்வத்தையும் கூட்டி கொண்டுபோனார்கள். போலிசார் அவர்கள் வண்டியில் வந்தார்கள். அவரும் அவர் தம்பியும் பைக்கில் போனார்கள். இலக்கியா கல்யாண மண்டப காம்ளெக்சிலேயே மணி மெடிக்கல்ஸ் என்ற கடை இருந்தது. அங்கு பேசி ஒரு பில் புத்தகத்தை வாங்கினார்கள், லைசென்ஸ் வாங்கினார்கள். அதை

அவர்களிடம் காட்டி அதை பறிமுதல் செய்திருப்பதாக சொன்னார்கள், அதற்கு சாட்சியாக இருக்க வேண்டும் என சொன்னார்கள். அதற்கு கையொப்பம் கேட்டார்கள், அவர் போட்டார். அவரிடம் காட்டப்படும் அ.சா.ஆ21ல் உள்ள முதல் கையொப்பம் அவருடையததான். அந்த புத்தகத்தை அடையாளம் காட்டமுடியும். இந்த புகத்தைதான் கைப்பற்றினார்கள் என்று சா.பொ.1 புத்தகத்தை சாட்சியால் அடையாளம் காட்டப்பட்டது. லைசென்ஸ் எனபது இதுதான், அது ஜெராக்ஸ் ஆவணம் என்பதால் அது குறியீடு செய்யப்படவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

அ.சா-**21** திருமதி.பாக்யசாந்தி, பூந்தமல்லி காவல் நிலையத்தில் பெண் தலைமை காவலராக பணியாற்றி வருகிறார். கடந்த 01.09.2018 அன்று டி13, குன்றத்தூர் காவல்நிலையத்தில் பெண் முதல்நிலை காவலராக பணியில் இருந்த போது, குற்ற எண் 1101/2018, சட்டப்பிரிவு 302இதச வழக்கில் இறந்து போன அஜய், ஆண், வயது 6, கார்னிகா, பெண், வயது 4 என்பவர்களின் உடலில் பிரேத பரிசோதனை செய்வதற்காக காவல் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தினை குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு காவல் ஆய்வாளருடன் சென்று தபால்களை மருத்துவரிடம் கொடுத்து பிரேதத்தை அடையாளம் காட்டினார். பிரேத பரிசோதனை முடிந்த பிறகு இறந்த குழந்தைகளின் உடலை குழந்தைகளின் தந்தை விஜயிடம் ஒப்படைத்து அத்தாட்சி பெற்று நிலையம் வந்து ஆய்வாளரிடம் அறிக்கை செய்தார். 04.09.2018 அன்று இரண்டு குழந்தைகளின் விஸ்ராவினை குரோம்பேட்டை அரசு மருத்துவமனையிலிருந்து பெற்று மைலாப்பூர் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தார். ஆய்வாளர் அவரை விசாரிக்க அவர் நடந்ததை சொன்னார்.

அ.சா.22 சார்லஸ் பின்னர் அன்றைய தினமே நாகர்கோவிலில் உள்ள காருண்யா மகளிர் தங்கும் விடுதியை சேர்ந்த திருமதி.பிந்து என்பவரை விசாரணை செய்து அவர்களின் வாக்குமூலத்தை அங்கேயே பதிவு செய்தார். அதன்பின்னர் டி13,குன்றத்தூர் காவல்நிலைய பெண் காவலர் திருமதி. பாக்யசாந்தி, நெ.36528 என்பவர் காவல்நிலையம் ஆஜராகி மருத்துவர் பிரேத பரிசோதனைக்கு பிறகு இறந்த குழந்தைகளின் சடலத்தை குழந்தைகளின் தந்தை விஜயிடம் ஒப்படைத்தாக அவரிடம் தெரிவித்தார். பின்னர் 04.09.2018 அன்று மேற்படி சாட்சி திருமதி பாக்யசாந்தியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் இந்த வழக்கின் எதிரி அபிராமி பயன்படுத்திய செல்போன் எண்கள் 908095891, 9551555463 மற்றும் 9884119316 மற்றும் எதிரி மீனாட்சிசுந்தரம் பயன்படுத்திய செல்போன் எண்கள் 9159914765, 8825633655 ஆகிய செல்போன் எண்களுக்கு கால்டி டெய்ல்ஸ் ரெக்கார்டு தருமாறு நோடெல் ஆபிசர் காவல்துறை ஆணையாளர் அலுவலகம், அம்பத்தூர் காவல் மாவட்டம் என்பவருக்கு மேற்படி எண்களை அனுப்பி வைத்து தகவல்களை பெற்றார். அந்த கால்டிடெய்ல்ஸ் ரெக்கார்டு பன்னிரெண்டு தாள்கள் அ.த.சா.ஆ22. கால்டிடெய்ஸ்ஸ் ரெக்கார்டு கொடுத்த திருமதி.ஜெயந்தி என்பவரை விசாரணை செய்து அவரின் வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் பிரேத விசாரணை செய்த மருத்துவர் பிரியா அவர்களை 01.11.2018 அன்று விசாரித்து அவர்களின் வாக்குமூலத்தை பதிவு செய்தார். மேலும் குழந்தை அஜயின் இறப்பு குறித்து the deceased appear to have died of due to systematic absorption of the drug (Lorazepam) consumed என்றும் குழந்தை

கார்னிக்கா இறப்பு குறித்து the deceased would appear to have died of due to systematic absorption of the drug (Alprazolam) consumed என்று கருத்துரைகள் வழங்கியதால் மேற்படி மாத்திரைகள் Lorazepam மற்றும் Alprazolam ஆகிய இரண்டையும் குறித்து எழுத்து மூலமான கேள்விகள் அடங்கிய இரண்டு படிவத்தை மருத்துவரிடம் சமர்ப்பித்து அதற்கான பதில்களை பெற்றார். இரண்டு குழந்தைகள் சம்மந்தமாக அவர் மருத்துவரிம் கேட்ட கேள்வியும் மருத்துவர் அளித்த பதிலும் அடங்கிய படிவங்கள் முறையே அ.சா.ஆ.19 மற்றும் மற்றும் அ.சா.ஆ20. பின்னர் தடய அறிவியல் அதிகாரி திருமதி பூர்விஷா அவர்களை 23.10.2018 அன்று விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் உதவி இயக்குநர், கணினி அறிவியல் துறை, திருமதி.ஜமுனாசிவசங்கரன் என்பவரை விசாரணை செய்து அவரின் வாக்குமூலத்தை பதிவு செய்தார். பின்னர் அவருடைய விசாரணை முடித்து வழக்கு கோப்பினை துணை இயக்குநர், குற்ற வழக்கு தொடர்வு துறை, காஞ்சிபுரம் சரகம் அவர்களுக்கு கருத்துரை பெறுவதற்காக அனுப்பி வைத்தார். அத்துணை இயக்குநர் வழக்கு கோப்பினை பார்வையிட்டு ஏற்கனவே இருந்த பிரிவு 302 இதச வுடன் 120பி உ/இ 109 இதச வை சேர்த்து வரைவு இறுதி அறிக்கை கொடுத்ததால் வழக்கு பிரிவுகளை 302 இதசவிலிருந்து பிரிவுகள் 302, 120பி உ/இ 109இதச வாக பிரிவு மாற்றம் செய்து கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருபெரும்புத்தூர் அவர்களுக்கு அனுப்பி வைத்தார். அந்த சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ29. பின்னர் கடந்த 03.06.2019 அன்று நெ.4/323ஏ, குன்றத்தூர் மெயின்ரோடு, கோவூர், சென்னை என்ற முகவரியில் இயங்கி வந்த மணி மெடிக்கல்ஸ் என்ற கடையிலிருந்து சாட்சிகள் திரு.கார்த்திகேயன்

மற்றும் திரு.செல்வம் ஆகியோர்கள் முன்னிலையில் மணி மெடிக்கல்ஸ் பில்புத்தகம் S.No.5201 to 5600 வரை உள்ள பில்புத்தகம் மற்றும் மணி மெடிக்கல்ஸ் உரிம நகல் ஆகியவற்றை மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். மேலும் கடையின் உரிமையாளர் செந்தில் என்பவரை விசாரணை செய்தபோது எதிரி அபிராமி தன்னுடைய கடையில் வாங்கிய T.TRAFFIC MG Tablet-3 Nos., T.BCALM 0.5MG Tablet-3Nos., C.BECOSULOS Tablet-5Nos. ஆகிய மாத்திரைகள் ரூபாய்298.80பைசாவிற்கு வாங்கியதாக தெரிவித்தார். மேலும் ஆஜர் எதிரி அபிராமி வாங்கிய மாத்திரைகளுக்கு உண்டான பில் ரூபாய்298.80 பைசாவிற்கான பில்லை அவரிடம் காண்பித்தார். அந்த பில் அ.சா.பொ. 1. அன்றைய தினமே மேற்படி மகஜர் சாட்சிகள் திரு.கார்த்திகேயன் மற்றும் திரு.செல்வம் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தார். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ21 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் காஞ்சிபுரம் மண்டலத்தில் காஞ்சிபுரம்-2 சரகமருந்துகள் ஆய்வாளராக பணிபுரிந்த திரு.விஜயன் என்பவரை விசாரணை செய்து அவரின் வாக்குமூலத்தை பதிவு செய்தார்.

அ.சா**--15** திரு.குமார் தற்போது நெ.42, அக்னீஸ்வரன் கோவில் தெரு, மூன்றாம் கட்டளை, குன்றத்தூர் என்ற முகவரியில் வசித்து வருகிறார். மளிகை கடை வைத்து நடத்தி வருகிறார். 1வது எதிரி அபிராமியை எனக்கு தெரியும். 02.09.2018 அன்று காலை 9 மணியளவில் நான் காய்கறி வாங்க கோயம்பேடு மார்கெட் போயிருந்தார். ஸ்கூட்டர், பைக் நிறுத்தும் இடத்தில் இரமேஷ், விஜயன், போலிசார் ஆகியோர் நின்று

கொண்டிருந்தார்கள். என்ன என்று கேட்டார். ஒரு பைக்கை எடுக்க போவதாக சொன்னார்கள். அதற்காக கையெழுத்து போடச்சொன்னார்கள். இரமேஷ் முதலில் கையெழுத்து போட்டார். அதற்கு கீழே கையொப்பம் செய்தார். காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் அவருடையதுதான். அந்த மகஜரில் டிஎன்8549360 என்ற பதிவெண் கொண்ட வண்டியை போலிசார் கைப்பற்றினார்கள். அந்த வண்டி அபிராமிக்கு சொந்தமானது ஆகும். அந்த மகஜர் ஏற்கனவே அத.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த டிவிஎஸ் ஸ்கூட்டி ஏற்கனவே சா.பொ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலிசார் அசா-15ஐ விசாரித்தார்கள்.

அ.சா**--16** திருமதி.ஜமுனா சிவசங்கரன் கடந்த ஏப்ரல் 2018 அன்று தடய அறிவியல் துறையில் கணினி பிரிவில் துணை இயக்குநராக பணியாற்றி பணி ஓய்வு பெற்றுள்ளார். கடந்த 09.11.2018 அன்று மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், திருபெரும்புத்தூர் அவர்களின் குன்றத்தூர் காவல்நிலைய குற்ற எண் 1101/2018, 302 இதச வழக்கின் கடித எண் 1590/2018, நாள் 08.11.2018 என்ற நாளிட்ட கடிதத்துடன் திருமதி.பாக்யசாந்தி, பெண் காவலர், எண் 33528 மூலமாக மூடி முத்திரையிடப்பட்ட துணி வரியிடப்பட்ட ஒரு பார்சல் அவரது அலுவலகத்தில் சரியாக முத்திரைகளுடன் பெறப்பட்டது. அதில் உள்ள பொருட்கள் கீழ்வருமாறு ஐயிட்டம் 1.கருப்பு நிற கைபேசி, சாம்சங் நிறுவனத்தாரின் ஜெ7 மாடல் ஒன்று பேட்டரியுடன் பெறப்பட்டது. அதில் சிம்கார்டோ, மெமரிகார்டோ இல்லை. ஐயிட்டம் 2.கருப்பு மற்றும் தங்க நிற கைபேசி ஒன்று ஜியோனி நிறுவனத்தின் 1 ஆக மாடல் P5L என்ற மாடல் 2

சிம்கார்டுகளுடனும் பேட்டரியுடனும் பெறப்பட்டது. அதில் மெமரிகார்டு இல்லை. சிம்கார்டு 1, ஒடபோன் நிறுவனத்தின் தயாரிப்பாகும், மற்றொரு சிம்கார்டு ஏர்டெல் நிறுவனத்தாரின் தயாரிப்பாகும். அவற்றை தமது அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டனர். கண்டறியப்பட்டதை கீழ் உள்ளவாறு சொல்லியுள்ளார்கள். கைபேசி ஒன்றினை UFED 4 PC மற்றும் Mobil edit forensic express என்ற கணினி கருவிகளால் ஆய்வு செய்யப்பட்டது. கைபேசியின் விவரங்கள் அதில் கண்டறியப்பட்டது. அதன் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அதன் விவரங்களை ஆய்வு செய்ததில் அதில் தொடர்புகள் (Contacts தொடர்பின் விவரங்கள் (Call logs ) மற்றும் மீடியா கோப்புகள் பதிவு செய்தது கண்டறியப்பட்டது. அதில் குறிப்பிட்ட ஆய்வுடன் பின்வருமாறு சொல்லியுள்ளார். நீதிமன்ற கடிதத்தில் குறிப்பிட்ட எண்ணான 9159914765 என்ற எண் ஆங்கிலத்தில் Purush என்ற தொடர்பில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. அதனை இணைப்பு 2 ஆக கொடுத்துள்ளார்கள். அதே போல் தங்களது நீதிமன்ற கடிதத்தில் குறிப்பிட்ட எண்ணான 8754710083 என்ற எண்ணிலிருந்து Incoming call ஒன்று பெறப்பட்ட விவரம் அவர்களது ஆய்வறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் இரண்டு இணைக்கப்பட்ட படங்கள் (collaged images) மற்றும் ஒரு Gif கோப்பு இருப்பது கண்டறியப்பட்டது. அதில் ஒரு ஆணின் படமும் பெண்ணின் படமும் இருந்தது. அதன் விவரங்களும் அவர்களது அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு ஆணின் facebook படம் அதில் உள்ளது கண்டறியப்பட்டது. அதன் விவரம் அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் இரண்டு படங்களும் அந்த கைபேசியிலிருந்து எடுக்கப்பட்டு அவர்களது அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. ஐயிட்டம் 2. அந்த

கைபேசியையும் UFED 4 PC என்ற கணினி கருவியால் ஆய்வு செய்யப்பட்டது. அந்த கைபேசியின் விவரங்கள் கருவில் எடுத்தவாறே அவர்களின் இணைப்பு 3ல் அளிக்கப்பட்டுள்ளது. அதன் விவரங்களை ஆய்வு செய்து பார்த்ததில் அதில் தொடர்புகள் (contacts) தொடர்பு கொண்ட விவரங்கள் (call logs, Messages, Media கோப்புகள் கண்டறியப்பட்டன. அதில் கண்டறியப்பட்டுள்ள விவரங்கள் பின்வருமாறு நீதிமன்ற கடிதத்தில் குறிப்பிட்டுள்ள எண்களான 9080015891, 9884119316 மற்றும் 8754710083 ஆகிய எண்கள் தொடர்புகளில் சேமித்தவாறு கண்டறியப்பட்டன. அதன் விவரங்கள் இணைப்பு 4, 5, 6ல் தமது பார்வைக்காக கொடுக்கப்பட்டுள்ளது. அவை Abi, X Kot என்றும், X என்றும், N M. Vasi ஆகிய பெயர்களில் சேமிக்கப்பட்டது கண்டறியப்பட்டது. மேலும் எண் 9567529213 என்ற எண்ணிலிருந்து outgoing and incoming calls மற்றும் ஒரு incoming message பெறப்பட்டது கண்டறியப்பட்டது. அதனை இணைப்பு 7ஆக கொடுத்துள்ளார். தொடர்பு X என்ற பெயரில் சேமிக்கப்பட்ட எண்ணில் உள்ள whatsup chat message ஒன்று இருப்பது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அடுத்து தொடர்பு Niyas Bpல் உள்ள எண்ணான 918248057826லிருந்து பெறப்பட்ட whatsup chat message இணைப்பு 8ல் அளிக்கப்பட்டுள்ளது. அடுத்து எண் 9567529213 என்ற எண்ணிலிருந்து ஒரு incoming call பதிவு Audio என்ற folderல் பதிவு செய்யப்பட்டது கண்டறியப்பட்டது. அதனுடைய விவரமும் மற்ற விவரங்களும் ஒரு குறுந்தகடில் சேமிக்கப்பட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பி உள்ளனர். மேலும் அந்த ஆடியோ பதிவில் உள்ள சில பதிவுகள் (conversation அவர்களின் அறிக்கையில் அளித்துள்ளனர். மேலும் அந்த கைபேசியில் சில whatsup

படங்களும் கண்டறியப்பட்டு தமது அறிக்கையில் அளித்துள்ளோம். அந்த படங்களை இணைப்பு 9ல் அளித்துள்ளார். மேலும் Apps களை பயன்படுத்தி whatsup video மற்றும் கோப்புகள் உருவாக்கப்பட்டவை இணைப்பு 10ல் அளித்துள்ளனர். இவற்றுடன் பெறப்பட்ட சிம்கார்டுகளின் விவரம் சிம்கார்டுகளையும் UFED 4PC என்ற கணினி கருவியால் ஆய்வு செய்யப்பட்டு அதனுடைய தொடர்புகளையும் இணைப்பு 11 ஆக அளித்துள்ளனர். அதில் எண் 8754710083 என்று நீதிமன்றத்தில் குறிப்பிட்ட எண் N M. Vasi என்ற பெயரில் சேமிக்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது. இரண்டாவது சிம்கார்டையும் (ஏர்டெல் UFED 4PC என்ற கணினி கருவியில் ஆய்வு செய்யப்பட்டு அதனை இணைப்பு 12ஆக கொடுத்துள்ளனர். இந்த அறிக்கையை அவரும் அவரது Examiner / Scientific Officer திருமதி.ஹேமலதா, M.Sc., Computer Science அவர்கள் கையொப்பம் இட்டு திருபெரும்புத்தூர் நீதிமன்றத்திற்கு 28.11.2018 அன்று திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, குன்றத்தூர் போலிசார் மூலமாக மூடி முத்திரையிட்டும் ஒரு காகித உறையில் வைத்து அனுப்பி வைத்தார். அறிக்கை எண் 107/2018, நாள் 26.11.2018 ஆகும். அந்த அறிக்கை அ.த.சா.ஆ 17 ஆகும். அந்த அறிக்கையுடன் கூடிய ஒரு சிடி மற்றும் 12 இணைப்புகளும் உள்ளது. அந்த சிடி அ.த.சா.ஆ 18 ஆகும். ( அ.சா.16 இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65(B) நடைமுறைக்கு பிறகுதான் ஆய்வு செய்யப்பட்டது) அ.த.சா.ஆ18ல் உள்ள முதல் folder அ.த.சா.ஆ 18A, 2nd folder அ.த.சா.ஆ18B ஆகும். 3வது folder அ.த.சா.ஆ 18C, 4th folder அ.த.சா.ஆ18D ஆகும். இரண்டு செல்போன்கள் இவைகள் தான். ஜியோனி செல் போன் ஏற்கனவே சா.பொ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சாம்சங் செல்போன் ஏற்கனவே சா.பொ.7

ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. காவல் ஆய்வாளர் அசா-16 ஐ விசாரித்தாரித்துள்ளார்.

அ.சா- **23 :- Tmt.Hemalatha,** தற்போது சென்னை தடய அறிவியல் துறையில், கணினி தடவியல் பிரிவில் அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வருகிறார். கடந்த 09.11.2018 ம் ஆண்டு திருமதி.பாக்கியசாந்தி, முதல்நிலை பெண் காவலர், திருப்பெரும்பத்தூர், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவரின் கடிதத்தின் மூலமாக க.எண்.1590/2018, நாள் 08.11.2018 குன்றத்தூர் காவல் நிலைய குற்ற எண்.1101/2018 சம்மந்தமான வழக்கு சொத்துக்கள் துணிவரியிட்ட பார்சல் -1 சரியான முத்திரைகளுடன் அவர்கள் அலுவலகத்தில் C.F.107/2018 என்று பதிவு செய்து பெறப்பட்டன. மேலும் தங்கள் பிரிவின் துணை இயக்குநராக இருக்கும் முனைவர்.ஜமுனா சிவசங்கரன் அவர்களின் -1 மேற்பார்வையில் வழக்கு சொத்துக்களான அயிட்டம் சாம்சங் கைபேசி சிம்கார்டுகள் மற்றும் மெம்மரி கார்டு இல்லாமல், அயிட்டம்-2 ஜியோனி கைபேசி சிம்கார்டுகள் ஏர்டல், வோடோபோடுடன் சிம்முடன் மெம்மரி கார்டு இல்லாமல் அசா-23ம், அசா-16ம் ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வறிக்கை தபால் எண்.8741/2018 C.F 107/2018 நாள் 26.11.2018 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த ஆய்வறிக்கையின் போது இரண்டு கைபேசிகளிலிருந்து வெளிக்கொணரப்பட்ட தரவுகள் குறுந்தகட்டில் சேமிக்கப்பட்டு ஆய்வறிக்கையுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இது சம்மந்தமாக குன்றத்தூர் ஆய்வாளர் இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 65B சான்றிதழ் வழங்குமாறு

கோரினார். அதன் படி 65-B சான்றிதழ் வழங்கினார். அவர் வழங்கிய இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65-B-ன்படியான சான்றிதழ் தான் அ.சா.ஆ.30. இது சம்மந்தமாக சென்னை தடய அறிவியல் துறை, துணை இயக்குநர் அளித்த கடிதம் தான் அ.த.சா.ஆ.31. இந்த வழக்கு சம்மந்தமாக அவரை காவல் ஆய்வாளர் விசாரணை செய்தார்.

அ.சா- **24 :-** திரு. கைலாசம் தற்போது Relience Jio Info comm.Ltd நிறுவனத்தில் Alternate Nodal Officer/Deputy Manager ஆக 2017லிருந்து பணிபுரிந்து வருகிறார். T 13 குன்றத்தூர் காவல் நிலைய குற்ற எண்.1101/2018 வழக்கின் விசாரணை சம்மந்தமாக சம்பந்தப்பட்ட கைபேசி எண்களான 9080015891 மற்றும் 8825633655 ஆகியவற்றிற்கு ஏற்கனவே தங்கள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட 21.08.2018 முதல் 05.09.2018 வரையிலான Call details record குன்றத்தூர் காவல் நிலைய ஆய்வாளரால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65-Bன் படி சான்றிதழ் வழங்க கோரியதன் பேரில் RJIO/TN/NODAL/65B/2331 dated 14.10.2023 -ன் படி பிரிவு 65-B படியான சான்றிதழ் வழங்கினார். அந்த சான்றிதழ் தான் அ.த.சா.ஆ.32.

அ.சா- **25 :-** திரு.வேலு தற்போது டி5 குன்றத்தூர் காவல்நிலையத்தில் சட்டம் ஒழுங்கு பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார். குன்றத்தூர் காவல்நிலைய குற்ற எண்.1101/2018 U/s.302, 120(b) r/w 109 of IPC வழக்கானது மகிளிர் நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்த நிலையில் இவ்வழக்கின் விடுபட்ட ஆவணங்களை சரிசெய்ய Scientific Officer தடவியல் துறை, கணினி தடவியல் துறை சென்னை அவர்களால் TF.,8741/2018 CF 107/2018 Date: 26.11.2018 ன்படி பகுப்பாய்வு அறிக்கை மற்றும்

குறுந்தகடு ஆகியவைகள் பெறப்பட்டு ஏற்கனவே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பகுப்பாய்வு அறிக்கைக்கு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65பி ன்படி சான்றிதழ் வழங்குமாறு 14.12.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. மேலும் இந்த பகுப்பாய்வு அறிவியல் அலுவலராக இருந்த தற்போது அதே பிரிவில் பணிபுரிந்து வரும் திருமதி. Hemalatha, அவர்களால் 27.12.2023 அன்று 65 பி சான்றிதழ் வழங்கினார். அவரை 29.12.2023 அன்று விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். மேலும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி அபிராமி கைப்பேசி எண்ணான 9080015891 மற்றும் மற்றொரு எதிரியான மீனாட்சி சுந்தரம் என்பவரின் கைப்பேசி எண்ணான 8825633655 என்ற எண்ணிற்கும் ஏற்கனவே ரிலயன்ஸ் ஜியோ நிறுவனத்தால் 21.8.2018 முதல் 5.9.2018 வரையிலான சீ.டி.ஆர் வழங்கியது சம்பந்தமாக இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65பி ன்படி சான்றிதழ் வழங்குமாறு 11.10.2023 அன்று கடிதம் மூலம் கோரப்பட்டதில் அந்த நிறுவனத்தின் Nodal Officer திரு கைலாசம் அவர்களால் 65பி சான்றிதழ் வழங்கப்பட்டது. அவரை 11.12.2023 அன்று விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். அதேபோல் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி மீனாட்சி சுந்தரம் என்பவரின் மற்றொரு கைப்பேசி எண்ணான 9159914765 என்ற Vodofone நிறுவனத்தின் Nodal Officer திரு சுனீல் என்பவருக்கு 21.8.2018 முதல் 5.9.2019 வரை பெறப்பட்ட சீ.டி.ஆர் ஏற்கனவே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட CDR க்கு 65பி சான்றிதழ் கேட்டபோது தன்னுடைய அலுவலகத்தில் இதற்கான பதிவு தகவல் எதுவும் இல்லை என்பதால் தர மறுத்துவிட்டார். இவரை 8.12.2023 அன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

மேற்படி அனைத்து ஆவணங்களையும் பெற்று 22.1.2024 அன்று Crpc.173(8) ன் கீழ் கூடுதல் அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

6. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றுகின்ற சாராம்சங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவப்பட்டபோது பொய் வழக்கு என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளனர். பின்னர் வழக்கு விசாரணை முடிக்கப்பட்டு இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது.

7. இவ்வழக்கில் அரசு தரப்பில் 29 சாட்சிகள் பட்டியலிடப்பட்டிருந்தாலும் அ.சா.1 முதல் அ.சா.25 வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.32 வரை சான்றாவணங்கள்குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுப்பொருள்கள் சா.பொ.1 முதல் சா.பொ.8 குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் எ.த.சா.1 முதல் எ.த.சா. 6 வரையிலான 6 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு எ.த.சா.ஆ.1 முதல் எ.த.சா.ஆ.26 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்

இவ்வழக்கு 1 மற்றும் 2 எதிரிகளின் மீதான இ.த.ச. பிரிவு 120(பி) உடன் இணைந்த இ.த.ச.பிரிவு 302 ன்படியான குற்றச்சாட்டுகளும் , 1 வது எதிரியின் மீதான இ.த.ச. பிரிவு 302( 2 எண்ணிக்கை) மற்றும் 2 வது எதிரியின் மீதான இ.த.ச. பிரிவு 302 உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 109 ( 2 எண்ணிக்கை) ஆகியவற்றின்படியான

குற்றச்சாட்டுகளும் அரசு தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

9. பிரச்சனைக்கு தீர்வு

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கு எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவேண்டியது அரசுத்தரப்பின் கடமையாகும்.

10. இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்வைக்கப்படும் வாதம் பின்வருமாறு அமைந்துள்ளது:

இவ்வழக்கு 1 மற்றும் 2 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 120(பி) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302மற்றும் 1 வதுஎதிரியின் மீது இ.த.ச. பிரிவு 302( 2 எண்ணிக்கை), 2வது எதிரி மீது இ.த.ச. பிரிவு 302 உ/இ இ.த.ச. பிரிவு 109 ( 2 எண்ணிக்கை)ன்படி குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கு எதிரிகள் இருவர் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.25 வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டிருப்பதாகவும் அ.த.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.32 வரை சான்றாவணங்கள் மற்றும் சா.பொ.1 முதல் சா.பொ.8 வரை சான்றுப்பொருட்கள் குறியீடு செய்யப்பட்டிருப்பதாகவும் எதிரிகள் தரப்பில் எ.சா.1 முதல் எ.சா. 6 என 6 சாட்சிகள் விசாரிக்கப்பட்டிருப்பதாகவும் எ.சா.ஆ.1 முதல் எ.த.சா.ஆ.26 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அரசு தரப்பு வழக்கு சூழ்நிலை சாட்சியத்தின் அடிப்படையில் அமைந்த வழக்கு எனவும்

சூழ்நிலை சாட்சியங்கள் இந்த வழக்கு எதிரிகளின் குற்றத்தன்மையோடு பொருந்தி வருவதாகவும் எடுத்துரைக்கப்படுகிறது.

இவ்வழக்கில் உள்ள 1 வது எதிரி அபராமிக்கும் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட அ.சா.1 விஜய் என்பவருக்கும் 08.11.2011 அன்று திருமணம் நடைபெற்று அஜய் என்ற ஆண் குழந்தையும் அதன் பிறகு கார்னிகா என்ற பெண் குழந்தையும் இருவருக்குமிடையே ஏற்பட்ட தாம்பத்ய உறவின் காரணமாக பிறந்தனர். கொலை செய்யப்பட்டு இறந்துபோன அஜய்க்கு மரணம் நேர்ந்தபோது 6 வயது. கொலை செய்யப்பட்டு இறந்துபோன பெண் குழந்தை கார்னிகாவுக்கு சம்பவத்தின்போது நான்கு வயது.

1வது எதிரி அபிராமி 2வது எதிரி மீனாட்சி சுந்தரத்துடன் சட்டவிரோதமான வகையில் திருமணத்திற்கு அப்பாற்பட்ட உறவில் இருந்து வந்ததாகவும் இந்த விவரம் அ.சா.1 விஜய்க்கு தெரிந்தவுடன் அ.சா.1, 1வது எதிரி அபிராமியை கண்டித்ததால் 1 வது எதிரி அபிராமி 2 வது எதிரி மீனாட்சி சுந்தரத்தின் வீட்டிற்கு சென்று அங்கு தங்கியதாகவும் அ.சா.1 விஜய்யும் அவரது உறவினர்களும் 2 வது எதிரியின் வீட்டை குழந்தை அஜய் அடையாளம் காட்ட கண்டுபிடித்ததாகவும் உறவினர்களும் அ.சா.1 விஜயும் 1 வது எதிரி அபிராமியிடம் பேசி அபிராமியை இல்லத்திற்கு அழைத்து வந்ததாகவும் அது முதல் 1 வது எதிரி குழந்தை அஜய் மீது விரோதம் கொண்டதாகவும் குழந்தைகள் இருவரும் தனக்கும் 2வது எதிரிக்குமான ஆன சட்டவிரோத உறவுக்கு இடையூறாக இருப்பதாக 1வது எதிரி கருதியதாகவும் அதேபோல் 2வது எதிரி மீனாட்சி சுந்தரமும் எண்ணி குழந்தைகள் அஜய் மற்றும் கார்னிகா ஆகியோரை கொலை செய்ய

இருவரும் குற்றமுறு சதி திட்டம் தீட்டியதாகவும் அரசு தரப்பில் எடுத்துரைக்கப்படுகிறது.

எதிரிகள் இருவரும் தீட்டிய குற்றமுறு சதித்திட்டத்தின் அடிபபடையில் 30.08.2018 அன்று அந்த கெடுவிளைவை ஏற்படுத்திய நாளில் 2 வது எதிரியின் தூண்டுதலின்பேரில் 1 வது எதிரி அபிராமி குழந்தை அஜய்க்கு பாலில் Lorazepam மாத்திரைகளை கலந்து கொடுத்ததாகவும் அதேபோல் குழந்தை கார்னிகாவுக்கு பாலில் Alprazolam மாத்திரைகளை கலந்து குடிக்கக்கொடுத்ததாகவும் பிறகு குழந்தைகள் இருவரும் பாலோடு மருந்துகள் கொடுத்ததினால் ஏற்பட்ட விளைவுகளினால் மயங்கிக்கிடந்த நிலையில் 31.08.2018 அன்று அதிகாலையில் 1 வது எதிரி குழந்தை கார்னிகாவின் வாயையும் முகத்தையும் மூடி மூச்சை அடக்கி கொலை செய்ததாகவும் அதே விதத்தில் குற்ற நடவடிக்கையை செயல்படுத்தி 1வது குழந்தை அஜய்யின் வாயையும் முகத்தையும் மூடி மூச்சை அடக்கி ஆஜய்யையும் கொலை செய்ததாகவும் எனவே 1 வது எதிரி மீது இ.த.ச. பிரிவு 302( 2 எண்ணிக்கை) மற்றும் 2 வது எதிரியின் மீது இ.த.ச. பிரிவு 302 உ/இ பிரிவு109 (2 எண்ணிக்கைகள்) கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டிருப்பதாகவும் அ்நத குற்றச்சாட்டுகளின் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு அரசு தரப்பில் நன்கு அவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளது என எடுத்துரைக்கப்படுகிறது.

<u>குழந்தைகள் அஜய் மற்றும் கார்னிகாவுக்கு ஏற்பட்ட மரணம் கொலையாகும் மரணம் விளைவிக்கப்படும் குற்றம் என அரசு தரப்பில் முன்வைக்கப்படும் வாதம்:</u>

குழந்தைகள் இருவருக்கு விளைவிக்கப்பட்ட மரணம் மாத்திரைகளை அளித்து குழந்தைகளை மயக்கமுறச்செய்து பிறகு 1 வது எதிரி குழந்தை கார்னிகாவின் வாயை மூக்கை அழுத்தி மூச்சடக்கச் செய்தும் அதேபோல் குழந்தை அஜய்யின் வாயையும் மூக்கையும் அழுத்தி மூச்சடக்கச் செய்தும் ஏற்பட்டிருக்கிறது என்பதை நிரூபிப்பதற்கு அ.சா.13 ஆக மருத்துவர் பிரியா விசாரிக்கப்பட்டிருப்பதாகவும் அதேபோல் அ.சா.12 ஆக தடய அறிவியல் துறை நஞ்சியல் பிரிவு அலுவலர் திருமதி. பூர்விஷாரவி என்பவர் விசாரிக்கப்பட்டிருப்பதாகவும் அ.சா.13 ஆக விசாரிக்கப்படட்ட பிரியா தனது சாட்சியத்தில் நஞ்சியல் பிரிவிலிருந்து தனக்கு ஆய்வறிக்கை வந்தது குறித்தும் அதில் அஜய்யின் வயிறு, குடல் மற்றும் சிறுநீரகம் ஆகியவற்றில் Lorazepam என்ற மருந்து கண்டறியப்பட்டதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது குறித்தும் சாட்சியம் அளித்து தன்னுடைய உடற்கூறுகள் குறித்த ஆய்வறிக்கையில் தான் Due to systematic absorption of the drug ( Lorazepam consumed ) என அறிக்கை வழங்கியிருப்பதாகவும் அதேபோல் குழந்தை கார்னிகாவின் வயிறு, குடல் மற்றும் சிறுநீரகம் ஆகியவற்றில் Alprazolam என்ற மருந்து கண்டறியப்பட்டதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது குறித்தும் தன்னுடைய உடற்கூறுகள் குறித்த ஆய்வறிக்கையில் தான் Due to systematic absorption of the drug ( Alprazolam consumed ) என அறிக்கை வழங்கியிருப்பதாக சாடசியம் அளித்திருப்பதாகவும் அ.சா.12 ஆக விசாரிக்கப்பட்ட தடயஅ றிவியல் துறை நஞ்சியல் பிரிவுஅலுவலர் இறந்துபோன அஜய் என்பவருக்கு Lorazepam மருந்து அவரது வயிறு , குடல் சிறுநீரகம் ஆகியவற்றில் கண்டறியப்பட்டது குறித்தும் தான் அ.சா.ஆ.12 அறிக்கை வழங்கியது குறித்தும்

இறந்துபோன கார்னிகா என்பவருக்கு Alprazolam மருந்து அவரது வயிறு , குடல் சிறுநீரகம் ஆகியவற்றில் கண்டறியப்பட்டது குறித்தும் தான் அ.சா.ஆ.13 அறிக்கை வழங்கியது குறித்தும் சாட்சியமளித்திருப்பதாகவும் இதிலிருந்து குழந்தை அஜய்க்கு Lorazepam மருந்து அளிக்கப்பட்டும் அதேபோல் குழந்தை கார்னிகாவுக்கு Alprazolam மருந்து அளிக்கப்பட்டும் மரணம் விளைவிக்கப்பட்டது அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது என எடுத்துரைக்கப்படுகிறது.

<u>இந்த வழக்கில் குற்ற எண்ணம் மற்றும் குற்றமுறு சதி எதிரிகளுக்கு இருந்தது என்பது குறித்து அரசு தரப்பில் முன் வைக்கப்படும் வாதம் :</u>

1 மற்றும் 2 எதிரிகளுக்கிடையே திருமணத்திற்கு அப்பாற்பட்ட சட்டவிரோதமான உடல் ரீதியான உறவு இருந்து வந்ததாகவும் இது குறித்து நிரூபிக்க அரசு தரப்பில் 1வது எதிரி அபிராமியின் வீட்டிற்கு கீழ் பகுதியில் வசிக்கும் கவிதா ராமகிருஷ்ணன் என்பவர் விசாரிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தன்னுடைய சாட்சியத்தில் 2 வது எதிரி முதல் எதிரியிடம் தான் சொன்னதை போல் மாத்திரைகள் கலந்து கொடுத்துவிட்டு தனக்கு தகவல் சொல் என சொன்னார் என்றும் அதை தான் கேட்டேன் எனவும் அப்போது தான் அ.சா.1 விடம் ஏன்? என்ன ஆச்சு எதற்காக மாத்திரை கலந்து கொடுக்கவேண்டும் என கேட்டேன்எனவும் அதற்கு அபிராமி தன்னுடைய குழந்தைகளுக்கு உடல்நிலை சரியில்லை அதற்காக மருந்து கொடுக்க வேண்டும் என்று சொன்னார் என்றும் சாட்சியமளித்திருப்பதாகவும் மேலும் 2 வது எதிரி அபிராமியின் வீட்டிற்கு 2 முறை வந்து சென்றதை தான் பார்த்தாகவும் உனக்கு 2 குழந்தைகள் இருக்கிறது உன் கணவர் இல்லாத நேரத்தில் 2ம் எதிரி வந்து போகக்கூடாது என்று தான் கூறினேன் எனவும்

அபிராமி 2 வது எதிரியின் வீட்டில் ஒரு நாள் இரவு ஒரு பகல் அங்கு தங்கி பிறகு அபிராமியின் கணவர் விஜயும் அவரது அப்பாவும் தம்பியும் பேசி 2 நாட்கள் கழித்து வீட்டிற்கு கூட்டி வந்தது குறித்தும் தான் இது குறித்து அபிராமிக்கு அறிவுரை வழங்கியது குறித்தும்அ. சா.2 சாட்சியமளித்திருப்பதாகவும் அ.சா.2ன் சாட்சியம் 1,2 எதிரிகளுக்குமிடையே இருந்த தகாத உறவு குறித்தும் அவர்கள் குழந்தைகளை மருந்துகளை கொடுத்து கொலை செய்ய குற்றமுறு சதித்திட்டம் தீட்டியது குறித்தும் தெரியப்படுத்துவதாகவும் அரசு தரப்பில் கூறப்படுகிறது. 1,2 எதிரிகளின் கு.வி.மு.ச. பிரிவு 313 ன் அடிப்படையில் அவர்களுக்கு எதிரான சாட்சியங்கள் குறித்து கேள்வி கேட்டபோது தாங்கள் இருவரும் ஒருவரையொருவர் அறியாதவர்கள் என அவர்கள் எந்தவிதமான பதிலும் அளிக்கவில்லை எனவும் அரசு தரப்பில் கூறப்படுகிறது.

<u>அரசுத்தரப்பில் மேலும் கூறப்படுவதாவது:</u>

1வது எதிரியின் கணவர் தான் அ.சா.1 விஜய். அவர் தன்னுடைய சாட்சியத்தில் 1,2 எதிரிகளுக்கடையே இருந்த சட்டவிரோத உறவுகுறித்தும் 1 வது எதிரியை தான் கண்டித்ததால் 1 வது எதிரி 2 வது எதிரியின் வீட்டிற்கு சென்று அங்கு தங்கி இருந்தது குறித்தும் குழந்தை அஜய் 2வது எதிரியின் வீட்டை அடையாளம் காண்பித்தது குறித்தும் பிறகு அ.சா.1ம் அவரது உறவினர்களும் அபிராமியை சமாதானப்படுத்தியது குறித்தும் மீண்டும் அ.சா.1 விஜய் அபிராமியை வீட்டிற்கு அழைத்து வந்தது குறித்தும் சாட்சியமளித்திருக்கிறார். இவ்வழக்கு விசாரணை அதிகாரி 1 மற்றும் 2 எதிரிகளுக்கு சொந்தமான செல்போன்களை கைப்பற்றியிருக்கிறார். புகாரில் செல்போன் கைப்பற்றப்பட்டது அ.சா.9 விஜயன் மற்றும் அ.சா.11 ரமேஷ் ஆகிய சாட்சிகள் மூலம்

நிரூபிக்கப்பட்டுள்ளது. 1 வது எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட சாமசங் செல்போன் சா.பொ.7 ஆகவும் 2 வது எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட Gionic செல்போன் சா.பொ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த 2 செல்போன்களும் தடய அறிவியல் துறை ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அ.சா.16 ஜமுனாசிவசங்கரன் ,சா.பொ.6 மற்றும் சா.பொ.7 ஆகிய செல்போன்களை ஆய்வு செய்து அ.சா.ஆ.17 அறிக்கை மற்றும் அ.சா.ஆ.18 C.D. ஐ வழங்கியிருக்கிறார். அந்த சி.டி. யில் 4 பகுதிகள் 18A, 18B. 18C, 18D என உள்ளது. அந்த 4 பகுதிகளிலுமே 1,2 எதிரிகளுக்கிடையே நடைபெற்ற வாய்மொழி உரையாடல்கள் மற்றும் காணொளி உரையாடல்கள் மற்றும் வாட்ஸ் ஆப் மூலம் பரிமாறிக்கொள்ளப்பட்ட செய்திகள் மற்றும் குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டது மற்றும் பெறப்பட்டது , அழைப்புகள் அனுப்பி வைக்கப்பட்டது மற்றும் பெறப்பட்டது ஆகியவை குறித்து தெளிவான விதத்தில் சாட்சியம் அமைந்திருப்பதாகவும் இந்த வாய்மொழி உரையாடல்கள் மற்றும் காணொளி காட்சிகள் 1 மற்றும்2 எதிரிகளுக்கிடையே சட்டவிரோதமான உறவு இருந்தது குறித்தும் குழந்தைகள் அதற்கு இடையூறாக இருந்த காரணத்தால் அவர்களது வாழ்வை முடிக்க வேண்டும் என எதிரிகள் இருவரும் திட்டமிட்டு குழந்தைகளுக்கு மரணம் ஏற்படுத்தியது குறித்தும் அறிந்துகொள்ள உதவும் எனவும் எனவே அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களின் சாட்சியத்தின் மூலமும் அறிவியல் ரீதியான தொழில்நுட்ப சாட்சியங்கள் மூலமும் குறிப்பாக அ.சா.ஆ.18, 18A, 18B. 18C, 18D ஆகியவற்றின் மூலமாக அரசு தரப்பு எதிரிகளின் குற்ற எண்ணத்தையும் குற்றச்சாட்டுகளையும் நிரூபித்துள்ளதாக வாதிடப்படுகிறது.

1வது எதிரி குழந்தைகட்கு மாத்திரைகள் கலந்த மருந்தை பருகச் செய்தது

சென்னை-128, மூன்றாம் கட்டளை, கதவிலக்கம் 2 , அக்னீஸ்வரன் கோயில் தெருவில் அ.சா.1ம் 1வது எதிரியும் 2 குழந்தைகளும் மட்டுமே வசித்து வந்தார்கள் என்பது மறுக்கப்படாத பொருண்மை. அந்த துன்பகரமான நாளில் 30.08.2018ல் 1 வது எதிரி குழந்தைகளுக்கு பாலை அருந்தக் கொடுக்கிறார். இதை அ.சா.1 விஜய் பார்த்துள்ளார். 01.09.2018 அன்று அதிகாலையில் அ.சா.1 விஜய் 1 வது எதிரியின் சகோதரர் பிரசன்ன மணிகண்டனுடன் தன்னுடைய வீட்டிற்கு வந்தபோது குழந்தைகள் இறந்துபோய் இருப்பதை அ.சா.1 விஜய் பார்க்கிறார். ஆனால் 1 வது எதிரி அபிராமி அந்த வீட்டில் இல்லை. அ.சா.1ம் 1வது எதிரியின் சகோதரரும் 2வது எதிரியின் வீட்டிற்கு சென்றபோது அங்கு 1 வது எதிரியோ 2 வது எதிரியோ காணப்படவில்லை. குழந்தைகளின் தாயாரான 1வது எதிரி மருந்துகள் கலந்த பாலை குழந்தைகளுக்கு கொடுக்கவில்லை என்றால் அவர் குழந்தைகளை சாகவிட்டுவிட்டு தன்னுடைய வீட்டிலிருந்து தப்பிச் சென்றிருக்கமாட்டார்.

1வது எதிரி நாகர்கோவிலுக்கு தப்பிச்சென்றது

1வது எதிரி தன்னுடைய குழந்தைகள் இருவரையும் கொன்றுவிட்ட பிறகு நாகர்கோவிலுக்கு தப்பிச் சென்று 2 வது எதிரியிடம் செல்போன் மூலமாக தொடர்பு கொண்டுள்ளார். இது சம்மந்தமாக அரசு தரப்பில் அ.சா.8 ஆக காருண்யா விடுதியின் சமையலர் திருமதி. பிந்து என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் 01.09.2018 அன்று காலை 7.00 மணிக்கு அபிராமி தன் விடுதிக்கு வந்தது குறித்தும் தங்களுடைய விடுதியில் தங்க அறை வேண்டும் என கேட்டது

குறித்தும் அதற்கு தான் தங்களுடைய மேடம் கிளாடிஸ்கில்டா வெளியே போய் இருப்பதாகவும் மாலை 5.00 மணிக்கு வருவேன் என்று சொன்னதாகவும் குளிக்க ஏற்பாடு செய்து கொடுக்க அபிராமி கேட்டதற்கு தான் மேடத்தை கேட்டுவிட்டு குளிக்க ஏற்பாடு செய்தது குறித்தும் மாடியில் குளிப்பதற்கு போய் அப்படியே கீழே வந்து தங்களிடம் சொல்லாமல் விடுதியை விட்டு சென்றுவிட்டதாகவும் மேலும் செய்தித்தாளைப் பார்த்துவிட்டு தான் அபிராமி கொலை வழக்கில் சம்மந்தப்பட்டிருக்கிறார் என தாங்கள் தெரிந்துகொண்டோம் என்று குறிப்பிட்டிருப்பதாகவும் 02.11.2018 அன்று குன்றத்தூர் ஆய்வாளர் நாகர்கோவிலில் உள்ள தங்கள் விடுதிக்கு வந்து விசாரணைக்காக வந்திருப்பது குறித்து கூறி புகைப்படத்தைக் காட்டி ஆய்வாளர் விசாரணை செய்தது குறித்தும் அ.சா.8 பிந்து சாட்சியமளித்திருக்கிறார். அவர் 1 வது எதிரி அபிராமியை, இவர் தான் நாகர்கோவில் வந்து தங்கள் விடுதியில் வந்து தங்க அறை கேட்ட நபர் எனவும் அடையாளம் காட்டியுள்ளார்.

அ.சா.8 பிந்து ஒரு தனிப்பட்ட சாட்சி. அவருக்கு 1 வது எதிரி மீது தனிப்பட்ட விரோதம் கிடையாது. அ.சா.8 ஐ பொருத்தவரையில் அவருக்கு இந்த வழக்கு குறித்து தனிப்பட்ட அக்கறை எதுவும் கிடையாது. எனவே அவரது சாட்சியத்தை இந்த நீதிமன்றம் நன்கு கருத்தில் கொள்ளலாம் எனவும் அ.சா.8ன் சாட்சியத்தின் மூலம் , தங்களுடைய சதித்திட்டத்தை நிறைவேற்றிய பிறகு 1 வது எதிரி நாகர்கோவிலுக்கு தப்பித்துச் சென்றது தெரிய வரும் எனவும் முதல் எதிரியின் மேற்சொன்ன தப்பிச்

செல்லல் நடவடிக்கைகள் அவருக்கு எதிரான திடமான சாட்சியம் எனவும் அது அவரது குற்ற எண்ணத்தை வெளிப்படுத்தும் எனவும் எடுத்துரைக்கப்படுகிறது.

சா.பொ.8 வாகனம் கைப்பற்றப்பட்டது

தன்னுடைய சதித்திட்டத்தை நிறைவேற்றிய பிறகு 1வது எதிரி ஸ்கூட்டி என்ற இரு சக்கர வாகனத்தின் மூலம் கோயம்பேடு பேருந்து நிலையத்திற்கு சென்று டி.என்.85 சி 9360 என்ற பதிவெண் கொண்ட அந்த ஸ்கூட்டி இரு சக்கர வாகனத்தை அங்கே வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்திவிட்டு நாகர்கோவிலுக்கு தப்பிச்சென்றுள்ளார். அரசு தரப்பில் அ.சா.7 ஆக கோயம்பேடு வாகன நிறுத்துமிடத்தின் பொறுப்பாளர் கோபாலகிருஷ்ணன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் 1 வது எதிரி வாகன நிறுத்துமிடத்தில் வாகனத்தை உள்ளே விடுவது குறித்து தங்களுடைய சி.சி.டி.வி கேமராவில் இருந்த பதிவு குறித்த பதிவை தான் தங்களுடைய சிஸ்டமில் தேடி வாகன பதிவு எண். டி.என்.85 சி 9360 என்கற வாகனத்தை 31.08.2018 அன்று மாலை 4.45 மணிக்கு 1 வது எதிரி அபிராமி அங்கு கொண்டுவந்து விட்டுச் சென்றது குறித்து பதிவாகிய பதிவுகளை தான் காவல் ஆய்வாளரிடம் அளித்ததாகவும் அது தான் சா.பொ.5 எனவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.7 ஒரு தனிப்பட்ட சாட்சி. அவருக்கு 1 வது எதிரி மீது பகை அல்லது வெறுப்பு கிடையாது.

சா.பொ.8 இரு சக்கர வாகனம் அபிராமி உபயோகப்படுத்தியது குறித்து மறுப்பு தெரிவிக்கப்படவில்லை. அ.சா.7 கோபாலகிருஷ்ணனின் சாட்சியம் குழந்தைகள் இருவரையும் கொலை செய்துவிட்டு பிறகு 1 வது எதிரி தனது இரு சக்கர வாகனத்தை கோயம்பேடு வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்திவிட்டு 31.08.2018 அன்று மாலை 4.45

மணக்கு தப்பிச் சென்றது குறித்து தெளிவுபடுத்துவதாகவும் சம்பவத்திற்கு பிறகு இது நடைபெற்றதாகவும் சம்பவ நேரம் தப்பிச் சென்ற நேரம் ஒன்றுக்கொன்று தொடர்புடையது எனவும் 1வது எதிரி சொந்தக் குழந்தைகளை சாகடித்துவிட்டு தப்பிச்சென்ற சம்பவத்திற்கு பிந்தைய நடவடிக்கைகள் எதிரிகளுக்கு எதிரான வலுான சாட்சியம் எனவும் அரசு தரப்பில் கூறப்படுகிறது.

<u>கோயம்பேட்டில் 1 மற்றும் 2 எதிரிகள் கைதுசெய்யப்பட்டது</u>

02.09.2018 அன்று காலை 6.00 மணிக்கு 1 வது எதிரி 2வது எதிரியை தனது வாகனத்தில் ஏற்றிக்கொண்டு வாகன நிறுத்துமிடத்திலிருந்து வெளியேறுகிறார். அப்போது காவல் துறையினரைப் பார்த்துவிட்டு 1,2 எதிரிகள் தங்களது அந்த வாகனத்திதன் மூலம் தப்பிச் செல்ல முற்படுகிறார்கள். ஆனால் 2 வது எதிரி கீழே விழுந்து காயம் ஏற்படுத்திக்கொள்கிறார். உடனே காவல் துறையினர் 1 மற்றும் 2 எதிரிகளை பிடித்துக்கொள்கிறார்கள். இது குறித்து அரசுத்தரப்பில் அ.சா.9 ஆக விசாரிக்கப்பட்ட விஜயன் மற்றும் அ.சா.11 ஆக விசாரிக்கப்பட்ட ரமேஷ் ஆகியோர் 1 மற்றும் 2எதிரிகள் இரு சக்கர வாகனத்தில் தப்பிக்க முற்பட்டது குறித்து தெளிவான விதத்தில் சாட்சியமளித்துள்ளனர். அ.சா.9 மற்றும் அ.சா.11 ஆகியோர் அளித்துள்ள சாட்சியம் சம்பத்திற்கு 2 நாட்கள் கழித்து 02.09.2018 அன்று காலை 6.00 மணிக்கு 1 மற்றும் 2 எதிரிகள் இருவரும் ஒன்றாக கோயம்பேட்டில் இருசக்கர வாகன நிறுத்துமிடத்தில் இருந்து அவர்களை பார்த்த காவல்துறையினர் கைது செய்ய முற்பட்டபோது சா.பொ8 இருசக்கர வாகனம் மூலம் அவர்கள் தப்பிச் செல்ல முற்பட்டது

குறித்து தெளிவாக அமைந்திருப்பதாகவும் எனவே 1 மற்றும் 2 எதிரிகள் தான் குற்ற சம்பவத்திற்கு காரணம் என தெரியவரும் என அரசுத்தரப்பில் கூறப்படுகிறது.

<u>1வது எதிரி மாத்திரை வாங்கியது குறித்து அரசுத்தரப்பில் நிரூபணம்</u>

குழந்தைகள் இருவரும் 1வது எதிரி அளிக்கும் பாலை அருந்துவார்கள். இறந்துபோன குழந்தைகள் அஜய்க்கு 6 வயது, கார்னிகாவுக்கு 4 வயது. அவர்கள் இருவரும் தாங்களாகவே பாலில் மாத்திரையை கலக்கி அருந்தமாட்டார்கள். எனவே, 1வது எதிரிக்கு தான் மாத்திரைகள் கலந்த பாலை குழந்தைகளுக்கு அளிக்கச் செய்யும் வாய்ப்பு உள்ளது. குழந்தைகள் தங்களுடைய தாயார் தங்களை கொலை செய்வதற்காக தான் மாத்திரைகள் கலந்த பாலை தங்களுக்கு அளிப்பார் என ஒருபோதும் நினைத்திருக்கமாட்டார்ள். அவர்கள் 2வது எதிரியோடு தகாத உறவு வைத்துக்கொண்ட 1வது எதிரி செய்த குற்றமுறு சதியின் காரணமாக ஏதுமறியாமல் மாத்திரைகள் கலந்த பாலை பருகி பலியாகி இருக்கிறார்கள். 1வது எதிரியை தவிர்த்து அ.சா.1 விஜய் தான் அந்த வீட்டில் இருந்தவர். அவருக்கு குழந்தைகளை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் கிடையாது. அ.சா.1க்கு குழந்தைகளை கொலை செய்யவேண்டும் என்ற எண்ணம் இருந்ததாக எதிரிகள் தரப்பில் எந்தவிதமான கருப்பொருள் சார்ந்த அம்சங்களையும் முன் வைக்கவில்லை. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களின் சாட்சியத்தின் மூலமும் அறிவியல் ரீதியான சாட்சியத்தின் மூலமும் 2 வது எதிரி தான் 1வது எதிரியை தூண்டி இருவரும் சேர்ந்து சதி செய்து குழந்தைகளுக்கு பாலில் மாத்திரைகளை கொடுத்து கொலை செய்தார்கள் என்பது அரசுத்தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

1 வது எதிரி சென்னை கோவூர்,சிக்கராயபுரம் , ராகவேந்திரா் நகரில் அமைந்துள்ள மணி மருந்தகத்தில் இருந்து மாத்திரைகளை வாங்கியுள்ளார். அந்த மணி மருந்தகத்தை நடத்தி வரும் செந்தில் என்பவர் அ.சா.4 ஆக விசாாிக்கப்பட்டு அவா் 1வது எதிரி மாத்திரைகளை வாங்கியது குறித்து சாட்சியமளித்துள்ளார். 1வது எதிரியை கொலை செய்த பிறகு 1வது எதிரி தான் அந்த மருந்தகத்தை அடையாளம் காட்டி அந்த மருந்தகத்தின் 30.08.2018 தேதியிட்ட விற்பனை இரசீது எண்.5263 என்ற இரசீதை விசாரணை அதிகாரி கைப்பற்றியுள்ளாா். மருந்து வாங்கிய 30.08.2018 அன்று தான் பாலில் மாத்திரைகள் கலந்து 1வது எதிரி அபிராமி குழந்தைகளை கொலை செய்துள்ளார். அ.சா.4 செந்தில் அபிராமி மருந்து சீட்டு கொடுத்து மருந்து கேட்டது குறித்தும் தான் மருந்து கொடுத்தது குறித்தும் சாட்சியமளித்துள்ளதிலிருந்து 30.08.2018 ஆகிய சம்பவ நாளில் 1வது எதிரி அ.சா.4 செந்தில் என்பவரிடம் மருந்து வாங்கியது அரசுத்தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. சா.பொ.1 ஆக அ.சா.4 செந்தில் மூலம் மருந்து இரசீதின் கார்பன் நகல் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>மருந்துகள் கைப்பற்றியது குறித்து அரசு தரப்பில் நிரூபணம்</u>

02.0-9.2018 அன்று காலை 11.50 மணி அளவில் முதல் எதிரி அபிராமியிடமிருந்து கைப்பற்றுதல் மகசா் மூலம் கைப்பற்றப்பட்ட அட்டைகளை அ.சா.6 சரவணகுமாா் அ.சா.10 கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலையில் எடுத்து ஆஜர்படுத்தியுள்ளார். அந்த அ.சா.6 சரவணகுமாரும், அ.சா.10 கார்த்திகேயனும் 1வது எதிரியின் உறவினா்களே தவிர வேறு யாரும் கிடையாது. அவா்கள் தங்களுடைய சாட்சியத்தில் அபிராமி தன்னுடைய வீட்டின் படுக்கை அறையிலிருந்து அந்த மருந்து

அட்டைகளை எடுத்து ஆஜர் செய்ததாக சாட்சியமளித்துள்ளனர். சா.பொ.2, சா.பொ.3 மற்றும் சா.பொ.4 ஆகியவை குறித்த அவர்களின் சாட்சியம் கவனிக்கத்தக்கது. அ.சா.6 சரவணகுமார் மற்றும் அ.சா.10 கார்த்திகேயன் ஆகியோரது சாட்சியம் குழந்தைகளை கொலை செய்ய 1 வது எதிரி மாத்திரைகளை பயன்படுத்தியது குறித்தும் அவை கைப்பற்றப்பட்டது குறித்தும் அரசுத்தரப்பில் நிரூபிக்க போதுமான சாட்சியமாக உள்ளது எனவும் 1 வது எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட மாத்திரைகள் வேதியியல் பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் வேதியியல் பகுப்பாய்வு அறிக்கையில் தான் 1வது எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட மாத்திரைகளில் Alprazolam என்ற மருந்துப்பொருள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது எனவும் இது குறித்து அ.சா.12 ஆக வேதியியல் தடய அறிவியல் துறை நஞ்சியல் பிரிவு அலுவலர் திருமதி.பூர்விஷாரவி விசாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தன்னுடைய சாட்சியத்தில் 2வது அயிட்டத்தில் ‘T’ Becalm 5 mg.மாத்திரையில் Alprazolam என்ற வேதிப்பொருள் இருந்து கண்டறியப்பட்டதை தெளிவுபடுத்தியிருப்பதாக அரசுத்தரப்பில் கூறப்படுகிறது.

<u>சாட்சிய சட்டம் பிரிவு 106ன் பொருந்துகை</u>

1வது எதிரி தனது கணவர் அ.சா.1 விஜய், மற்றும் குழந்தைகள் அஜய், கார்னிகா ஆகியோருடன் வசித்துவந்தார். அ.சா.1 விஜய்க்கு குழந்தைகளை கொலை செய்ய வேண்டும் அல்லது குழந்தைகளை விட்டுவிட்டு இருக்கவேண்டும் என எண்ணம் துளியும் கிடையாது. மாறாக 1 மற்றும் 2 எதிரிகளுக்கு குழந்தைகளை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணமும் நோக்கமும் இருந்தது போதுமான சாட்சியங்கள் மற்றும்

சான்றாவணங்கள் மூலம் தெரிய வருகிறது. அ.சா.1 விஜய் குழந்தைள் இறந்த பிறகு பணியில் இருந்துள்ளார். ஆனால் 1 மற்றும் 2 எதிரிகள் தான் உடனடியாக தப்பிச் சென்றுள்ளனர். 31.08.2018 அன்று அ.சா.1 தனது பணியின் காரணமாக குழந்தைகளை விட்டுவிட்டு சென்றபோது 1 வது எதிரி தான் குழந்தைகளோடு கடைசியாக இருந்தவர். 01.09.2018 அன்று அதிகாலை அ.சா.1 தன்னுடைய வீட்டிற்கு வந்தபோது குழந்தைகள் இருவரும் இறந்து கிடந்ததையும் 1வது எதிரி காணாமல் போனதையும் அறிந்து அதிர்ச்சி அடைந்துள்ளார், இறுதியாக எல்லாவற்றிற்கும் மேலாக, முத்தாய்ப்பாக 1வது எதிரி தான் குழந்தைகளுக்கு தாய் என்ற முறையில் தினமும் பால் கொடுத்து வருபவர் என்பது தெரிய வரும். 1வது எதிரிக்கு தான் Lorazepam , Alprazolam மருந்துகள் கலந்துகொடுத்தால் குழந்தைகள் பரிதவித்து மரணம் அடைவார்கள் என்பது தெரிந்து திட்டமிட்டே மரணம் விளைவித்திருக்கிறார்.

1வது எதிரி தான் தன்னோடு கடைசியாக இருந்த குழந்தைகள் எவ்வாறு இறந்தார்கள் என்பதை நன்கு அறிந்தவர் என்பதால் அவர் தான் குழந்தைகளின் இறப்பை விளக்க வேண்டும். குழந்தைகள் எந்த சூழந்நிலையில் எவ்வாறு மாத்திரைகள் கலந்த பாலை உண்டார்கள், எவ்வாறு குழந்தைகளுக்கு மரணம் நேர்ந்தது என்பது குறித்து விளக்கும் கடமை இந்த சாட்சிய சட்டம் பிரிவு 106ன்படி 1வது எதிரிக்கே உண்டு. 1வது எதிரி தரப்பில் இது குறித்த விளக்கம் இல்லாததே அரசுத்தரப்பு வழக்கை வலுப்படுத்தும் சூழ்நிலையாகும். மனிதர்கள் பொய் உரைக்கலாம், ஆனால் சூழல்கள் பொய் உரைக்காது. இந்த வழக்கில் அரசுத்தரப்பில் தவறாமல் எந்தவித அய்யத்திற்கும் அப்பாற்பட்டு 1 மற்றும் 2 எதிரிகளின்

குற்றச்செயல்கள் நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் அரசு தரப்பு சாட்சிகளை நீண்ட நீண்ட அளவில் குறுக்கு விசாரணை செய்தபோதும், அரசு தரப்பு சாட்சிகள் கருப்பொருள் சார்ந்த சாட்சியத்தில் முரண்பாடுகளை ஏற்படுத்தவில்லை. எதிரிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளும் சான்றாவணங்களும் இந்த வழக்கில் பிரச்சனைகளைத்தீர்க்க உதவக்கூடியவை கிடையாது. அந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் அரசு தரப்பு வழக்கின் உண்மைத் தன்மையை அசைக்கவில்லை. மேற்சொன்ன சூழ்நிலைகளிலிருந்து அரசு தரப்பில் 1 மற்றும் 2 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதை இந்நீதிமன்றம் கண்டுணாந்து 1 மற்றும் 2 எதிரிகளுக்கு சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ள அதிகபட்ச தண்டனை வழங்கி தண்டித்து நீதி வழங்கவேண்டும்.

<u>1வது எதிரி தரப்பில் முன் வைக்கப்படும் வாதம்</u>- மிக விரிவான விதத்தில் எழுத்துபூர்வமான வாதம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>அரசு தரப்பு சூழ்நிலைகளின் தொடர் சங்கிலியை இவ்வழக்கு எதிரிகளின் குற்றத்தன்மையோடு பொருத்தி, ஐயத்திற்கு அப்பாற்பட்டு எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கப்படாத நிலை இவ்வழக்கில் அமைந்துள்ளது என முன்வைக்கும் வாதம்</u>

குற்ற எண்ணம் எதிரிகளுக்கு இருந்தது என்பது அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை - என எடுத்துரைத்து அ.சா.ஆ.23ல் அ.சா.1 விஜய் 2 வது எதிரியோடு 1வது எதிரி கொண்ட கள்ளத் தொடர்பின் காரணமாக தன்னுடைய குழந்தைகள் அந்த தகாத உறவுக்கு இடையூறாக இருப்பதாக நினைத்து அவர்களை

தீர்த்துக்கட்ட நினைத்து 1வது எதிரி குழ்நதைகட்கு பாலில் நச்சு மருந்து கலந்து கொடுத்து கொலை செய்துவிட்டு 2வது எதிரியோடு தப்பி ஓடியதாக காணப்படுகிறது. இந்த குற்ற எண்ணம் அ.சா.1ன் முதல் விசாரணையில் வெளிப்படுத்தப்படவில்லை. 20 நாட்களுக்கு முன்பாக குன்றத்தூரில் உள்ள 2வது எதிரியின் வீட்டில் 1வது எதிரி தங்கி இருந்ததாகவும் அ.சா.1 இறந்துபோன குழந்தை அஜய் மற்றும் அபிராமியின் தந்தை சௌந்தரராஜனுடன் , சகோதரர் பிரசன்ன மணிகண்டன் ஆகியோருடன் சென்று 1வது எதிரியை சமாதானப்படுத்தி 1வது எதிரியின் தாயார் வீட்டருகே அமைந்த பெரியபணிச்சேரிக்கு அழைத்துச்சென்றதாகவும் அதன் பிறகுஅ.சா.1ன் வீட்டிற்கு குழந்தைகள் அஜய் மற்றும் கார்னிகாவோடு 1வது எதிரி திரும்பியதாகவும் கூறப்படுவதை தவிர்த்து வேறு எந்தவிதமான குற்ற எண்ணமும் எதிரிகளுக்கு இருந்ததாக அ.சா.1 கூறவில்லை.

இந்த வழக்கில் அரசு தரப்பில் 1 வது எதிரியின் தகப்பனார், சகோதரர், தாயார் ஆகியோர்களை விசாரிக்கவில்லை.

நீதிமன்றத்தில் சொன்ன விஷயங்களை தவிர்த்து 1வது எதிரிக்கும் தனக்கும் இடையே எந்தவிதமான பிரச்சனையும் இல்லை என்று அ.சா.1 தன்னுடைய குறுக்குவிசாரணையில் கூறியுள்ளார். அதேபோல் எந்தவிதமான கோபதாபங்களும் இல்லை என்றும் திருமண உறவு நன்றாகத்தான் இருந்ததாகவும் 1வது எதிரி சராசரி பெண்ணாகத்தான் இருந்ததாகவும் 1வதுஎதிரி தவறாக நடந்துகொண்டபோதிலும் கூட அ.சா.1 அவரோடு சேர்ந்து வாழத்தான் விரும்பியதாகவும் 1 மற்றும் 2 எதிரிகள் கள்ளத்தொடர்பில் இருந்ததை தான் நேரில் பார்க்கவில்லை என அ.சா.1

சாட்சியமளித்திருப்பதாகவும் அ.சா.1 ன் மகன் அஜய் ஒரு மாமாவின் வீட்டிற்கு 1வது எதிரி சென்று வருவதை வழக்கமாக கொண்டிருந்தார் என்று கூறியதை வைத்து தான் முடிவுக்கு வந்ததாகவும் அவரிடம் யாரும் 1 வது எதிரியை தவறாக நடந்துகொண்டதாக கூறியதில்லை என்றும் சந்தேகத்தின் அடிப்படையில் மட்டும் தான் அ.சா.1 குழந்தைகளின் நன்மைக்காக 1 வது எதிரியை சரியாக நடந்துகொள்ளும்படி எச்சரித்ததாகவும் பஞ்சாயத்து கூட்டியோ அல்லது வேறு நடவடிக்கைகளோ அ.சா.1, 1 வது எதிரி எதிரியின் செய்கை குறித்து மேற்கொள்ளவில்லை எனவும் 1 வது எதிரியோடு அவரது பெற்றோர்கள் மூலம் மட்டுமே பேசியதாகவும் அவர்களை தவிர்த்து வேறு நபர்களுக்கு சட்ட விரோதமாக உறவு இருந்தது தெரியாது எனவும் 2வது எதிரியின் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறுவதாகவும் இதிலிருந்து குற்ற எண்ணம் எதிரிகளுக்கு இருந்தது என்பதை அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என எடுத்துரைக்கப்படுகிறது.

<u>அரசு தரப்பில் 1மற்றும் 2 எதிரிகளின் தகாத உறவை நிருபிக்க 2வது எதிரியின் மனைவியை சாட்சியாக விசாரிக்காதது</u>

அ.சா.1 தன்னுடைய குறுக்கு விசாரணையில் தான் எந்தவிதமான நடவடிக்கைகளும் பஞ்சாயத்தும் காவல்துறையில் புகாரும் 2வது எதிரியின் வீட்டிலிருந்து 1வது எதிரியை அழைத்து வந்து பிறகு எடுக்கவில்லை என கூறியுள்ளதாகவும் அ.சாஆ.23 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுவதற்கு 20 நாட்களுக்கு முன்பு அவ்வாறு அழைத்து வந்ததாக கூறுவதும் அ.சா.1 தன்னுடைய புகாரிலேயோ அல்லது தன்னுடைய கு.வி.மு.ச பிரிவு 161 புகார் வாக்குமூலத்திலேயோ

இறந்துபோன குழந்தை அஜய்க்கு 2வது எதிரியின் வீடு அமைந்து இருக்கும் இடம் தெரியும் என எதுவும் கூறவில்லை.

அ.சா.2 தன்னுடைய முதல் விசாரணையில் 30.08.2018 அன்று மாலை 5.30லிருந்து 6.00 மணிக்குள் 2வது எதிரி 1வது எதிரியிடம் தான் சொல்லியபடி மாத்திரைகளை கலந்து கொடுத்து குழந்தைகளை முடித்துவிடு என பேசியதை கேட்டதாகவும் இது குறித்து அ.சா.2 கேட்டதற்கு 1வது எதிரி குழந்தைகளுக்கு உடல் நலம் சரியில்லை என்பதால் அவர்களுக்கு மருந்து அளிக்க வேண்டும் எனவும் 2வது எதிரி முதல் எதிரியின் குடும்ப நண்பர் எனவும் கூறியதாகவும் அ.சா.2 1வது எதிரிக்கு அறிவுவரை கூறியதாகவும் அ.சா.2 தன்னுடைய குறுக்கு விசாரணையில் 2 வது எதிரி அப்பாவி என ஒப்புக்கொண்டிருப்பதாகவும் அ.சா.2 தன்னுடைய குறுக்கு விசாரணையில் 1 மற்றும் 2 எதிரிகள் தங்களது படுக்கையை பகிர்ந்து கொண்டது குறித்து தான் பார்த்ததாக கூறவில்லை.

அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்ட சாட்சி முத்து 30.08.2018 மற்றும் 31.08.2018 ஆகிய தேதிகளில் அ.சா.1ன் வீட்டில் எந்தவிதமான பிரச்சனையும் இல்லை எனவும் ஒருபோதும் அவ்வாறு பிரச்சனை ஏற்படவில்லை எனவும் சம்பவம் நடந்ததாக கூறப்படும் நாள் அன்றும் எந்த பிரச்சனையும் இல்லை என கூறியிருப்பதாகவும் அ.சா.22 ஆக விசாரிக்கப்பட்ட இவ்வழக்கு விசாரணை அதிகாரி 1 மற்றும் 2 எதிரிகளின் தொலைபேசி அழைப்புகளையும் குற்ற ஏற்புரைகளையும் அடப்படையாக வைத்து குற்றமுறு சதியை தீர்மானித்து இருப்பதாக சாட்சியம் அளித்திருப்பதாகவும் அ.சா.22 தன்னுடைய குறுக்கு விசாரணையில் 1, 2 எதிரிகளின் தகாத உறவிற்கு நேரடி சாட்சியம்

இல்லை என்று தெரிவித்திருப்பதாகவும் அ.சா.2 ன் மூலமாகத்தான் 1வது எதிரியின் வீட்டிற்கு அ.சா.1 இல்லாத நேரத்தில் 2வது எதிரி வந்துபோவதை அறிந்து கொண்டதாக கூறியிருப்பதாகவும் அ.சா.22 தன்னுடைய குறுக்கு விசாரணையில் 1வது எதிரி 2வது எதிரியின் வீட்டிற்கு சென்றது குறித்து எந்தவொரு சாட்சியையும் தான் விசாரிக்கவில்லை எனவும் அ.சா.22, 1வது எதிரி மற்றும் அ.சா.1க்கும் இடையே 30.08.2018 முதல் 31.08.2018 வரை தகராறு இருந்ததாக எந்த சாட்சியும் தன்னிடம் கூறவில்லை என கூறியிருப்பதாகவும் எடுத்துரைத்து வாதிட்டு

1. 2022 Live Law SC 229

2. 2022 Live Law SC 843

3. 2023 INSC 679

4. 2024 MHC 3633

ஆகிய முன் தீர்ப்புகளை சுட்டிக்காட்டி இந்த வழக்கில் 1, 2 எதிரிகளுக்கு இடையே ஏற்பட்ட தகாத உறவுதான் குற்ற எண்ணத்திற்கு காரணம் என கூறுவதாகவும் ஆனால் வாய் மொழி சாட்சியத்தையும் தொடர்புடைய சங்கதிகளையும் காண்கின்றபோது எவர் ஒருவரும் எதிரிகள் அந்த காலத்தில் தகாத உறவு வைத்து இருந்ததாக கூறவில்லை எனவும் சம்பவ காலத்திலும் அவ்வாறான உறவு வைத்துக் கொண்டதாக கூறவில்லை எனவும் 20 நாட்களுக்கு முன்பாக 1வது எதிரி 2வது எதிரியின் வீட்டில் தங்கியிருந்தார், அவரை 1வது எதிரியின் குடும்ப உறவினர்கள் அழைத்து வந்ததாக கூறுவதன் உண்மையை உற்று நோக்க வேண்டும் எனவும் அ.சா.1ன் சாட்சியத்தை உறுதிபடுத்த எந்தவொரு சாட்சியும் இது குறித்து அளிக்காத நிலையில் 2வது எதிரியின் மனைவியை

இது குறித்து விசாரிக்காத நிலையில் 20 நாட்களுக்கு முன்பு 1வது எதிரி 2வது எதிரியின் வீட்டில் தங்கியதாக கூறுவது அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என 1வது எதிரி தரப்பில் எடுத்துரைக்கப்படுகிறது.

அ.சா.22, 1 மற்றும் 2 எதிரிகளுக்கு இடையே தகாத உறவு இருந்தது குறித்து எந்தவிதமாக ஆதாரத்தையும் தாக்கல் செய்யவில்லை எனவும் பெரும்பான்மையான சாட்சிகள் அ.சா.1க்கும் 1வது எதிரிக்கும் இடையே தகராறோ பிரச்சனையோ இருந்ததாக கூறவில்லை எனவும் மாறாக சுமூகமான உறவு இருந்ததாக கூறுவதும் எனவே 1, 2 எதிரிகளின் குற்ற எண்ணத்தை வெளிப்படுத்த போதுமான சாட்சியம் இல்லை எனவும் சாட்சிய சங்கிலிக்கு இது முக்கியமானது எனவும் சூழ்நிலை சாட்சியத்தை அடிப்படையாக கொண்ட வழக்கில் இது தேவைப்படுவதாகவும் ஆனால் இவ்வாறு எந்தவிதமான தொடர் சங்கிலியும் இல்லாத நிலையில் அரசு தரப்பில் 1, 2 எதிரிகளின் குற்ற எண்ணத்தை வெளிப்படுத்த தவறி இருப்பதாகவும் தொடர் சங்கிலியின் முக்கிய மையம் இந்த வழக்கில் இல்லாமல் இருப்பதாகவும் எடுத்துரைக்கப்படுகிறது.

Last Seen Theory- என்கிற இறுதியாக பார்த்தவர் என்ற கோட்பாடும் இறப்பின் நேரமும் அரசு தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்படவில்லை என்று முன் வைக்கப்படும் வாதம்.

இந்த வழக்கில் 1வது எதிரியின் கணவராகிய அ.சா.1 தான் இறந்துபோன குழந்தைகள் இருவரின் தகப்பனார் எனவும் அவர்தான் இறுதியாக பார்த்தவர் என்பதற்கு சரியான சாட்சி எனவும் அவர் தன்னுடைய சாட்சியத்தில் தான் 30.08.2018

அன்று தான் பகல் வேலையை முடித்துவிட்டு இரவு நேரத்தில் தன்னுடைய வீட்டிற்கு வந்ததாகவும் 1வது எதிரி பாத்திரத்தில் தனக்கும் இறந்துபோன குழந்தைகள் இருவருக்கும் பால் கொடுத்ததாகவும் பால் கசப்பாக இருந்ததால் அ.சா.1 அந்த பாலைக் குடிக்காமல் விட்டுவிட்டதாகவும் 1வது எதிரி சிறிது சர்க்கரை எடுத்து வரச்சென்றதாகவும் ஆனால் அ.சா.1 அந்த பாலை குடிக்காமல் விட்டுவிட்டதாகவும் 31.08.2018 அன்று பகல் 12.00 மணியளவில் அவர் தனது பணிக்கு செல்ல தயாராக இருந்ததாகவும் அப்போது சமைத்து விட்டாயா என அ.சா.1 1வது எதிரியிடம் கேட்டதாகவும் 1வது எதிரி பெரிய பனிச்சேரியில் உள்ள தன் அம்மா வீட்டிற்கு குழந்தைகளோடு செல்ல இருப்பதாகவும் அங்கு சாப்பிடுவதாக கூறியதாகவும் அ.சா.1 குழந்தை கார்னிகா என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்று கேட்டதாகவும் அதற்கு 1வது எதிரி குழந்தை கார்னிகா தூங்கிக்கொண்டிருப்பதாக சொன்னதாகவும் அலுவலகத்திற்கு செல்வதற்கு முன்பாக எப்போதும் குழந்தை கார்னிகாவுக்கு முத்தம் கொடுத்துவிட்டு செல்லும் வழக்கத்தை அ.சா.1 வைத்திருந்ததாகவும் அவ்வாறு குழந்தையை பார்த்துவிட்டு செல்ல அ.சா.1 முற்பட்டபோது 1வது எதிரி அவரது கையை பிடித்து குழந்தை இரவெல்லாம் சரியாக தூங்கவில்லை என்றும் தூங்கிக்கொண்டிருக்கின்ற குழந்தையை தொந்தரவு செய்யவேண்டாம் என்று தடுத்ததால் அ.சா.1 ஹாலில் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த முதல் குழந்தை அஜய் யை பார்த்துவிட்டு தன்னுடைய வேலைக்கு சென்றதாக கூறுவதாகவும் எனவே அ.சா.1 தன் இறந்த குழந்தைகள் இருவரையும் 1வது எதிரியோடு 31.08.2018 அன்று

மதியம் 12.00 மணியிலிருந்து 1.00 மணிக்குள்ளாக பார்த்த நபர் என்றும் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது.

அ.சா.13 மருத்துவர் 1வது குழந்தைக்கு 01.09.2018 அன்று மதியம் 3.00 மணியளவிலும் 2வது குழந்தைக்கு 04.00 மணியளவிலும் பிரேத பரிசோதனை நடத்தி முடித்துள்ளார்.

Adding more fuel to the fire, prosecution case takes a back seat when it is the clear-cut evidence of PW-13 Doctor that the probable time of consumption to the tablets by D1&D2 was 20 hours prior to the probable time of death i.e on 31/08/2018 at 7:00 AM which further nullifies and neutralizes the Prosecution case that Al offered milk to PW-1,D1& D2 by administering tablets in the Milk (no evidence to prove if both D1 &D2 first of all drank the milk) as per the Prosecution case on the night of 30/08/2018.

மேற்படி மாத்திரையின் பாதிப்பினால் குழந்தைகள் மயக்க நிலையிலிருந்த போது 31.08,2018 அன்று அதிகாலை குழந்தை கார்காவின் வாயையும் மூக்கையும் 1வது எதிரி ஆகிய நீர் அழுத்தி மூச்சு அடைக்கச் செய்து, கொலை செய்துள்ளீர் என்றும், இதன் தொடர்சியாக 31.08.2018 அன்று மதியம் 1:00 மணிக்கு குழந்தை அஜய் மேற்சொன்ன மாத்திரையின் பாதிப்பினால் மயக்க நிலையில் இருந்த போது 1வது எதிரியாகிய நீர் குழந்தை அஜய்யின் வாயையும், மூக்கையும் அழுத்தி மூச்சடைக்க செய்து கொலை செய்துள்ளீர் என்றும், எனவே 1வது எதிரியாகிய நீர் இதச பிரிவு 302(2 எண்ணிக்கைகள்) கீழும் 1வது எதிரி குழந்தைகளை கொலை செய்வதற்கு தூண்டுதலாக இருந்த 2வது எதிரியாகிய நீர் இதச பிரிவு 302 உ/இ 109 (2 எண்ணிக்கைகள்) கீழும் உம்மீது குற்றச்சாட்டு வனைந்து, வாசிக்க கேட்டீரே நீர் குற்றவாளியா? இல்லையா?

Further, the evidence of Pw-13 Doctor that the deaths had not occured due to suffocation, smothering and overlaying suffocation, smothering and overlaying இந்த மரணத்துக்கு காரணம் அல்ல என்றால் சரிதான். which with full force deathrones the prosecution case as per charge No.2 that A1 smothered the nose and mouth of D1 and

D2 in their sedative state after the administering Lo razepam & Alprazolam respectively.

<u>அ.சா.1ன் வாக்குமூலத்திற்கும் அ.சா.ஆ.23 முதல் தகவல் அறிக்கைக்கும் இடையே உள்ள வேறுபாடு</u>

அ.சா.1 தன்னுடைய முதல் விசாரணையில் 30.08.2018 அன்று இரவு நேரத்தில் தான் தன்னுடைய பணியை முடித்துவிட்டு வீட்டிற்கு திரும்பியதாக கூறுவதாகவும் பிறகு 1வது எதிரி தனக்கும் குழந்தைகளும் பால் கொடுக்க வந்ததாகவும் அ.சா.1 அந்த பாலை குடித்துவிட்டு கசப்பாக இருப்பதாக கூறியதாகவும் 1வத எதிரி சர்க்கரை கலக்க மறந்துவிட்டதாக கூறியதாகவும் அ.சா.1 பாலை குடிக்க மறுத்துவிட்டு தனக்கு அசதியாக இருப்பதாக தூங்கச் சென்றதாக கூறியிருப்பதாகவும் ஆனால் அ.சா.ஆ.23 முதல் தகவல் அறிக்கையில் 30.08.2018 அன்று நடந்ததாக கூறப்படும் பால் வழங்கப்பட்டது குறித்த விவரங்கள் எதுவும் இல்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

அ.சா.1 தன்னுடைய முதல் விசாரணையில் 31.08.2018 அன்று மதியம் 12.00 மணிக்கு அவர் தன்னுடைய அலுவலகத்திற்கு செல்ல முற்பட்டதாகவும் அப்போது 1வது எதிரி சமைக்க முற்பட்டதாகவும் குழந்தைகள் குறித்து கூறியதாகவும் மேற்கூறிய செய்தி எதுவும் அ.சா.ஆ.23 முதல் தகவல் அறிக்கையில் காணப்படவில்லை எனவும் இவை அனைத்துமே வழக்கின் முக்கிய அம்சங்கள் எனவும் முதல் தகவல் அறிக்கையில் இல்லாத விஷயங்களை தான் தன்னுடைய கு.வி.மு.ச. பிரிவு 161ன்படியான வாக்குமூலத்தில் அ.சா.1 மேற்சொன்னவற்றை கூறவில்லை என கூறுவதாகவும் இதிலிருந்து 1வது எதிரி 30.08.2018 அன்று பாலில் மருந்து கலந்து

குழந்தைகளுக்கு கொடுக்கவில்லை என தெரிய வரும் எனவும் அதேபோல் அ.சா.22 எந்த பாத்திரத்தில் வைத்து குழந்தைகளுக்கு பால் கொடுத்தாா் என கூறவில்லை எனவும் அந்த பாத்திரத்தை கைப்பற்றவில்லை என்பது இவ்வழக்கிற்கு முக்கியமானது எனவும் 1ம் எதிரி தரப்பில் சுட்டிக்காட்டப்படுகிறது.

அ.சா,1 தன்னுடைய முதல் விசாரணையில் 31.08.2018 அன்று மதியம் 3.30 மணிக்கு 1வது எதிரியிடமிருந்து தான் தொலைபேசி அழைப்பை பெற்றதாகவும் 1வது எதிரி அ.சா.1 வசம் 2வது குழந்தை எழுந்துவிட்டதாகவும் அ.சா.1ன் பிறந்தநாளுக்காக 1வது எதிரி அவருடைய அம்மா வீட்டிற்கு குழந்தைகளோடு செல்லவிருப்பதாக கூறியிருப்பதாகவும் அ.சா1 சாட்சியமளித்துள்ள நிலையில் 01.09.2018 அன்று அவா் 1வது எதிரியிடம் காலை வேலையில் தன்னுடைய அலுவலை முடித்துவிட்டு 4,5 முறை அழைத்ததாக கூறுவதாகவும் பிறகு 1வது எதிரியின் சகோதரரை தொடா்புகொண்டதாகவும் 1வது எதிரியும் அவரது குழந்தைகளையும் குறித்து அ.சா.1 கேட்டதாகவும் 1 வது எதிரியின் சகோதரா் குழந்தைகளும் 1வது எதிரியும் தங்கள் வீட்டில் இல்லை என கூறியதாகவும் இது குறித்து அ.சா.ஆ.23 முதல் தகவல் அறிக்கையில் எந்தவிதமான தகவலும் இல்லை எனவும் ஆனால் கு.வி.மு.ச. பிாிவு 161ன்படிான வாக்குமூலத்தில் இது காணப்படுவதாகவும் அ.சா.22 தன்னுடைய குறுக்கு விசாரணையில் அ.சா.1 தன்னுடைய கு.வி.மு.ச. பிாிவு 161ன்படியான வாக்குமூலத்தில்இவ்வாறு கூறியதாக கூறப்படுவதை மறுப்பதாகவும் அ.சா.1 தன்னுடைய முதல் விசாரணையில் 01.09.2018 அன்று தன் வீட்டிற்கு திரும்பியபோது கதவு பூட்டப்படாமல் வெளிப்புறமாக மூடப்பட்டு இருந்தாகவும் அ.சா.1ம் பிரசன்னாவும்

தாழ்ப்பாளை திறந்துகொண்டு உள்ளே சென்றதாக கூறுவதாகவும் 1,2 குழந்தைகள் கட்டிலில் படுத்திருந்ததை பிரசன்னா பார்த்ததாகவும் முகம் மூடப்படாமல் 1,2 குழந்தைகள் தூங்கிய நிலையில் காணப்பட்டதை அ.சா.1 கண்டதாகவும் அ.சா.1, 1வது குழந்தையின் கன்னத்தில் தடவியபோது அவர் அசைவற்று காணப்பட்டதாகவும், அ.சா.1 , குழந்தை அஜய்யை தூக்கிய போது குழந்தையின் கழுத்து தொங்கியதாகவும் உதடு வறண்டு காணப்பட்டதாகவும் அதேபோல் 2வது குழந்தையும் பேச்சு மூச்சின்றி காணப்பட்டதாகவும் அ.சா.1, 1வது குழந்தையின் மார்பில் கீறலை பார்த்ததாகவும் 1 வது குழந்தையின் வயிற்றில் கருநீலம் படிந்திருந்ததாகவும் 2வது குழந்தையின் கழுத்து கறுத்து காணப்பட்டதாகவும் மார்பும் வயிறும் வெளிர்நீலமாக கிடந்ததாகவும் அவருடைய ஓலக்குரல் கேட்டு அருகில் இருந்தவர்கள் வந்ததாகவும் பிறகு அ.சா.1 குன்றத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக அ.சா.1 கூறுவதாகவும் அ.சா.1 புகாரில் உள்ள விவரங்களையம் தன்னுடைய கையெழுத்தையும் ஒப்புக்கொண்டிருப்பதாகவும் அது அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டிருப்பதாகவும் எதிரி தரப்பில் சுட்டிக்காட்டப்படுகிறது.

அ.சா.ஆ.23 முதல் தகவல் அறிக்கையில் வெளிப்புறமாக கதவு மூடப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் அ.சா.1 வீட்டின் உள்ளே நுழைந்தவுடன் 1,2 குழந்தைகள் பேச்சுமூச்சின்றி கிடந்ததாகவும் 1 வது எதிரி அங்கு இல்லை என்று குறிப்பிட்டிருப்பதாகவும் அ.சா.ஆ.23 முதல் தகவல் அறிக்கையில் 2 வது எதிரியுடன் 1வது எதிரி கொண்டிருந்த கள்ளத்தொடர்பின் காரணமாக குழந்தைகளை அதற்கு இடையூறாக நினைத்து அவர்களை முடித்துவிட நினைத்து 1வது எதிரி

குழந்தைகளுக்கு நச்சு மருந்துகொடுத்துவிட்டு 2வது எதிரியுடன் தப்பிச் சென்றதாக கூறப்படுவது அ.சா.1ன் சாட்சியத்தில் கூறப்படவில்லை எனவும் அ.சா.1 தன்னுடைய முதல் விசாரணையில் குழந்தை அஜய் 1வது எதிரி குன்றத்தூரில் உள்ள மாமா வீட்டிற்கு செல்வதாக தன்னிடம் கூறியதாகவும் அந்த வீட்டையும் குழந்தை அஜய் அடையாளம் காட்டியதாக கூறுவதாகவும் ஆனால் தன்னுடைய குறுக்கு விசாரணையில் இது குறித்து தான் புகாரிலும் எதுவும் அதன் அடிப்படையிலான எழுந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.23லும் கு.வி.மு.ச. பிரிவு 161ன் படியான வாக்குமூலத்திலும் கூறவில்லை எனவும் அ.சா.22 தன்னுடைய குறுக்கு விசாரணையில் அ.சா.ஆ.1 புகாரில் கொலைக்கு விஷம் பயன்படுத்தப்பட்டதாக கூறுவதாகவும் ஆனால் தூக்க மாத்திரைகளை கொடுத்து கொலை செய்யப்பட்டதாக கூறப்படவில்லை எனவும் எடுத்துரைத்து அ.சா.22 ஆன விசாரணை அதிகாரியின் குறுக்கு விசாரணை அ.சா.ஆ.1 புகாரை முரண்படுத்துவதாகவும் எடுத்துரைக்கப்படுகிறது.

அரசு தரப்பு வழக்கு விசாரணையின்போது காவல் துறையினர் புலன் விசாரணையின்போது சாட்சிகள் கூறாத சங்கதிகளை விசாரணையின்போது கூறியதை வைத்தே ஒரு பொருண்மையை நிரூபித்ததாக கூற முடியாது என்று எடுத்துரைத்து அ.சா.2 தன்னுடைய முதல் விசாரணையில் 30.08.2018 அன்று மாலை 5.30 லிருந்து 6.00 மணிக்குள் தான் வீட்டின் முன்புறத்தில் இருந்ததாகவும் அ.சா.2 கையில் காயம்பட்டிருந்ததை 2வது எதிரி விசாரித்ததாகவும் தற்போது குணமாகிவிட்டதாக அ.சா.2 கூறியதாகவும் அப்போது 2வது எதிரி வசீகரனும் 1வது எதிரி அபிராமியும் 1வது எதிரியின் வாகனத்தில் 2வதுஎதிரியின் பின்னால் உட்கார்ந்து

செல்ல புறப்பட்டு சென்றதாகவும் அவர்கள் புறப்படுவதற்கு முன்பாக 2வது எதிரி 1வது எதிரியிடம் மாத்திரை கலந்துகொடுத்துவிட்டு தன்னிடம் தகவல் சொல் என்று தெரிவித்ததாக கூறுவதாகவும் இது குறித்து அ.சா.2 1வது எதிரியிடம் வினவியதற்கு 1ம் எதிரி தன்னுடைய குழந்தைகளுக்கு உடல்நிலை சரியில்லை அவர்களுக்கு மருந்து அளிக்க வேண்டும் என கூறியதாகவும் சாட்சியமளித்திருப்பதாகவும் அ.சா.22 தன்னுடைய குறுக்கு விசாரணையில் கு.வி.மு.ச. பிரிவு 161ன்படியான வாக்குமூலத்தில் அ.சா.2 இது குறித்து கூறவில்லை என கூறுவதாகவும் முதல் முறை இந்த சங்கதியை 16.08.2019 அன்றுஅ.சா.2 நீதிமன்றத்தில் கூறுவதாகவும் அ.சா.2ன் குறுக்கு விசாரணையை கருத்தில் கொண்டு பார்க்கின்றபோது இது முரண்பாடுடையது எனவும் அ.சா.2க்கு அவரே தன்னுடைய குறுக்கு விசாரணையில் கூறியது போன்று சம்பவம் குறித்து அவருக்கு நேரடியாக தெரியாது எனவும் 30.08.2018 அன்று இரவு 1வது எதிரியின் வீட்டில் என்ன நடந்தது என்று அவருக்கு நேரிடையாக தெரியாது எனவும் 31.08.2018 அன்றும் 01.09.2018 அன்றும் அ.சா.1 வீட்டிலிருந்து எந்தவிதமான நிகழ்வும் நடைபெற்றது அவருக்கு தெரியாது என்றும் எனவே அவரது சாட்சியத்தை கருத்தில் கொள்ளக்கூடாது என எடுத்துரைக்கப்படுகிறது.

அ.சா.3ன் சாட்சியத்தை குறித்து வாதிடுகின்றபோது அ.சா.3 01.09.2018 அன்று பகல் 5.00 மணிக்கு தன்னுடைய வேலைக்காக சென்றபோது அ.சா.1ன் வீட்டிலிருந்து அழுகுரல் கேட்டதாகவும் வெளியில் இருந்து அ.சா.1ன் வீட்டிற்கு அ.சா.3 சென்று அ.சா.1 ஐ வினவியதற்கு அ.சா.1 தன்னுடைய 2 குழந்தைகளும் இறந்துகிடப்பதாகவும் வாயில் நுரை தள்ளியிருப்பதாகவும் கூறியதாகவும் அ.சா.1

அவரிடம் 30.08.2018 அன்று 1ம் எதிரி தனக்கும் தன்னுடைய குழந்தைகளுக்கும் பாலை கொடுத்ததாக கூறியதாகவும் தனக்கு கொடுத்த பால் கசந்ததாக கூறியதாகவும் ஆனால் அ.சா.3 தன்னுடைய குறுக்கு விசாரணையில் இதை முரண்படுத்தி சாட்சியமளித்திருப்பதாகவும் கு.வி.மு.ச. பிரிவு 161ன்படியான வாக்குமூலத்திலும் அ.சா.3 இதை முரண்படுத்துவதாகவும் அ.சா.1ன் சாட்சியத்தை பார்க்கின்றபோது அவர் அ.சா.3க்கு நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ அ.சா.3 கூறுவதுபோன்று எந்தவிதமான தகவலும் சொல்லவில்லை என்று தெரிய வரும் எனவும் அ.சா.22 விசாரணை அதிகாரியும் அ.சா.3 அளித்த சாட்சியம் குறித்து முரண்பட்ட சாட்சியம் அளித்திருப்பதாகவும் எனவே அ.சா.3ன் முதல் விசாரணைக்கும் குறுக்கு விசாரணைக்கும் இடையே உள்ள முரண்பாட்டை கருத்தில் கொண்டு அவரது சாட்சியத்தை நிராகரிக்க வேண்டும் என எடுத்துரைக்கப்படுகிறது.

அ.சா.4 தன்னுடைய முதல் விசாரணையில் அளித்திருக்கின்ற சாட்சியம் அ.சா.22 தன்னுடைய குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொள்வது போன்று கு.வி.மு.ச. பிரிவு 161ன்படியான வாக்குமூலத்தில் காணப்படவில்லை எனவும் எடுத்துரைத்து மாண்புமிகு உச்ச நீதிமன்றம்

DARSHAN SINGH vs STATE OF PUNJAB vide 2024 LIVE LAW (SC) 13 as follows:

26. If the PWs had failed to mention in their statement U/S 161 CrPC about the involvement of an Accused, their subsequent statement before Court during the Trial regarding involvement of that particular Accused cannot be relied upon. Prosecution cannot seek to prove a fact during the trial through a witness which such witness

and not stated to Police during the Investigation. The evidence of that Witness regarding the said improved fact is of no significance. [See: (i) Rohtash vs. State of Haryana, (2012) 6 SCC 589 (ii) Sunil Kumar Shambhu Dayal Gupta vs. State of Maharashtra, 2011 (72) ACC 699 (SC). (iii) Rudrappa Ramappa Jainpur vs. State of Karnataka, (2004) 7 SCC 422 (iv) Vimal Suresh Kamble vs. Chaluverapinake, (2003) 3 SCC 175].)

ஆகிய முன்தீர்ப்புகளை சுட்டிக்காட்டி அ.சா.4ன் சாட்சியத்தை நிராகரிக்கவேண்டும் என கூறப்படுகிறது.

1வது எதிரி அ.சா.4ன் முன்பாக அளித்ததாக கூறப்படும் குற்ற ஏற்புரை இந்திய சாட்சிய சட்டம் பிரிவுகள் 25 மற்றும் 26க்கு முரணானது என எடுத்துரைத்து வாதிடப்படுகிறது.

1வது எதிரி வீட்டிலிருந்து அ.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகசர் மூலம் 02.09.2018 அன்று மாத்திரைகள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படுவது நிரூபிக்கப்படவில்லை எனவும் சட்டப்படி அ.சா.ஆ.3 ஏற்கத்தக்கதல்ல எனவும் இது குறித்து அ.சா.6ன் சாட்சியம் முதல் விசாரணைக்கும் குறுக்கு விசாரணைக்கும் இடையே பெருத்த முரண்பாடு கொண்டிருப்பதாகவும் எனவே நீதிமன்றம் அ.சா.6ன் சாட்சியத்தை நிராகரிக்க வேண்டும் எனவும அ.சா.6 கு.வி.மு.ச. 161ன்படியான வாக்குமூலத்தில் கூறாத சங்கதிகளை குறிப்பிட்டு சாட்சியமளித்திருப்பதாகவும் இதை அ.சா.22 தன்னுடைய குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டிருப்பதாகவும் அதைப்போல் அ.சா.10ன்

சாட்சியம் அமைந்திருப்பதாகவும்இதையும் நீதிமன்றம் கருத்தில் கொள்ள வேண்டும் எனவும் எடுத்துரைத்து வாதிடப்படுகிறது.

1வது எதிரியை 02.09.2018 அன்று காலை 11.50 மணிக்கு போலீசார் சம்பவ இடத்திற்கு அழைத்துச் சென்று மாத்திரைகளை கைப்பற்றியதாக கூறுவது உண்மையானது கிடையாது எனவும் அ.சா.1 அளித்ததாக கூறப்படும் கு.வி.மு.ச. பிரிவு 161ன்படியான வாக்குமூலம் 02.09.2018 அன்று பதிவு செய்யப்பட்ட நிலையில் அவர் 1வது எதிரியை தன் வீட்டில் 02.09.2018 அன்று பார்த்ததாக குறிப்பிட்டு கூறியிருப்பார் எனவும் அ.சா.2 தன்னுடைய குறுக்கு விசாரணையில் தான் அ.சா.1 ஐ 02.09.2018 அன்று அவரது வீட்டில் விசாரித்ததாகவும் அவர் சாட்சியமளித்திருக்கிறார் எனவும் அ.சா.22 சம்பவ இடத்தில் சம்பவ இடத்திற்கு உள்புறமும் அதற்கு வெளிப்புறமும் குற்றவாளிகளை கண்டறியும் விதமாக சான்றுப்பொருட்களை தேடியதாக சாட்சியமளித்திருப்பதாகவும் 01.09.2018 அன்று தன்னுடைய 3 மணி நேர விசாரணையில் அவர் எதையும் கைப்பற்றவில்லை என கூறியிருப்பதாகவும் அ.சா.6 தன்னுடைய குறுக்கு விசாரணையில் சம்பவ இடத்தில் போலீசார் தட்டச்சு இயந்திரமோ அல்லது கணிப்பொறியோ அல்லது மடிக்கணிணியோ கொண்டுவரவில்லை என குறிப்பிட்டு சாட்சியமளித்திருப்பதாகவும் காவல் துறையினர் மாத்திரைகளின் பெயர்களை ஒரு பேப்பரில் எழுதிக்கொண்டு கைப்பற்றுதல் மகசர் கையால் எழுதி தயாரித்திருப்பதாகவும் தானும் அ.சா.10ம் அந்த மகசரில் கையெழுத்திட்டதாக அ.சா.6 கூறுவதாகவும் பிறகு தட்டச்சு செய்யப்பட்டதில் தாங்கள் இருவரும் காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டதாக கூறுவதாகவும் அ.சா.ஆ.3 கைப்பற்று மகசரில்

காவல் நிலையத்திலேயே கையெழுத்து போடப்பட்டுள்ளது எனவும் ஆனால் அ.சா.10 தன்னுடைய முதல் விசாரணையில் சம்பவ இடத்தில் போலீசார் மடிக்கணிணி வைத்து மகசர் தயார் செய்ததாக கூறுவதாகவும் பிறகு 20 நிமிடங்கள் கழித்து அச்சில் எடுத்து இருவரிடமும் கையெழுத்து வாங்கியதாக அ.சா.10 முதல் விசாரணையில் கூறியதை குறுக்கு விசாரணையிலும் கூறியதாகவும் கையால் எழுதப்பட்ட கைப்பறு மகசரில் தான் கையெழுத்திடவில்லை என அ.சா.10 கூறுவதாகவும் இதை அ.சா.22 முரண்படுத்துவதாகவும் எனவே அ.சா.22 அளித்துள்ள சாட்சியம் அ.சா.6, அ.சா.10 ஆகியோர்களின் சாட்சியத்தை ஒப்பிட்டு நோக்கும்போது முரண்பாடுகள் தெரியவரும் என எடுத்துரைத்து இந்த வழக்கில் 1 வது எதிரி அளித்ததாக கூறப்படும் குற்ற ஏற்புரையும் கைப்பற்றுதலும் நிரூபிக்கப்படவில்லை என எடுத்துரைத்து வாதிட்டு மாண்புமிகு உச்ச நீதிமன்றம்

SHAHAJA @ SHAHAJAN ISMAIL MOHD SHAIKH VS STATE OF MAHARASHTRA vide 2022 LIVE LAW (SC) 596 as follows:

42. The conditions necessary for the applicability of Section 27 of the Act are broadly as under:

(1) Discovery of fact in consequence of an information received from Accused

(2) Discovery of such fact to be deposed to

(3) The Accused must be in Police custody when he gave information and

(4) So much of information as relates distinctly to the fact Mohmed Inayatullah vs thereby discovered is admissible The State of Maharashtra: AIR (1976) SC 483:

(1975) Cur LJ 668

Two conditions for application -

1) information must be such as has caused discovery of the fact and

2) information must relate distinctly to the fact discovered -Kirshnappa vs State Of Karnataka: AIR (1983) SC 446 : 1983 Cr LJ 846

என்ற முன்தீர்ப்பை சுட்டிக்காட்டி அ.சா.9 அல்லது அ.சா.11 அ.சா.ஆ.6 குற்ற ஏற்புரை குறித்து குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை எனவும் எனவே அ.சா.ஆ.6 குற்ற ஏற்புரை இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 27ன்படி ஏற்கத்தக்கதல்ல என எடுத்துரைத்து வாதிடப்படுகிறது.

அ.சா.ஆ.5 சான்றிதழ் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65(பி)ன்படி அளிக்கப்பட்டதல்ல எனவும் எனவே அதற்கு சாட்சிய மதிப்பு கிடையாது என எடுத்துரைத்து அ.சா.7 தன்னுடைய குறுக்கு விசாரணையில்

"நான் என்ன கம்யூட்டர் பயன்படுத்தி சா.பொ.5யை பதிவிறக்கம் செய்தேன் என்பதை அ.த.சா.ஆ5ல் சொல்லவில்லை என்றால் சரிதான். சா.பொ. 5ல் உள்ள பதிவுகளை எடுத்த சமயத்தில் DVRம், கம்யூட்டரும் என்ன ஒர்க்கிங்கண்டிஷனில் இருந்தது என்பதை பற்றி அத.சா.ஆ.5ல் சொல்லவில்லை. போலிசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் கம்யூட்டரில் பதிவான பதிவுகளை சிடியில் பதிவு செய்து கொடுத்தேன் என்றுதான் சொல்லியிருக்கிறேன் என்றும் செல்போனில் படம் "பிடித்து அதை கம்யூட்டருக்கு மாற்றி DVDயாக கன்வர்ட் செய்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். சிசிடிவி பதிவுகளை ஒரு குறிப்பிட்ட கம்யூட்டரில் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஒரு குறிப்பிட்ட வேலையை செய்ய பயன்படுத்தியதாக அ.த.சா.ஆ5ல்

| |
|---|
| சொல்லவில்லை என்றால் சரிதான். வாகனங்கள் வருகையை பதிவு செய்ய ஒரு குறிப்பிட்ட கம்யூட்டரைதான் பயன்படுத்துவோம் என்பதை அ.த.ச.ஆ.5ல் சொல்லலில்லை என்றால் சரிதான். நான் கம்யூட்டர், கம்யூட்டர் என்று சொல்வது எல்லாம் DVRதான். 31.08.2018 அன்று வாகனங்கள் வருகை பதிவு செய்யும் போது கம்யூட்டரில் எந்த பழுதும் இல்லை என்றும் அல்லது பழுது ஏற்பட்டிருந்தால் எந்த காலத்தில் பழுது ஏற்பட்டது என்றும் அந்த பழுது அந்த பதிவிறக்கம் செய்ய எந்த இடையூறும் செய்யவில்லை என்றும் அதன் நம்பகதன்மைக்கு எந்த இடையூறும் இல்லை என்று அ.த.சா.ஆ5ல் சொல்லலில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ5ல் சொல்லப்பட்ட சங்கதிகள் யாவும் என் அறிவுக்குட்பட்ட வரை உண்மை என்றும் நம்பதகுந்தது என்றும் சொல்லவில்லை என்றால் சரிதான்.” |

என சாட்சியமளித்திருப்பதை சுட்டிக்காட்டி அ.சா.7ன் சாட்சியத்தின்படி சா.பொ.5 18 நிமிட தகவல்களை கொண்டிருப்பதாகவும் அது 31.08.2018 அன்று 16.42 மணியிலிருந்து 17.00 மணி வரைக்குண்டான காலத்திற்குண்டானது எனவும் ஆனால் அ.சா.22ஆகிய விசாரணை அதிகாரி சா.பொ.5, 2 நிமிடம் மற்றும் ஒரு நொடிக்கு மட்டுமே உண்டானது என கூறுவதாகவும் எனவே அ.சா.7ன் சாட்சியம் நிலைக்கத்தக்கதல்ல என எடுத்துரைத்து வாதிடப்படுகிறது.

இவ்வழக்கில் செல்போன்கள் கைப்பற்றப்பட்டது, இரு சக்கர வாகனம் கைப்பற்றப்பட்டது ஆகியவை நிரூபிக்கப்படவில்லை என எடுத்துரைத்து அ.சா.9ன் சாட்சியம் அ.சா.11ன் சாட்சியம் அ.சா.22ன் சாட்சியத்தோடு முரண்பட்டு காணப்படுவதாகவும் அ.சா.15ன் சாட்சியமும் அ.சா.7ன் சாட்சியமும் அ.சா.22

அளித்துள்ள சாட்சியத்தோடு முரண்படுவதாகவும் எனவே கைப்பறுதல் நிரூபிக்கப்படவில்லை என்று வாதிட்டு உச்ச நீதிமன்றம்

| |
|---|
| RAMANAND @ NANDLAL BHARTI US STATE OF UTTAR PRADESH vide 2022 LIVE LAW (SC) 843 as follows:<br>53. If, it is say of the Investigating Officer that the Accused /Appellant while in custody on his own free will and volition made a statement that he would lead to the place where he had hidden the Weapon of offence along with his blood stained clothes then the first thing that the Investigating Officer should have done was to call for two Independent Witnesses at the Police Station itself. Once the two Independent Witnesses arrive at the Police Station thereafter in their presence the Accused should be asked to make an appropriate statement as he may desire in regard to pointing out the place where he is said to have hidden the Weapon of offence. When the Accused while in custody makes such statement before the two Independent Witnesses (Panch Witnesses) the exact statement or rather the exact words uttered by the Accused should be incorporated in the first part of the Panchnama that the Investigating Officer may draw in accordance with Law. This first part of the Panchnama for the purpose of Section 27 of the Evidence Act is always drawn at the police station an the presence of the independent witnesses so as to lend credence that a particular statement was made by the Accused expressing his willingness on his own free will and volition to point out the place where the Weapon of offence or any other article used in the commission of the offence had been hidden. Once the first part of the Panchnama is completed thereafter the Police Party along with the Accused and the two Independent Witnesses (Panch Witnesses) would proceed to the particular place as may be led by the Accused. If from that |

particular place anything like the Weapon of offence or blood stained clothes or any other article is discovered then that part of the entire process would form the second part of the Panchnama. This is how the Law expects the Investigating Officer to draw the discovery Panchnama as contemplated U/S 27 of the Evidence Act. If we read the entire oral evidence of the Investigating Officer then it is clear that the same is deficient in all the aforesaid relevant aspects of the matter.

70. Thus, in the absence of exact words, attributed to an Accused person, as statement made by him being deposed by the Investigating Officer in his evidence, and also without proving the contents of the Panchnama (Exh.5), The Trial Court as well as the High Court was not justified in placing reliance upon the circumstance of discovery of Weapon.

It has been held by the Hon'ble Supreme Court in SHAHAJA @ SHAHAJAN MOHD SHAIKH VS STATE OF MAHARASHTRA vide 2022 LIVE LAW (SC) 596 as follows: ISMAIL

39. From the aforesaid it is evident that the Public Prosecutor who conducted the Prosecution before the Trial Court did not take the pains to bring on record the substantive evidence of the aforesaid two Witnesses i.e. the PW-4 and PW-10 reply, the fact of the Accused having made a statement that he had concealed the Hammer and he was inclined to show that spot, even though it has been recorded in the Panchnama (Exh. 22) that the Accused made such a statement. The Public Prosecutor does not appear to have realized that there should be substantive evidence on record in this regard and that the Panchnama can be used only to corroborate the evidence of the Panch and not as a substantive piece of evidence. It appears that the Panchnamas (Exh.22 and 23 reply) were shown to the Panch (PW-4) and he admitted his signature and, therefore, it was exhibited at Exhs.22 and 23

respectively. The Examination-in-Chief of the PW4 does not show that he was read over the Panchnama before it was exhibited. This Court has time and again impressed upon the necessity of reading over the Panchnama which can be used as a piece of corroborative evidence. In spite of this, it is regrettable that the Trial Judge did not take the pains to see that the Panchnama was read over to the Panch before it was exhibited. A Panchnama which can be used only to corroborate the Panch has to be read over to the Panch and only thereafter it can be exhibited. If the Panch has omitted to state something which is found in the Panchnama, then after reading over the Panchnama the Panch has to be asked whether that portion of the Panchnama is correct or not and whatever reply he gives has to be recorded. If he replies in the affirmative, then only that portion of the Panchnama can be read into evidence to corroborate the substantive evidence of the panch. If he replies in the negative, than that part of the Panchnama cannot be read in evidence for want of substantive evidence on record. It is, therefore, necessary that care is taken by the Public Prosecutor who conducts the Trial that such a procedure is followed while examining the Panch at the Trial. It is also necessary that the Trial Judge also sees that the Panchnama is read over the Panch and thereafter the Panchnama is exhibited after following the procedure as indicated above.

என எடுத்துரைத்து வாதிடப்படுகிறது.

<u>இவ்வழக்கை பொருத்தவரையில் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 106ன் பொருந்துகை இல்லை என்பது குறித்து எதிரி தரப்பில் வாதிடப்படுவது.</u>

இவ்வழக்கில் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 106 பொருந்தாது எனவும் அரசு தரப்பில் எதிரியின் குற்றத்தன்மைக்கு ஆதரவான சூழ்நிலைகளை

முன்னிலைப்படுத்தும்போது தான் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 106ஐ கருத்தில் கொள்ள வேண்டும் எனவும் ஆனால் இந்த வழக்கில் அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிரான குற்றத்தன்மையை நிரூபிக்கவில்லை எனவும் முதல் தோற்ற வழக்கும் இல்லை எனவும் எனவே இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 106ன் பொருந்துகை இந்த வழக்கில் கிடையாது எனவும் எடுத்துரை வாதிட்டு மாண்புமிகு உச்சநீதிமன்றம்

It has been held by the Hon'ble Supreme Court in SHIVAJI CHINTAPPA PATIL VS STATE OF MAHARASHTRA vide LL 2021 SC 125 as follows:

22. It could thus be seen, that it is well-settled that Section 106 of the Evidence Act does not directly operate against either a Husband or Wife staying under the same roof and being the last person seen with the Deceased. Section 106 of the Evidence Act does not absolve the Prosecution of discharging its primary burden of proving the Prosecution case beyond reasonable doubt. It is only when the Prosecution has led evidence which, if believed, will sustain a conviction, or which makes out a prima facie case, that the question arises of considering facts of which the burden of proof would lie upon the Accused.

24. Another circumstance relied upon by the Prosecution is, that the Appellant failed to give any explanation in his statement U/S 313 CrPC. By now it is well-settled principle of Law, that false explanation or non-explanation can only be used as an additional circumstance, when the Prosecution has proved the chain of

circumstances leading to no other conclusion than the guilt of the Accused. However, it cannot be used as a link to complete the chain.

என்ற முன்தீர்ப்பை சுட்டிக்காட்டி மொத்தத்தில் அரசு தரப்பில் 1வது எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை நிரூபிக்க தவறியிருப்பதாகவும் சாட்சிய சங்கிலி தொடர் இந்த வழக்கில் முற்றிலும் அறுபட்டிருப்பதாகவும் எனவே இந்த வழக்கு 1வது எதிரியை விடுவித்து விடுலை தீர்ப்பு வழங்க வேண்டும் என எடுத்துரைத்து வாதிடப்படுகிறது. 2வது எதிரி தரப்பிலும் அரசு தரப்பு 2வது எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கவில்லை என மேற்கூறப்பட்ட சங்கதிகளை சுட்டிக்காட்டி வாதிடப்படுகிறது.

இவ்வழக்கு எதிரிகள் இருவர் மீதான இ.த.ச. பிரிவு 120(B) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302ன்படியான குற்றச்சாட்டும், 1வது எதிரி மீதான இ.த.ச. பிரிவு 302(2 எண்ணிக்கைகள்)ன்படியான குற்றச்சாட்டும் 2வது எதிரியின் மீதான இ.த.ச. பிரிவு 302 உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 109 ( 2 எண்ணிக்கைகள்)ன்படியான குற்றச்சாட்டும் அரசு தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

<u>பிரச்சனைக்கு தீர்வு</u>

இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. அரசு தரப்பில் எழுத்துப்பூர்வமான வாதம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1வது எதிரி தரப்பில் மிகவும் விரிவான விதத்தில் எழுத்துப்பூர்வமான வாதமும் பிறகு கூடுதலாக மற்றுமொரு எழுத்துப்பூர்வமான வாதமும் மாண்புமிகு உச்சநீதிமன்ற மற்றும்

உயர்நீதிமன்ற முன் தீர்ப்புகளை சுட்டிக்காட்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2 வது எதிரி தரப்பில் மிகவும் கடுமையான வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கு எதிரிகள் இருவர் மீதும் வனையப்பட்டுள்ள மேற்படி குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க வேண்டியது அரசு தரப்பின் கடமையாகும். இவ்வழக்கு 1வது எதிரிக்கு 'Right to Silence' இருப்பதாக 1வது எதிரி தரப்பில் சுட்டிக்காட்டப்படுகிறது. அதனை குறித்து குறித்து விரிவாக நாம் காணலாம்.

இவ்வழக்கில் அரசு தரப்பில் மொத்தம் 22 சாட்சிகள் சாட்சி பட்டியலில் காண்பிக்கப்பட்டு பிறகு கூடுதலாக 7 சாட்சிகள் சேர்க்கப்பட்டு மொத்தம் 29 சாட்சிகளில் அ.சா.1 முதல் அ.சா.25 என 25 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.32 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. சா.பொ. 1 முதல் சா.பொ.8 வரை சான்றுப்பொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் எ.த.சா.1 முதல் எ.த.சா.6 என 6 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். எ.த.சா.ஆ.1 முதல் எ.த.சா.ஆ.26 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற சான்றாவணங்கள் நீ.ம.சா.ஆ.1 முதல் நீ.ம.சா.ஆ.6 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

இருதரப்பு வாத்தையும் வழக்கில் உள்ள சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து பார்க்கின்றபோது அரசு தரப்பு வழக்கு என்பது சம்பவ நிகழ்வு குறித்த சூழ்நிலை சாட்சியங்களை வைத்து அமையப்பெற்று வலுப்பெற்ற வழக்காக அமைந்துள்ளது.

அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட விஜய் என்பவர் தான் இவ்வழக்கில் புகார்தாரர். அ.சா.1 விஜய் என்பவரை 08.09.2011 அன்று திருமணம் செய்து கொண்டவர் தான் 1 வது எதிரி அபிராமி. அ.சா.1க்கும் 1வது எதிரி அபிராமிக்கும் இடையே ஏற்பட்ட தாம்பத்ய வாழ்க்கையின் காரணமாக அஜய் என்கிற ஆண் குழந்தை மற்றும் கார்னிகா என்கிற பெண்குழந்தை ஆகியோர் பிறந்தார்கள். ஆண் குழந்தை அஜய் குன்றத்தூர் Little Flower Matriculation பள்ளியில் முதல் வகுப்பு சம்பவ காலத்தில் படித்து வந்தார். பெண் குழந்தை கார்னிகா வீட்டில் இருப்பவர். அ.சா.1 விஜய் வங்கிக்கடன் Mediator ஆக பணிபுரிந்து வருகிறார். இவ்வழக்கில் சாட்சி பட்டியலில் பட்டியல் சாட்சி 2 ஆக குறப்பட்டுள்ள மணிகண்டபிரசன்னா த/பெ சௌந்திரராஜன் பட்டியல் சாட்சி 3 ஆன சௌந்திரராஜன் ஆகியோர்களில் பட்டியல் சாட்சி 2 மணிகண்டபிரசன்னா என்பவர் 1வது எதிரியின் தம்பி. பட்டியல் சாட்சி 3 ஆன சௌந்திரராஜன், 1 வது எதிரியின் தந்தை. பட்டியல் சாட்சிகள் 2 மற்றும் 3 ஆகியோர் அரசு தரப்பில் விசாரிக்கப்படாமல் விலக்கப்பட்டுள்ளனர். பட்டியல் சாட்சி 2 தற்கொலை செய்துகொண்டு இறந்துவிட்டார் என அரசு தரப்பில் கூறப்படுகிறது. இது அரசு தரப்பு வழக்கை பாதிக்கக்கூடியது என எதிரிகள் தரப்பில் கூறப்பட்டாலும் பட்டியல் சாட்சி 2 தம்பி இறந்துவிட்டார், பட்டியல் சாட்சி 3 தந்தை என்பதால் அவர் விசாரிக்கப்படவில்லை என அரசு தரப்பில் விளக்கம் கூறப்பட்டாலும் அந்த விளக்கம் ஏற்கத்தக்கதா? என்பதையும் நாம் பரிசீலிக்கவேண்டியுள்ளது.

இவ்வழக்கில் உள்ள புகார்தாரர் அ.சா.1 விஜய் அ.சா.ஆ.1 புகாரை 01.09.2018 அன்று 05.30 மணிக்கு குன்றத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் வசம் அளித்துள்ளார்.

குன்றத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் அ.சா.22 சார்லஸ் , குன்றத்தூர் காவல்நிலைய குற்ற எண்.1101/2018 இ.த.ச. பிரிவு 302ன்படி வழக்கு பதிவு செய்து அதனை 01.09.2018 அன்று திருப்பெரும்புதூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்ற நடுவர் வசம் மதியம் 03.25 மணிக்கு அளித்துள்ளார். எனவே, அ.சா.ஆ.23 முதல் தகவல் அறிக்கை காலதாமதமின்றி குற்றவியல் நீதித்துறை நடுவர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை பொருத்தவரையில் குழந்தைகள் அஜய் மற்றும் கார்னிகா மரணமடைந்துள்ளார்கள். குழந்தைகளின் மரணம் இயற்கையான மரணம் அல்ல. இயற்கை பேரிடரால் ஏற்பட்ட மரணமோ அல்லது விபத்தால் ஏற்பட்ட மரணமோ கிடையாது.

அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.13 மருத்துவர் பிரியா குழந்தைகள் அஜய் மற்றும் கார்னிகா ஆகியோர்களின் பிரேதங்களை பிரேதபரிசோதனை செய்த மருத்துவர். அ.சா.12 ஆக விசாரிக்கப்பட்ட சென்னை தடய அறிவியல் துறை நஞ்சியல் பிரிவு அறிவியல் அலுவலர் திருமதி. பூர்விஷா ரவி என்பவர் 2 குழந்தைகளின் உள்ளுறுப்புகளை பரிசோதனை செய்து அறிக்கை வழங்கியவர். அ.சா.13 ஆக விசாரிக்கப்பட்ட மருத்துவர் பிரியா அவர்களின் சாட்சியத்தை காண்கின்றபோது அவர் பின்வருமாறு கூறுகிறார்.

| |
|---|
| “ கடந்த 01.09.2018 அன்று மருத்துவமனையில் பணி மருத்துவராக நான் பணியில் இருந்த போது மதியம் சுமார் 2.45 மணியளவில் குன்றத்தூர் காவல்நிலைய காவலர் எண் 36528, திருமதி.பாக்யசாந்தி என்பவர் இரண்டு |

குழந்தைகள் அஜய் மற்றும் கார்னிகா ஆகிய உடல்களில் பிரேத பரிசோதனை செய்யவேண்டும் என்று வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். இரண்டு குழந்தைகளின் உடல்களையும் மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் வைத்து அஜய் மற்றும் கார்னிகா என்ற குழந்தைகளை காவலர் பாக்கியசாந்தி அடையாளம் காட்டினார். 6 வயதான ஆண் பிரேதம் அஜய்க்கு பிரேத பரிசோதனை மதியம் 3 மணிக்கு ஆரம்பித்தேன். வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை. உட்புற ஆய்வில் தலையில் எந்த காயமும் இன்றி சாதாரண நிலையில் இருந்தது. மூளைக்கு மேல் இருக்கும் சவ்வு பகுதி சாதாரணமாக இருந்தது. மூளையில் இரத்தம் நொதிந்த நிலையில் இருந்தது. தலையின் கீழிருக்கும் தண்டுவட பகுதி சாதாரண நிலையில் இருந்தது. விலா எலும்புகள் காயம் எதுவும் இன்றி சாதாரண நிலையில் இருந்தது. இதயத்தில் 25மிலி அளவிற்கு திரவ நிலையில் இரத்தம் இருந்தது. நுரையீரல் நொதிந்த நிலையில் இருந்தது. நாவடி எலும்பு சாதாரண நிலையில் இருந்தது. வயிற்று பகுதியில் 100மிலி பிரவுன் கலரில் திரவம் இருந்தது. கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகம் சாதாரண நிலையில் இருந்தது. சிறுநீர்பையில் திரவம் எதுவும் இல்லை. உள்ளுறுப்புகள் வயிறு, குடல், ஈரல், சிறுநீரகம் மற்றும் பாதுகாக்கும் பொருள் ஆகியவற்றை எடுத்து நஞ்சு கண்டறிவதற்காக ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். நஞ்சியல் பிரிவிலிருந்து எனக்கு ஆய்வறிக்கை வந்தது அதில் அஜயின் வயிறு, குடல், ஈரல், சிறுநீரகம் ஆகியவற்றில் Lorazepam என்ற மருந்து கண்டறியப்பட்டதாக அறிக்கை வந்தது. அந்த நஞ்சியல் ஆய்வறிக்கை எண் Tox.No.2529/2018, நாள் 23.10.2018 ஆகும். நான் என்னுடைய உடற்கூராய்வு அறிக்கையில் Due to systemic absorbtion of the drug (Lorazepam) consumed 4 என குறிப்பிட்டு வழங்கினேன். அந்த அறிக்கை இதுதான். அது அ.த.சா.ஆ 15 ஆகும். ”

பிறகு அன்றைய தினமே மாலை 4.00 மணி அளவில் 4 வயது பெண்குழந்தை கார்னிகா உடல் மீது தான் உடற்கூராய்வு செய்தது குறித்து பின்வருமாறு கூறுகிறார்.

> “ கார்னிகா என்ற 4வயது பெண் குழந்தை உடல் மீது உடற்கூராய்வு மேற்கொண்டேன். வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை. உட்புற ஆய்வில் தலையில் எந்த காயமும் இன்றி சாதாரண நிலையில் இருந்தது. மூளைக்கு மேல் இருக்கும் சவ்வு பகுதி சாதாரணமாக இருந்தது. மூளையில் இரத்தம் உறைந்த நிலையில் இருந்தது. தலையின் கீழிருக்கும் தண்டுவட பகுதி சாதாரண நிலையில் இருந்தது. விலா எலும்புகள் காயம் எதுவும் இன்றி சாதாரண நிலையில் இருந்தது. இதயத்தில் 20மிலி அளவிற்கு நொதிந்த இரத்தம் இருந்தது. நுரையீரல் நொதிந்த நிலையில் இருந்தது. நாவடி எலும்பு சாதாரண நிலையில் இருந்தது. வயிற்று பகுதியில் 50மிலி பிரவுன் கலரில் திரவம் இருந்தது. கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகம் நொதிந்த நிலையில் இருந்தது. சிறுநீர்பையில் திரவம் எதுவும் இல்லை. உள்ளுறுப்புகள் வயிறு, குடல், ஈரல், சிறுநீரகம் மற்றும் பாதுகாக்கும் பொருள் ஆகியவற்றை எடுத்து நஞ்சு கண்டறிவதற்காக ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். நஞ்சியல் பிரிவிலிருந்து எனக்கு ஆய்வறிக்கை வந்தது அதில் கார்னிகாவின் வயிறு, குடல், ஈரல், சிறுநீரகம் ஆகியவற்றில் Alprazolam என்ற மருந்து கண்டறியப்பட்டதாக அறிக்கை வந்தது. அந்த நஞ்சியல் ஆய்வறிக்கை எண் Tox.No.2530/2018, நாள் 23.10.2018 ஆகும். நான் என்னுடைய உடற்கூராய்வு அறிக்கையில் Due to systemic absorbtion of the drug (Alprazolam) consumed குறிப்பிட்டு வழங்கினேன். அந்த அறிக்கை இதுதான். அது அ.த.சா.ஆ 16 ஆகும். ”

என சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.13 மருத்துவர் பிரியா தன்னுடைய சாட்சியத்தில் பின்வருமாறு கூறுகிறார்.

“ அஜய் என்ற பிரேதத்திற்குரிய நஞ்சியல் ஆய்வறிக்கையின் அசல் இதுதான், அதன் டாக்ஸ் எச்.எண் 2529/2018 ஆகும். அதன் நகல் ஏற்கனவே அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே அஜய் உடலின் நஞ்சியல் பிரிவு அறிக்கை அசல் அ.சா.ஆ 12A. ஆகும். கார்னிகா என்ற பிரேதத்திற்குரிய நஞ்சியல் ஆய்வறிக்கையின் அசல் இதுதான், அதன் டாக்ஸ் எச்.எண்2530/2018 ஆகும். அதன் நகல் ஏற்கனவே அ.சா.ஆ 13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே கார்னிகாவின் உடலின் நஞ்சியல் பிரிவு அறிக்கை அசல் அ.சா.ஆ 13A ஆகும். 01.11.2018 அன்று பகல் 12.45 மணிக்கு என்னை நேரில் சந்தித்து 10+10 கேள்விகள் கொடுத்து அதற்கான விளக்கங்களை தரும்படி ஆய்வாளர் கேட்டார். அதற்கான பதில்களை அப்போதே கொடுத்துவிட்டேன். அந்த பதில்கள் இவைகள் தான், அஜய், வயது6 என்ற பிரேதத்திற்காக கேட்ட கேள்விகளும் அதற்கு நான் கொடுத்த பதில்களும் இதுதான், அது அ.சா.ஆ 19 ஆகும். கார்னிகா, வயது 4 என்ற பிரேதத்திற்காக கேட்ட கேள்விகளும் அதற்கு நான் கொடுத்த பதில்களும் இதுதான், அது அ.சா.ஆ20 ஆகும். Stomach and its contents detected Lorazepam, intestina and its contents detected Lorazepam, Liver detected Lorazepam, Kidney detected Lorazepam, Preservative didnot detect Lorazepam. Systemic absorption of Lorazepam consume the deceased would have appear to have died என்று அஜய்க்கு அ.சா.ஆ 15ல் என் கருத்தை குறிப்பிட்டிருக்கிறேன். கார்னிகா,வயது 4 என்பவருக்கு கொடுத்த பிரேத விசாரணை அறிக்கையான அ.சா.ஆ.16ல் Stomach and its contents detected Alprazolam, intestina and its contents detected Alprazolam, Liver detected Alprazolam, Kidney detected Alprazolam, Preservative didnot

detect Alprazolam, Systemic absorption of Alprazolam consume the deceased would have appear to have died என என் கருத்தை தெரிவித்திருக்கிறேன் ”

அ.சா.12 ஆக விசாரிக்கப்பட்ட சென்னை தடய அறிவியல் துறை நஞ்சியல் பிரிவு அறிவியல் அலுவலர் திருமதி. பூர்விஷா ரவி என்பவர் தன்னுடைய சாட்சியத்தில்

“ கடந்த 04.09.2018 அன்று நான் பணியில் இருந்த போது மருத்துவ அலுவலர், அரசு மருத்துவமனை, தாம்பரம் அவர்களிடமிருந்து குன்றத்தூர் காவல்நிலைய குற்ற எண் 1101/2018, சம்மந்தப்பட்ட பின்வருமாறு இறந்து போன இரண்டு நபர்களான அஜய், ஆண், வயது 6 மற்றும் கார்னிகா, பெண், வயது 4, உடல் உள்ளுறுப்புகள் பிரேத பரிசோதனைக்கு பின் முதல்நிலை பெண் காவலர் திருமதி.பாக்யசாந்தி மூலமாக சரியான முத்திரைகளுடன் எங்கள் அலுவலகத்தில் பெறப்பட்டது. பிரேத பரிசோதனை எண் 772/2018, அதை சார்ந்த இறந்து போன அஜய் என்பவரின் உடல் உள்ளுறுப்புகளான இரைப்பை, குடல், ஈரல் மற்றும் சிறுநீரகம் ஆகியவற்றை ஆய்வு செய்ததில் அவற்றில் Lorazepam மருந்து கண்டறியப்பட்டது. காக்கும் பொருள் மாதிரியில் Lorazepam கண்டறியப்படவில்லை. இந்த ஆய்வறிக்கை நஞ்சியல் எண் 2529/2018, நாள் 23.10.2018 மருத்துவ அலுவலர், அரசு மருத்துவமனை, தாம்பரம் அவர்களுக்கு 31.10.2018 அன்று முதல்நிலை பெண் காவலர் திருமதி.பாக்யசாந்தி மூலமாக அனுப்பப்பட்டது. அந்த அறிக்கை இதுதான், அது அ.த.சா ஆ 12 ஆகும். ”

என குழந்தை அஜய் என்பவரின் உடல் உள்ளுறுப்புகளை தான் பரிசோதனை செய்து அதில் Lorazepam மருந்து காணப்பட்டது குறித்து தான் அ.சா.ஆ.12 ஆகிய உடல் உள்ளுறுப்புகள் ஆய்வறிக்கை வழங்கியது குறித்து சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.12 ஆக விசாரிக்கப்பட்ட சென்னை தடய அறிவியல் துறை நஞ்சியல் பிரிவு அறிவியல் அலுவலர் திருமதி. பூர்விஷா ரவி பெண் குழந்தை கார்னிகா குறித்து சாட்சிமளிக்கும்போது

> “ பிரேத பரிசோதனை எண் 773/2018யை சார்ந்த இறந்து போன கார்னிகா என்பவரின் உள்ளுறுப்புகளான இரைப்பை, குடல், ஈரல் மற்றும் சிறுநீரகம் ஆகியவற்றை ஆய்வு செய்ததில் அவற்றில் Alprazolam என்ற மருந்து கண்டறியப்பட்டது. காக்கும் பொருள் மாதிரியில் Alprazolam கண்டறியப்படவில்லை. இந்த ஆய்வறிக்கை நஞ்சியல் எண் 2530/2018, நாள் 23.10.2018 மருத்துவ அலுவலர், அரசு மருத்துவமனை, தாம்பரம் அவர்களுக்கு 31.10.2018 அன்று முதல்நிலை பெண் காவலர் திருமதி பாக்யசாந்தி மூலமாக அனுப்பப்பட்டது. அந்த அறிக்கை இதுதான், அது அ.த.சா.ஆ.13 ஆகும். ”

என சாட்சியமளித்திருப்பவர் மேலும் தன்னுடைய சாட்சியத்தில் தொடர்ந்து

> “ கடந்த 14.09.2018 அன்று நான் பணியில் இருந்த போது மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் திருபெரும்புத்தூர் அவர்களால் அனுப்பப்பட்ட கடித எண் 1275/2018, நாள் 12.09.2018 சார்ந்த குன்றத்தூர் காவல்நிலைய குற்ற எண் 1101/2018 சம்மந்தப்பட்ட சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட 1.T.Trafic MG, 2.T.Becalm 0.5mg, 3.C.Becosulos ஆகிய பொருட்களை முதல்நிலை காவலர் திருமதி. பாக்யசாந்தி மூலமாக சரியான

முத்திரையுடன் 3 காகித உறைகளில் பெறப்பட்டது. ஐயிட்டம் 1 T.13,குன்றத்தூர் காவல்நிலைய குற்ற எண் 1101/2018, பிரிவு 302 இதச @ 120(b), 302 IPC (Double death) Item 1. T.Trafic MG 3 Nos P.I.No.559/2018என்று பெயரிடப்பட்ட சரியான முழுமையான முத்திரைகளுடன் ஒரு காகித உறைக்குள் Trafic MF என்று அச்சிடப்பட்ட ஒரு மாத்திரை அட்டைக்குள் சன்செட் ஆரஞ்சு நிறத்துடன் 3 பயன்படுத்தப்படாத மாத்திரைகளில் Tranexamic Acid என்கிற மருந்து கண்டறியப்பட்டது. ஐயிட்டம் 2. T.13,குன்றத்தூர் காவல்நிலைய குற்ற எண்1101/2018, பிரிவு 302 இதச@ 120(b), 302 IPC (Double death) Item 2. T.Becalm 0.5mg 3 Nos. P.I.No.559/2018 என்று பெயரிடப்பட்ட சரியான முழுமையான முத்திரைகளுடன் ஒரு காகித உறைக்குள் Becalm 0.5 என்று அச்சிடப்பட்ட ஒரு மாத்திரை அட்டைக்குள் சன்செட் ஆரஞ்சு நிறத்துடன் 3 பயன்படுத்தப்படாத மாத்திரைகளில் Alprazolam என்கிற மருந்து கண்டறியப்பட்டது. ஐயிட்டம் 3. T.13,குன்றத்தூர் காவல்நிலைய குற்ற எண் 1101/2018, பிரிவு 302 இதச @ 120(b), 302 IPC (Double death) Item 3. C.Becosulos, 5 Nos P.I.No.559/2018 என்று பெயரிடப்பட்ட சரியான முழுமையான முத்திரைகளுடன் ஒரு காகித உறைக்குள் Becosules Capsules என்று அச்சிடப்பட்ட ஒரு மாத்திரை அட்டைக்குள் ஆரஞ்சு மற்றும் கருப்பு நிறத்துடன் 5 பயன்படுத்தப்படாத மாத்திரைகளில் Multivitamins and Minerals கண்டறியப்பட்டது. இந்த ஆய்வறிக்கை நஞ்சியல் எண் 2631/2018, நாள் 23.10.2018 மற்றும் மீதி வழக்கு பொருட்கள் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் திருபெரும்புத்தூர் அவர்களுக்கு கடித எண் 1544/2018, நாள் 30.10.2018 அதன்படி அவர்களுக்கு 31.10.2018 அன்று முதல்நிலை பெண் காவலர் திருமதி.பாக்யசாந்தி மூலமாக அனுப்பி வைக்கப்பட்டது. அந்த அறிக்கை இதுதான், அது அ.த.சா.ஆ.14 ஆகும். என்னிடம் காட்டப்படுகின்ற சா.பொ. 1 முதல் சா.பொ.3 பொருட்கள் தான்

| |
|---|
| என்னிடம் ஆய்விற்கு வந்து ஆய்விற்கு பின்னர் திருப்பி கொடுக்கப்பட்ட மீதி பொருட்கள் ஆகும். நான் கொடுத்த அறிக்கையின் படி அந்த உடல்களில் கண்டறியப்பட்ட பொருட்கள் நஞ்சு தன்மை உடையதுதான். ” |

என சாட்சியமளித்திருக்கிறார். ஆக, 6 வயது குழந்தை அஜய் Lorazepam மருந்து அளிக்கப்பட்ட காரணத்திதனால் தான் இறந்துபோய் உள்ளார் என்பதும் 4வயது குழந்தை கார்னிகா Alprazolam மருந்து அளிக்கப்பட்ட காரணத்தால் தான் இறந்து போய் உள்ளார் என்பதும் அரசு தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது.

அ.சா.13 ஆக விசாரிக்கப்பட்ட மருத்துவர் பிரியா மற்றும் அ.சா.12 ஆக விசாரிக்கப்பட்ட சென்னை தடய அறிவியல் துறை நஞ்சியியல் பிரிவு அலுவலர் பூர்விஷாரவி ஆகியோரின் சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.15 ஆகிய குழந்தை அஜய்யின் பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.16 ஆகிய குழந்தை கார்னிகாவின் பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் அ.சா.ஆ.12 முதல் அ.சா.ஆ.14 வரை உள்ள சென்னை தடய அறிவியல் துறை வழங்கியுள்ள உடல் உறுப்புகளுக்கான பரிசோதனை அறிக்கைகள் ஆகியவற்றை காண்கின்றபோது அவை குழந்தைகள் இருவருமே மாத்திரைகள் அளித்த நஞ்சின் மூலமாக தான் இறந்து போய் உள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது.

6 வயது ஆண்குழந்தைக்கும், 4 வயது பெண் குழந்தைக்கும் முறையே Lorazepam மருந்து வேதிப்பொருள் கொண்ட மாத்திரையும் Alprazolam மருந்து வேதிப்பொருள் கொண்ட மாத்திரையும் கையில் கிடைத்து அதை அவர்கள்

விளையாட்டாக உட்கொள்வதற்கான வாய்ப்புகள் எதுவும் கிடையாது. அவர்கள் அ.சா.1 மற்றும் 1வது எதிரி அபிராமி ஆகியோர்களுக்கு பிறந்த குழந்தைகள். அ.சா.1 மற்றும் 1வது எதிரி அபிராமியின் பராமரிப்பில் வளர்ந்து வந்த குழந்தைகள். அ.சா.1 எதிரிகள் தரப்பிலேயே ஒப்புக்கொள்வது போன்று அவர் வங்கியில் Mediator ஆக வேலை பார்ப்பவர். அவர் பகல் நேரம் தவிர்த்து இரவு நேரங்களில் வேலைக்கு சென்று வரக்கூடியவர். எனவே அவர் வீட்டை விட்டு வெளியே சென்று தன்னுடைய பணியை முடித்துவிட்டு மீண்டும் வீட்டிற்கு வருவதை வழக்கமாக வைத்திருப்பவர். ஆனால் 1 வது எதிரி அபிராமி வெளியே வேலைக்கு செல்லும் பெண்மணி கிடையாது. அவர் வீட்டுக்குடித்தனமே செய்து வந்திருக்கிறார். குழந்தைகளோடு தொடர்ந்து இருந்து வந்தவர். குழந்தைகளை விட்டு வெளியிடத்திற்கு அவர் வேலைக்காக சென்றதாக எந்த சாட்சியமும் இல்லை. எனவே அவர் அ.சா.1ஐ போன்று வேலைக்கு சென்றுவிட்டு மாலையில் வீடு திரும்பும் பெண்மணியோ அல்லது இரவு வேலைக்கு சென்று காலையில் வீட்டிற்கு வரும் பெண்மணியோ கிடையாது. அவர் ஒரு வீட்டுக்குடித்தனம் செய்தவர்தான். குழந்தைகளை பராமரித்து கணவனுக்கு உணவுஅளித்து வந்தவர் தான். இது குறித்து எதிரிகள் தரப்பில் மறுக்கப்படவில்லை.

குழந்தைகள் இருவருமே இறந்துபோயுள்ளார்கள். அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட அஜய் அ.சா.ஆ.1 ஆக 01.09.2018 அன்று குன்றத்தூர் காவல் நிலையத்தில் அளித்த புகாரில் குறிப்பிட்ட வாசகங்களை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

| |
|---|
| “ நான் மேற்கண்ட முகவரியில் உள்ள வீட்டில் கடந்த 5 வருடமாக ரூபாய் 3500/- வாடகைக்கு குடும்பத்துடன் வசித்து வந்தேன். நான் B.Sc., |

ஹோட்டல் மேனேஜ்மென்ட் படித்துள்ளேன். எனது சொந்த ஊர் கடலூர் குறிஞ்சிப்பாடி தாலுக்கா ஆடுர் அகரம். நான் கடந்த 4 வருடமாக கோச்சார் டவர் 7வது மாடி வெங்கட்நாராயணா ரோடு டி.நகரில் லோன் வாங்கி கொடுக்கும் மீடியேட்டராக வேலை செய்து வருகிறேன். எனக்கு மாத கமிஷனாக ரூபாய் 15,000/- கிடைக்கும். கடந்த 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8ம் தேதி எனக்கும் கோவூரை சேர்ந்த சௌந்தரராஜன் மகள் அபிராமிக்கும் குடும்பத்தார் பேசி திருமணம் செய்து வைத்தார்கள். எங்களுக்கு 6 வயதில் அஜய் என்ற மகனும் 4 வயதில் கார்ணிகா என்ற மகளும் உள்ளனர். எனது மகன் அஜய் லிட்டில் பிளவர் பள்ளியில் 1வது படிக்கிறான். மகள் வீட்டில் இருக்கிறார். நான் வேலைக்கு சென்ற பிறகு மனைவி வீட்டில் இருப்பார். நான் தினந்தோறும் காலை 11 மணிக்குள் வேலைக்கு சென்று விடுவேன். அதேபோல நேற்று 31.08.2018ம் தேதி மதியம் 1 மணிக்கு நான் வேலைக்கு போகும் போது மனைவி சமைக்கவில்லை. ஏன் என்று கேட்டதற்கு மகள் எழுந்தவுடன் அம்மா வீட்டுக்கு சென்று சாப்பிடுகிறேன் என்று சொன்னார். நான் வழியில் ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு ஆபிசுக்கு போய் விட்டேன் எனக்கு நேற்று பிறந்தநாள் என்பதால் எனது

மாமியார் வேலை முடித்துவிட்டு என்னை அவர்களது வீட்டிற்கு வரச் சொல்லி இருந்தார்கள். இன்று 01.09.2018 தேதி வேலை முடித்துவிட்டு அதிகாலை 4 மணிக்கு எனது வீட்டிற்கு வரும் வழியில் எனது மனைவிக்கு போன் செய்தேன். அபிராமிக்கு போன் போகவில்லை உடனே மாமனார் வீட்டுக்கு போனேன். அங்கு எனது மனைவியும் பிள்ளைகளும் இல்லாததால் சந்தேகம் கொண்டு ஏற்கனவே ஒரு முறை எனது மனைவி கோபித்துக் கொண்டு குன்றத்தூரில் உள்ள சுந்தரம் என்பவர் வீட்டிற்கு சென்று இரவு தங்கி இருந்தவரை நாங்கள் சுந்தரம் வீட்டில் இருந்து அழைத்து வந்த போது வீட்டிற்கு வர மாட்டேன் என்று பிடிவாதம் செய்தாள். நானும் எனது மச்சான் பிரசன்ன மணிகண்டன், சௌந்தரராஜன் உறவினர்களும் சமாதானம் பேசி

அழைத்து வந்தோம். எனவே இங்கு சென்று இருக்கலாம் என்று நினைத்து எனது மச்சான் பிரசன்ன மணிகண்டன் சுந்தரம் வீட்டுக்கு சென்று பார்த்தபோது அங்கு சுந்தரமும் இல்லை எனது மனைவியும் இல்லை. உடனே நானும் மச்சானும் திரும்பி எனது வீட்டிற்கு வந்து பார்த்தபோது எனது வீட்டின் கதவு வெளியில் தாழ்ப்பாள் போட்டு இருந்தது. நான் கதவை திறந்து பார்த்தபோது எனது வீட்டின் கதவு வெளியில் தாழ்ப்பாள் போட்டு இருந்தது. நான் கதவை திறந்து பார்த்தபோது எனது மகனும் மகளும் வாயில் நுரை தள்ளி மூச்சு பேச்சி இல்லாமல் இறந்து கிடந்தார்கள் அப்போது எனது மனைவி வீட்டில் இல்லை எனது மனைவி அபிராமி சுந்தரம் என்பவனுடன் ஏற்பட்ட கள்ள தொடர்பால் அவனுடன் சேர்ந்து வாழ என் குழந்தைகள் இடைஞ்சலாக இருக்கும் என்பதால் திட்டம் போட்டு எனது மகனையும் மகளையும் விஷம் கொடுத்து கொலை செய்துவிட்டு சுந்தரத்துடன் தப்பி சென்று விட்டதாக தெரிகிறது. எனவே ஐயா அவர்கள் எனது பிள்ளைகளை கொலை செய்த எனது மனைவி அபிராமி மற்றும் சுந்தரம் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். ”

அ.சா.ஆ.1 புகாரை காண்கின்றபோது அ.சா.1 லோன் வாங்கிக்கொடுக்கும் Mediator ஆக பணிபுரிந்து மாதம் ரூ.15,000/- வருமானம் ஈட்டி வந்தார் என்பதும் அவர் தன் வீட்டில், தனது மச்சான் பிரசன்ன மணிகண்டனுடன் 01.09.2018 அன்று அதிகாலையில் போய் பார்த்தபோது தனது வீட்டின் கதவு வெளியில் தாழ்ப்பாள் போடப்பட்டிருந்ததாகவும் தான் கதவை திறந்தபோது தனது மகனும் மகளும் வாயில் நுரை தள்ளி மூச்சு பேச்சி இல்லாமல் இறந்து கிடந்தார்கள் அப்போது தனது மனைவி வீட்டில் இல்லை என்று கூறியுள்ளார். மேலும் அ.சா.1 தன்னுடைய புகாரிலேயே தனது மனைவி அபிராமி க்கும் 2வது எதிரி சுந்தரத்திற்கும் கள்ள தொடர்பு இருந்ததாகவும் கூறிப்பிட்டுள்ளார். மேலும்

ஏற்கனவே ஒரு முறை தன் மனைவி கோபித்துக்கொண்டு குன்றத்தூரில் உள்ள சுந்தரம் என்பவர் வீட்டிற்கு சென்று இரவு தங்கி இருந்தவரை தாங்கள் சுந்தரம் வீட்டில் இருந்து அழைத்து வந்த போது வீட்டிற்கு வர மாட்டேன் என்று பிடிவாதம் செய்தாள் என்றும் தானும் தனது மச்சான் பிரசன்ன மணிகண்டன், சௌந்தரராஜன், உறவினர்களும் சமாதானம் பேசி அழைத்து வந்தோம் எனவும் கூறியுள்ளார். இது குறித்து அ.சா.1 ஆக நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டபோது அ.சா.1 விஜய் தன்னுடைய சாட்சியத்தில்

> “ 30.08.2018 அன்று இரவு நான் பணி முடித்து வீட்டிற்கு வந்த பிறகு என் மனைவி அபிராமி பாத்திரத்தில் பால் கலந்து எடுத்து வந்து இரண்டு குழந்தைகளுக்கும் எனக்கும் கொடுத்தார். நான் அந்த பாலை குடித்தேன் அது கசப்பாக இருக்கிறது என்று சொன்னேன். அதற்கு சர்க்கரை போட மறந்துவிட்டேன் போட்டு தருகிறேன் என்று போனார், அதனால் நான் எனக்கு பால் வேண்டாம் எனக்கு டயர்டாக இருக்கிறது நான் தூங்க போகிறேன் என்று சொல்லிவிட்டு தூங்க போகிறேன். அடுத்த நாள்காலை 31.08.2018 அன்று காலை நான் எழுவதற்கு தாமதமாகி பகல் 12 மணியளவில் எழுந்தேன். அதன்பிறகு நான் அவசர அவசரமாக குளித்துவிட்டு என் அலுவலகத்திற்கு போவதற்கு தயாரானேன். அப்போது என் மனைவியிடம் சமைக்கவில்லையா என்று கேட்டேன். அப்போது என் மனைவி தானும் தன் குழந்தைகளும் பெரியபனிச்சேரியில் உள்ள தன்னுடைய அம்மாவின் வீட்டிற்கு போக இருப்பதாகவும் அங்கு போய் சாப்பிட்டுக்கொள்கிறோம் என்றும் சொன்னாள். நான் பிறகு பாப்பா என்ன செய்கிறது என்று கேட்டேன், அதற்கு என் மனைவி பாப்பா தூங்கி கொண்டிருக்கிறது என்று சொன்னாள் வழக்கமாக நான் அலுவலகத்திற்கு செல்வதற்கு முன்பாக என் மகளுக்கு முத்தம் கொடுத்துவிட்டு செல்வேன், அதேபோல் அன்றும் என் மகளுக்கு முத்தம் கொடுப்பதற்காக போனேன். அப்போது என் கையை அபிராமி பிடித்து இழுத்து

| |
|---|
| அவள் இரவெல்லாம் இருமிக் கொண்டிருந்தாள் சரியாக தூங்கவில்லை அதனால் அவளை தொந்தரவு செய்ய வேண்டாம் என்று சொன்னாள். அந்த சமயத்தில் என் மகன் அஜய் உறாலில் உள்ள டீவியை பார்த்து கொண்டிருந்தான். நான் அவனை பார்த்து போய்ட்டு வரேன்பா, பாய் என்று சொல்லிலிட்டு புறப்பட்டு அலுவலகம் போய்விட்டேன். ” |

என சாட்சியமளித்திருப்பவர் அதன் பிறகு 31.08.2018 அன்று மதியம் என்ன நடந்தது என்று கூறுகின்றபோது

| |
|---|
| “ மதியம் பிற்பகல் 3.30 மணியளவில் அபிராமி எனக்கு போன் செய்து, பாப்பா எழுந்துவிட்டாள், நாங்கள் மூவரும் பெரியபனிச்சேரிக்கு அம்மா வீட்டிற்கு போகிறோம், இன்று உங்களுக்கு பிறந்தநாள், அதனால் நீங்கள் அங்கு வந்துவிடுங்கள் என்று சொன்னாள். அதன்பிறகு நான் அலுவலகத்தில் வேலையை பார்க்க ஆரம்பித்தேன். அன்று முழுவதும் பகல் மற்றும் இரவு என் வேலையை முடித்துவிட்டு 01.09.2018 அன்று காலையில் வீட்டிற்கு அலுவலகத்திலிருந்து திரும்பி வந்தேன். ” |

என சாட்சியமளித்திருப்பவர் அப்போது என்ன நடந்தது என்று கூறுகின்றபோது

| |
|---|
| “ அப்போது நான் அபிராமிக்கு போன் செய்தேன். 4, 5 முறை அழைத்தேன், நாட்ரீச்சபில் என்று வந்தது. அதனால் அபிராமியின் தம்பி பிரசன்னமணிகண்டனுக்கு போன் செய்தேன். அவர் எடுத்தார், அவரிடம் அபிராமியிடம் போனை கொடுக்கும்படி சொன்னேன். அப்போது அவர் அக்கா அங்கு கிடையாது என்று என்னிடம் சொன்னார் குழந்தைகள் இருக்கிறார்களா என்று கேட்டேன். அதற்குகுழந்தைகளும் இங்குகிடையாது மாமா என்று சொன்னார். அதனால் நான் பெரியபனிச்சேரியில் உள்ள அவர்கள் |

வீட்டிற்கு போனேன். அங்கு போய்விட்டு நானும் பிரசன்ன மணிகண்டனும் புறப்பட்டு குன்றத்தூரில் உள்ள மீனாட்சி சுந்தரம் வீட்டிற்கு போனோம் ”

என கூறியிருப்பவர் எதனால் மீனாட்சி சுந்தரம் வீட்டிற்கு போனார் என்பது பற்றி சாட்சியமளிக்கின்றபோது

“ எதனால் நான் அங்கு போனேன் என்றால் இந்த சம்பவம் நடந்த 20 நாட்களுக்கு முன்பு அபிராமி மீனாட்சி சுந்தரம் வீட்டில் தங்கியிருந்தாள். அந்த சமயத்தில் அபிராமி எங்கு தங்கியிருக்கிறார் என்று தெரியாமல் நான் இருந்தேன், அந்த சமயத்தில் என் மகன் அஜய், என்னிடம் அம்மா அடிக்கடி குன்றத்தூரில் உள்ள ஒரு அங்கிள் வீட்டிற்கு போய் வருவாங்க என்று சொன்னான். நான் அஜயிடம் அந்த வீடு தெரியுமா என்று கேட்டேன், அவன் தெரியும் என்று சொன்னான். நான் அஜயை அழைத்துகொண்டு, அபிராமியின் அப்பா சௌந்தரராஜன், அபிராமியின் தம்பி பிரசன்னாமணிகண்டன், நான் எல்லோரும் குன்றத்தூரில் உள்ள மீனாட்சி சுந்தரம் வீட்டிற்கு போனோம், நாங்கள் போன அந்த சமயத்தில் மீனாட்சி சுந்தரம் வீட்டில் அபிராமி இருந்தாள். நான் அபிராமியை என் வீட்டிற்கு வரும்படி அழைத்தேன். முதலில் வர மறுத்தாள், அதன்பிறகு அபிராமியின் அப்பா, தம்பி எல்லோரும் பேசி அபிராமியை சமாதானம் செய்து அபிராமியை பெரியபனிச்சேரியில் உள்ள அபிராமியின் அம்மா வீட்டிற்கு கூட்டி சென்றார்கள். நான் என் வீட்டிற்கு வந்துவிட்டேன். பிறகு 4 நாட்கள் கழித்து அபிராமியும் குழந்தைகளும் என் வீட்டிற்கு வந்துவிட்டார்கள். அன்றிலிருந்து அபிராமி குழந்தைகளிடம் சரியாக பேசாமாலும் சிடு சிடு என எரிந்து விழுவதுமாக இருந்தாள். ”

என சாட்சியமளித்திருக்கிறார். எனவே தான் தன் மனைவியை தேடியவர் மீனாட்சிசுந்தரத்தின் வீட்டிற்கு ஏன் போனோம் என்பது குறித்து விளக்கம் அளித்துள்ளார். அவர் அளித்துள்ள விளக்கம் பின்வருமாறு உள்ளது.

> “ அதனால் தான் 1.9.2018 அன்று நானும் பிரசன்னமணிகண்டனும் குன்றத்தூரில் உள்ள மீனாட்சி சுந்தரம் வீட்டிற்கு போனோம், அங்கு போய் பார்த்த போது அபிராமி அங்கு இல்லை. அதனால் மூன்றாம் கட்டளையில் உள்ள என் வீட்டிற்கு வந்தோம். அப்போது என் வீட்டின் கதவு வெளியே பூட்டுபோட்டு பூட்டாமல் தாழ்ப்பாள் மட்டும் போட்டு பூட்டிய நிலையில் இருந்தது. நானும் பிரசன்னாவும் அந்த தாழ்பாளை திறந்து கொண்டு வீட்டிற்கு போனோம். ”

ஆக வீட்டிற்கு தன் மனைவியின் தம்பி பிரசன்ன மணிகண்டனுடன் வீட்டிற்கு போனவர் என்ன பார்த்தார் என்று கூறுகின்றபோது

> “ உள்ளே போனவுடன் பிரசன்னா மாமா பசங்க இரண்டுபேரும் கட்டிலில் தூங்கி கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார். நான் உள்ளே போய் பார்த்தேன், அப்போது முகம் மட்டும் வெளியே தெரியக்கூடிய நிலையில் உடல் முழுவதும் பெட்ஷீட் போட்டு போர்த்திய நிலையில் தூங்குவது மாதிரி இருந்தார்கள். அப்போது நான் என் மகன் அஜயின் கன்னத்தை அஜய், அஜய் என்று தட்டினேன், அவனிடம் எந்த ஒரு ரியாக்ஷனும் கிடையாது. பெட்ஷிட்டை விலக்கிவிட்டு அஜயை தூக்கியபோது, அஜயின் கழுத்து தொங்கியது.”

என சாட்சியமளித்துள்ள அ.சா.1 விஜய் நீதிமன்றத்தில் கட்டுப்படுத்தமுடியாமல் அன்றைய தினம் அழுதுள்ளார். மேலும்

> “ உதட்டின் வலது பக்கத்தில் நுரைபோல் காய்ந்த நிலையில் இருந்தது. ”

என தன் மகனின் நிலையை தான் பார்த்தது குறித்து கூறுகிறார். பெண் குழந்தை கார்னிகாவை பற்றி கூறும்போது

> “ பக்கத்தில் இருந்த மகளை பார்த்தேன் அவளும் பேச்சு மூச்சு இல்லாத நிலையில் கிடந்தார். (கட்டுப்படுத்த முடியாமல் அழுதார். அதனால் அவர் கீழே இறக்கப்பட்டு குடிப்பதற்கு தண்ணீர் கொடுத்து ஆசவாசப்படுத்தி பின்னர் விசாரிக்கப்பட்டுள்ளார்) என் மகன் அஜய்க்கு மார்பில் கீரல்மாதிரி இருந்தது, மார்பு, வயிறு ஆகிய பகுதிகளில் நீலம் பதிந்து கருப்பாக காணப்பட்டது. என் மகளுக்கு கழுத்து அழுத்தியதால் ஏற்படக்கூடிய கருப்பு நிறம் இருந்தது, மார்பு, வயிற்று பகுதிகளில் நீலநிறம் பதிந்து காணப்பட்டது. என்னுடைய அழுகை சத்தம் கேட்டு அக்கம் பக்கம் உள்ளவர்கள் வந்துவிட்டார்கள் அதன்பிறகு எனக்கு என்ன செய்வது என்று தெரியாமல் குன்றத்தூர் காவல்நிலையம் சென்று கம்பலைன்ட்டு எழுதி கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான், அதில் உள்ள விவரங்கள் நான் எழுதி கொடுத்த விவரங்கள் தான் அந்த புகார் அ.த.சா.ஆ 1 ஆகும். ”

என சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 விஜய் புகார் கொடுத்த 20 நிமிடத்தில் ஆய்வாளர் தன் வீட்டிற்கு வந்தது குறித்தும் தன்னை விசாரணை செய்தது குறித்தும் தன் வீட்டில் அபிராமி இல்லை என்ற விவரத்தை சொன்னது குறித்தும் தன்னுடைய முதல்

விசாரணையில் கூறுகிறார். பிரேதங்களை குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தது குறித்தும் அ.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் கூறியுள்ளார். அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட விஜய்

> “ இந்த வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் அபிராமியின் அப்பா என்னை நேரில் 23.02.2019 அன்று சந்தித்து சாட்சி மாற்றி சொன்னால் அபிராமிக்கு குறைந்த தண்டனை கிடைக்கும் என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் எதுவாக இருந்தாலும் கோர்டில் பார்த்து கொள்ளலாம் என்று சொல்லிவிட்டேன். ”

என சாட்சியமளித்திருக்கிறார். ஆக அபிராமியின் தந்தை தான் பட்டியல் சாட்சி 3 சௌந்திரராஜன் , தம்பி பிரசன்ன மணிகண்டன் தான் பட்டியல் சாட்சி 2. அ.சா.1 விஜய் மேற்சொன்ன சாட்சியமே ஏன் அரசுத்தரப்பில் பட்டியல் சாட்சி பிரசன்ன மணிகண்டன் பட்டியல் சாட்சி 3 சௌந்திரராஜன் ஆகியோர்களை விசாரிக்கவில்லை என்பதற்கு போதுமானது என்று வைத்துக்கொண்டாலும் கூட அரசுத்தரப்பு அவர்களை சாட்சிகளாக விசாரித்து அவர்கள் ஒரு வேளை அரசுத்தரப்புக்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை என்றாலும் உண்மையை வெளிக்கொண்டுவர மேற்கொண்டு விசாரணை செய்திருக்கலாம் இருந்தாலும் பட்டியல் சாட்சி 2 இறந்துவிட்டார் பட்டியல் சாட்சி 3 ஐ விசாரிக்காததால் மட்டுமே அரசு தரப்பு வழக்கு பாதிப்படைந்துவிட்டது என கூறிவிடமுடியாது.

அ.சா.1 விஜய் என்பவரின் சாட்சியத்திலிருந்து 1ம் எதிரி அபிராமிக்கும் 2 வது எதிரி மீனாட்சிசுந்தரத்திற்கும் இடையே திருமணத்திற்கு அப்பாற்பட்ட உறவு இருந்ததும்

ஒரு நாள் இரவு 2வது எதிரியின் வீட்டில் 1வது எதிரி அபிராமி தங்கியிருந்ததும், அ.சா.1 தனது மாமனார், மச்சான் ஆகியோருடன் சென்று 1வது எதிரியை அழைத்தபோது அவர் வர மாட்டேன் என்று அடம் பிடித்து பிறகு சமாதானம் செய்து அபிராமி அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்று 4 நாட்கள் அங்கு தங்கியிருந்துவிட்டு பின்பு அ.சா.1 விஜய் யோடு குடும்பம் நடத்துவதற்காக அ.சா.1 விஜய் வீட்டிற்கு வந்ததும் அ.சா.1ன் சாட்சியத்திலிருந்து வெளிப்படுகிறது.

திருமணத்திற்கு அப்பாற்பட்ட உறவு 1 மற்றும் 2 எதிரிகளுக்கிடையே இருந்தது குறித்து அ.சா.1 அளித்துள்ள சாட்சியம் போதுமானதா? என்பதை காண்கின்றபோது அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட கவிதா ராமகிருஷ்ணன் என்பவரின் சாட்சியம் முக்கியமானது. அ.சா.2 கவிதா ராமகிருஷ்ணன் எதிரிகள் இருவருக்கும் அறிமுகமானவரே. அவர் குடியிருக்கும் வீட்டிற்கு மேல்மாடியில் தான் 1வது எதிரி அபிராமி குடியிருந்துள்ளார். இது எதிரிகள் தரப்பில் மறுக்கப்படவில்லை. அ.சா.2ஆக விசாரிக்கப்பட் கவிதா ராமகிருஷ்ணன் தன்னுடைய சாட்சியத்தில்

> " ஆஜர் எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியும். 30.08.2018 அன்று சுமார் மாலை 5.30 மணியிலிருந்து 6 மணிக்குள்ளாக நான் குடியிருக்கும் வீட்டிற்கு மேல் மாடியில் குடியிருந்த எதிரி அபிராமி முதல் மாடியிலிருந்து இறங்கி கீழே வந்தார். எனக்கு அந்த சமயத்தில் கையில் அடிபட்டு கட்டு போட்ட நிலையில் இருந்தேன். அப்போது 2வது எதிரி என்னிடம் உங்கள் கையில் உள்ள காயம் எப்படி உள்ளது என்று கேட்டார். நான் அதற்கு நன்றாக இருக்கிறது பரவாயில்லை என்று சொன்னேன். அந்த சமயத்தில் 2ம் எதிரி வசிகரனும் எதிரி அபிராமியும் அங்கிருந்து அபிராமியின் வண்டியில் புறப்பட்டார்கள்

| |
|---|
| அபிராமி ஓட்டினார், பின்னால் இரண்டாம் எதிரி உட்கார்ந்து சென்றார் ” |

என சாட்சியமளித்துள்ளார். இதிலிருந்து 30.08.2018 அன்று 1வது எதிரியும் 2வது எதிரியும் மாலை 5.00 மணியிலிருந்து 6.00 மணிக்குள் அ.சா.1ன் வீட்டிற்கு வந்து சென்றதை அ.சா.2 உறுதிப்படுத்துகிறார். 1வது எதிரியும் 2வது எதிரியும் ஒன்றாக அபிராமியின் வீட்டிலிருந்து புறப்பட்டு சென்றதாகவும் அவர் கூறுகிறார். 2வது எதிரி வசீகரன் என்ற பெயரை அவர் குறிப்பிட்டிருந்தாலும் அஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்று கூறியதால் அவர் வசீகரன் என்று குறிப்பிட்டுள்ள எதிரி மீனாட்சி சுந்தரம் தான் என்பதில் ஐயமில்லை. மீனாட்சி சுந்தரமும் அபிராமியும் ஒரே வண்டியில் சென்றதை தன் கண்ணால் பார்த்ததாக கூறும் அ.சா.2 கவிதா ராமகிருஷ்ணன் அளித்துள்ள சாட்சியத்தின் முக்கிய பகுதி

| |
|---|
| “ அந்த வண்டியில் உடகார்ந்து கிளம்புவதற்கு முன்பாக 2லது எதிரி முதல் எதிரியிடம் தான் சொன்னதை போல மாத்திரைகளை கலந்து கொடுத்து முடித்துவிட்டு எனக்கு தகவல் சொல் என சொன்னார், அதை நான் கேட்டேன் அப்போது நான் அபிராமியிடம் ஏன் என்ன ஆச்சு எதற்காக மாத்திரை கலந்து கொடுக்க வேண்டும் என்று கேட்டேன், அதற்கு அபிராமி தன்னுடைய குழந்தைகளுக்கு உடல்நிலை சரியில்லை அதற்காக மருந்து கொடுக்க வேண்டும் என்று சொன்னார்” |

என சாட்சியமளித்திருக்கிறார். ஆக, அ.சா.2ன் மேற்சொன்ன சாட்சியம் எதிரிகள் குற்றத்தை செயல்படுத்திய விதத்தை தெரிவிப்பதாக அமைந்திருக்கிறது.

குற்றத்தை எதிரிகள் எவ்வாறு செயல்படுத்தினார்கள் என்பது குறித்து காணவேண்டியுள்ள நிலையில் தற்போது எதிரிகள் இருவருக்கும் இடையே திருமணத்தை தாண்டிய உறவு குறித்து அ.சா.1 திட்டவட்டமாக கூறுகின்ற நிலையில் 2 வது சாட்சியான அ.சா.2 கவிதா ராமகிருஷ்ணன் அளித்துள்ள தொடர்புடைய சாட்சியம்

> “ இந்த நிகழ்வு நடப்பதற்கு 2 மாதத்திற்கு முன்புதான் அபிராமி எனக்கு பழக்கம் ஆனார். ஆடி மாதம் கோலிலுக்கு போவதற்காக அபிராமியின் இரண்டு சக்கர மோட்டார் வாகனத்தை இரவல் கேட்டிருந்ததால் எனக்கு அவர் பழக்கம். என் கூட அபிராமி 2 முறை கோலிலுக்கு வந்திருக்கிறார் அவ்வாறு போய் வரும்போது நானும் அபிராமியும் பேசிக்கொண்டதால் எனக்கு அபிராமி பழக்கமானார்.”

அவ்வாறு பழக்கம் ஏற்பட்ட பிறகு என்ன நடந்தது என்று அவர் கூறுகின்றபோது

> “ அவ்வாறு பழக்கம் ஏற்பட்ட பிறகு 2 முறை அபிராமியின் வீட்டிற்கு 2ம் எதிரி வந்து சென்றார் அதை நான் பார்த்தேன், அபிராமியிடம் நான் அவர் யார் என்று கேட்டேன், அபிராமி என்னிடம் தன் கணவன் மூலம் 2ம் எதிரி தனக்கு நண்பர் என்றும் குடும்ப நண்பர் என்றும் சொன்னார். நான் 2முறை அந்த சமயத்தில் அபிராமியிடம் உனக்கு 2 குழந்தைகள் இருக்கிறது. கணவர் இல்லாத நேரத்தில் 2ம் எதிரி வந்து போகக்கூடாது என கூறினேன்”

என சாட்சியமளித்திருக்கிறார். மேலும் அ.சா.1 சாட்சியமளித்துள்ளதுபோன்றே ஏற்கனவே சம்பவத்திற்கு சில நாட்களுக்கு முன்பாக 1வது எதிரி அபிராமி 2வது எதிரி மீனாட்சிசுந்தரத்தின் வீட்டில் தங்கியிருந்தது குறித்து அ.சா.2ம் உறுதிப்படுத்துகிறார். இது குறித்து அ.சா.2 கூறுகின்றபோது

| |
|---|
| “ கொலை சம்பவம் நடப்பதற்கு 15 நாட்களுக்கு முன்பு அபிராமி காணாமல் போய்விட்டார். அபிராமியின் கணவர் விஜய் அப்போது தேடினார், எங்களிடம் கேட்டார். அந்த சமயத்தில் 1ம் எதிரி 2ம் எதிரியின் வீட்டில் ஒரு இரவும் ஒரு பகலும் தங்கியிருந்தார் அவரை போய் விஜயும் அபிராமியின் அப்பாவும் தம்பியும் பேசி 2 நாட்கள் கழித்து விஜயின் வீட்டிற்கு கூட்டி வந்தார்கள். அதன்பிறகு அபிராமியை கூப்பிட்டு இவ்வாறு நடக்காதே என்று அட்வைஸ் செய்தேன். அதிலிருந்து அபிராமி என்னிடம் சரியாக பேசுவது கிடையாது. ” |

என சாட்சியமளித்திருப்பவர் குற்றத்தை எதிரிகள் செயல்படுத்த முனைந்தவிதம் குறித்து கூறுகின்றபோது

| |
|---|
| “ அதன்பிறகு 30.08.2018 அன்று மருந்து மாத்திரை கலந்து கொடுக்கும்படி 1ம் எதிரியிடம் 2 எதிரி சொன்னதை நான் கேட்ட நிகழ்வு நடந்த நாளாகும். ” |

பிறகு நடந்தது குறித்து கூறும்போது

| |
|---|
| “ 31.08.2018 அன்று நான் என் வீட்டில் இல்லை அன்று நான் வடபழனியில் புத்தூர் கட்டு போடுவதற்காக வடபழனிக்கு போய்விட்டு வந்தேன், அன்று பகலில் நடந்த விவரம் எனக்கு தெரியாது அன்று இரவு 8 மணியளவில் நான் என் வீட்டிற்கு வந்தேன். ” |

என சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.1, 01.09.2018 அன்று தான் காலையில் வீட்டிற்கு அலுவலகத்திலிருந்து திரும்பி வந்தேன் என சாட்சியமளித்திருப்பவர் பிரசன்ன மணிகண்டனுடன் வீட்டிற்கு

போய் பார்த்ததாக கூறுகிறார். காவல் நிலையத்தில் புகாரை 01.09.2018 அன்றே காலை 5.30 மணிக்கு அளித்துவிட்டு பிறகு மீண்டும் வீட்டிற்கு வந்துள்ளார்.

அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட சாட்சி கவிதா ராமகிருஷ்ணனும் தன்னுடைய சாட்சியத்தில்

| |
|---|
| “ 1.9.2018 அன்று காலை 5.30 மணியளலில் மேல் மாடியில் உள்ள விஜயின் வீட்டில் அழுகின்ற சத்தம் கேட்டது. நானும் என் வீட்டின் உரிமையாளர் முத்து சுமதி ஆகியோர்கள் மேல்மாடிக்கு போய்பார்த்தோம் அப்போது குழந்தைகள் கார்னிகாவும், அஜயும் இறந்து போய்கிடந்தார்கள். விஜய் காவல் நிலையம் போய் புகார் கொடுத்துவிட்டு வந்தார். போலிசார் வந்து என்னை வீட்டில் லவத்து விசாரித்தார்கள். நான் விஜயிடம் உங்களுக்குள் என்ன நடந்தது என்று கேட்டேன் அப்போது விஜய் முந்தாநாள் பாலில் ஏதோ கலந்து அஜய், கார்னிகாவிற்கு கொடுத்துவிட்டு எனக்கும் கொடுத்தார். அந்த பாலை நான் குடித்தபோது கசப்பாக இருக்கிறது என்று தன் மனைவியிடம் சொன்னபோது பூஸ்டு கம்மியா இருக்கிறது, போட்டு தருகிறேன் என்று சொல்லி வாங்கிசென்றாள். விஜய் தனக்கு பால் வேண்டாம் என்று சொல்லிவிட்டதாகவும், விஜய் குழந்தை கார்னிகாவிற்கு தினமும் போல் முத்தம் கொடுக்க போனபோது அபிராமி வேண்டாம் குழந்தை தூங்கிவிட்டது என்று சொன்னார் என்றும் சொன்னார். விஜயிடம் நீங்கள் வெளியே சாப்பிட்டு கொள்ளுங்கள் என்று அபிராமி சொன்னதாகவும் சொன்னார். அன்று விஜய்க்கு பிறந்த நாள். அதனால் விஜயை தன் அம்மா வீட்டிற்கு வரும்படி அபிராமி விஜயிடம் சொன்னதாக சொன்னார் 31.08.2018 அன்று இரவு பணி முடித்து திரும்பும்போது நேரமாகிவிட்டதால் அபிராமியின் அம்மா வீட்டிற்கு விஜய் போனார் அங்கு அபிராமி இல்லை. அங்கிருந்து அபிராமியின் தம்பியை கூட்டி கொண்டு விஜய் நாங்கள் குடியிருக்கும் வீட்டிற்கு வந்தார். அங்கு வந்து |

| |
|---|
| பார்த்தபோது அவர் வீட்டின் கதவு வெளியே தாழ்ப்பாள் மட்டும் போடப்பட்ட நிலையில் இருந்தது. அவர் உள்ளே போய் பார்க்கும்போது குழந்தைகள் இருவரும் இறந்த நிலையில் இருந்தார்கள். அப்போது விஜய் அழுது கொண்டிருந்த போதுதான், நாங்கள் அங்கு போனோம் ” |

என சாட்சியமளித்திருக்கிறார்.

அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்ட சாட்சி பூபதி தன்னுடைய குறுக்கு விசாரணையில்

| |
|---|
| “ 01.09.2018 அன்று விடியற்காலை 5 மணியளவில் வெளியூர் லோடிற்கு போவதற்காக புறப்பட்டு கொண்டிருந்தேன் என்றும், அப்போது விஜய் வீட்டில் அழுகின்ற சத்தம் கேட்டது, நான் வெளியே வந்து பார்த்தேன் என்றும் நான் விஜய் வீட்டிற்கு போய் என்ன என்று கேட்டபோது, அவரது குழந்தைகள் இரண்டு பேரும் வாயில் நுரை தள்ளிய நிலையில் இறந்து போய்கிடந்தார் என்று சொன்னார் என்றும் என்ன என்று கேட்டேன். 30.08.2018 அன்று பாத்திரத்தில் பால் கலக்கி அபிராமி விஜய்க்கும் குழந்தைகளுக்கும் கொடுத்தார்கள் என்றும், அப்போது விஜய் பாலை குடித்து பார்த்து கசப்பாக இருப்பதாக சொல்லி திருப்பி கொடுத்துவிட்டார், சர்க்கரை போட்டு மீண்டும் கொண்டுவந்து கொடுத்தபோது, விஜய் வேண்டாம் என்று சொல்லிவிட்டார் என்ற விவரங்களை விஜய் என்னிடம் நேரடியாக சொன்னதாக நீதிமன்றத்தில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி விவரங்களை விஜய் என்னிடம் நேரடியாக சொன்னதாக போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். சத்தம்கேட்டதால் அவர்கள் வீட்டில் ஏதோ பிரச்சனை என்று போய் பார்க்க எங்கள் பகுதியில் முத்து அவர்களின் மேல் தளத்தில் சத்தம் கேட்டதால் அவர்கள் வீட்டில் ஏதோ பிரச்சனை என ஓடி சென்று பார்த்தபோது, அவரது வீட்டின் அருகே மேல் தளத்தில் வாடகைக்கு குடியிருந்த பின்னர் பெயர் கேட்டு தெரிந்த விஜய் |

அவரது மகன் அஜயையும் மகள் கார்னிகாவையும் அவரது மனைவி கொலை செய்துவிட்டு கள்ளக்காதலன் சுந்தரத்துடன் தப்பி சென்றுவிட்டதாக அதே வீட்டில் கீழ் தளத்தில் குடியிருக்கும் கவிதா ஏற்கனவே சுந்தரம் வந்து சென்றதை தெரிவித்ததாகவும் அங்கிருந்தவர்கள் தெரிவித்தார்கள் என்று போலிசாரிடம் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். ”

என சாட்சியமளித்திருப்பவர்

“ நான் கேள்விப்பட்டவரை அந்த 2 குழந்தைகளின் மரணத்திற்கு மாத்திரை தான் காரணம் விஷம் காரணமல்ல, கழுத்தை நெறித்திருப்பது காரணமல்ல. இந்த காரணம் கூட விஜய் சொல்லித்தான்எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். ”

என சாட்சியமளித்திருக்கிறார். ஆக, அ.சா.3 பூபதியின் சாட்சியத்தின்படி அவர் குழந்தைகள் இருவரும் வாயில் நுரை தள்ளிய நிலையில் இறந்துபோய் கிடந்தார்கள் என்று விஜய் 01.09.2018 அன்று தன்னிடம் சொன்னதாகவும் கூறுகிறார். விஜய்யின் அழுகுரலை அவர் கேட்டதாகவும் கூறுகிறார். வீட்டிற்கு அருகாமையில் இருந்தவர்கள் விஜய் வீட்டின் கீழ் தளத்தில் குடியிருக்கும் கவிதா ராமகிருஷ்ணன் ஏற்கனவே சுந்தரம் வந்து சென்றதை தெரிவித்ததாகவும் விஜய்யின் மனைவி, மகன் அஜய்யையும் மகள் கார்னிகாவையும் கொலை செய்துவிட்டு கள்ளக்காதலன் சுந்தரத்துடன் தப்பிச் சென்றுவிட்டதாக அங்கிருந்தவர்கள் தெரிவித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 ஐ பொருத்தவரையில் அவர் செவிவழி சாட்சி தான். அவருக்கு 1வது எதிரியை தெரிந்துள்ளது, 2 வது எதிரியை தெரியவில்லை. அவர் குழந்தைகளுக்கு 1வது எதிரி

மாத்திரைகள் கொடுத்ததை நேரில் பார்த்த சாட்சி இல்லை. 2வது எதிரியையும் அபிராமியையும் ஒன்றாக பார்த்த சாட்சியும் கிடையாது. எனவே அவரது சாட்சியம் செவிவழி சாட்சியமாகவே அமைந்துள்ளது.

அ.சா.3 ன் சாட்சியத்தில் அவர் ஏற்கனவே மீனாட்சி சுந்தரம் வந்துசென்றதை தெரிவித்ததாகவும் அங்கிருந்தவர்கள் தெரிவித்தார்கள் என விஜய்யின் வீட்டிற்கு சுந்தரம் வந்து சென்றதை கவிதா தெரிவித்ததாக விஜய்யின் வீட்டிற்கு அருகில் இருந்தவர்கள் கூறியதாக சாட்சியமளித்துள்ளார். எனவே அவரது சாட்சியத்தின் தொடர்புடைய பகுதியை கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

அ.சா.1 அளித்துள்ள சாட்சியம் அ.சா.2 அளித்துள்ள திட்டவட்டமான சாட்சியம் ஆகியவற்றை காண்கின்றபோது 1 மற்றும் 2 எதிரிகளுக்கிடையே திருமணத்தை தாண்டிய உறவு இருந்ததை அறிந்துகொள்ள முடிகிறது.

அ.சா.2 கவிதா ராமகிருஷ்ணன் சாட்சியத்தின் நம்பக தன்மை குறித்தும் அவரின் செயல்பாடுகள் குறித்தும் எதிரிகள் தரப்பில் வெகுவாக ஆட்சேபித்து வாதிட்டாலும் விரிவான வகையில் அவரை குறுக்கு விசாரணை செய்தாலும் அ.சா.2ன் சாட்சியத்தின் மிக முக்கியமான பகுதியான

“ அபிராமி ஓட்டினார், பின்னால் இரண்டாம் எதிரி உட்கார்ந்து சென்றார், அந்த வண்டியில் உடகார்ந்து கிளம்புவதற்கு முன்பாக 2லது எதிரி முதல் எதிரியிடம் நான் சொன்னதை போல மாத்திரைகளை கலந்து கொடுத்து முடித்துவிட்டு எனக்கு தகவல் சொல் என சொன்னார், அதை நான் கேட்டேன் அப்போது நான் அபிராமியிடம் ஏன் என்ன ஆச்சு எதற்காக மாத்திரை கலந்து கொடுக்க வேண்டும் என்று கேட்டேன், அதற்கு அபிராமி தன்னுடைய குழந்தைகளுக்கு

> உடல்நிலை சரியில்லை அதற்காக மருந்து கொடுக்க வேண்டும் என்று சொன்னார் ”

என்ற சாட்சியம் மிக முக்கியமானதாக அமைந்துள்ளது.

1 மற்றும் 2 எதிரிகளுக்கிடையே உள்ள தொடர்பு குறித்து காண்கின்றபோது அ.சா.9 விஜயன் அ.சா.11 ரமேஷ் ஆகியோர்களின் முன்னிலையில் 1 ,2 எதிரிகளின் செல்போன்கள் கைப்பற்றப்பட்டுள்ளது. 1வது எதிரியிமிருந்து கைப்பற்றப்பட்ட சாம்சங் செல்போன் சா.பொ.7 ஆகவும் 2 வது எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஜியோனி செல்போன் சா.பொ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த செல்போன்கள் தடய அறிவியியல் துறை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அ.சா.16 ஆக விசாரிக்கப்பட்ட தடய அறிவியியல் துறை துணை இயக்குநர் திருமதி. ஜமுனா சிவசங்கரன் அ.சா.ஆ.17 ஆகிய 26.11.2018 தேதியிட்ட அறிக்கையை வழங்கியுள்ளார். . அவரது சாட்சியம் பின்வருமாறு உள்ளது.

> “ கடந்த 09.11.2018 அன்று மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், திருபெரும்புத்தூர் அவர்களின் குன்றத்தூர் காவல்நிலைய குற்ற எண் 1101/2018, 302 இதச வழக்கில் கடித எண் 1590/2018, நாள் 08.11.2018 என்ற நாளிட்ட கடிதத்துடன் திருமதி.பாக்யசாந்தி, பெண் காவலர், எண் 33528 மூலமாக மூடி முத்திரையிடப்பட்ட துணி வரியிடப்பட்ட ஒரு பார்சல் எமது அலுவலகத்தில் சரியாக முத்திரைகளுடன் பெறப்பட்டது. அதில் உள்ள பொருட்கள் கீழ்வருமாறு ஐயிட்டம் 1.கருப்பு நிற கைபேசி, சாம்சங் நிறுவனத்தாரின் ஜெ7 மாடல் ஒன்று பேட்டரியுடன் பெறப்பட்டது. அதில் சிம்கார்டோ, மெமரிகார்டோ

இல்லை. ஐயிட்டம் 2.கருப்பு மற்றும் தங்க நிற கைபேசி ஒன்று ஜியோனி நிறுவனத்தின் 1 ஆக மாடல் P5L என்ற மாடல் 2 சிம்கார்டுகளுடனும் பேட்டரியுடனும் பெறப்பட்டது. அதில் மெமரிகார்டு இல்லை. சிம்கார்டு 1, ஓடபோன் நிறுவனத்தின் தயாரிப்பாகும், மற்றொரு சிம்கார்டு ஏர்டெல் நிறுவனத்தாரின் தயாரிப்பாகும். அவற்றை எமது அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டோம் அதில் கண்டறியப்பட்டதை கீழ் உள்ளவாறு கொடுக்கப்பட்டுள்ளது. கைபேசி ஒன்றினை UFED 4 PC மற்றும் Mobil edit forensic express என்ற கணினி கருவிகளால் ஆய்வு செய்யப்பட்டது. கைபேசியின் விவரங்கள் அதில் கண்டறியப்பட்டது. அதனை இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அதன் விவரங்களை ஆய்வு செய்ததில் அதில் தொடர்புகள் (Contacts தொடர்பின் விவரங்கள் (Call logs ) மற்றும் மீடியா கோப்புகள் பதிவு செய்தது கண்டறியப்பட்டது. அதில் குறிப்பிட்ட ஆய்வுகள் பின்வருமாறு, தங்களது நீதிமன்ற கடிதத்தில் குறிப்பிட்ட எண்ணான 9159914765 என்ற எண் ஆங்கிலத்தில் Purush என்ற தொடர்பில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. அதனை இணைப்பு 2 ஆக கொடுத்துள்ளோம். அதே போல் தங்களது நீதிமன்ற கடிதத்தில் குறிப்பிட்ட எண்ணான 8754710083 என்ற எண்ணிலிருந்து Incoming call ஒன்று பெறப்பட்ட விவரம் எமது ஆய்வறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் இரண்டு இணைக்கப்பட்ட படங்கள் (collaged images) மற்றும் ஒரு Gif கோப்பு இருப்பது கண்டறியப்பட்டது. அதில் ஒரு ஆணின் படமும் பெண்ணின் படமும் இருந்தது. அதன் விவரங்களும் எமது அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு ஆணின் facebook படம் அதில் உள்ளது கண்டறியப்பட்டது. அதன் விவரம் எமது அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் இரண்டு படங்களும் அந்த கைபேசியிலிருந்து எடுக்கப்பட்டு எமது அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. ஐயிட்டம் 2. அந்த கைபேசியையும் UFED 4 PC என்ற கணினி கருவியால் ஆய்வு செய்யப்பட்டது. அந்த கைபேசியின் விவரங்கள்

கருவில் எடுத்தவாறே எமது இணைப்பு 3ல் அளிக்கப்பட்டுள்ளது. அதன் விவரங்களை ஆய்வு செய்து பார்த்ததில் அதில் தொடர்புகள் (contacts) தொடர்பு கொண்ட விவரங்கள் (call logs, Messages, Media கோப்புகள் கண்டறியப்பட்டன. அதில் கண்டறியப்பட்டுள்ள விவரங்கள் பின்வருமாறு தங்களது நீதிமன்ற கடிதத்தில் குறிப்பிட்டுள்ள எண்களான 9080015891, 9884119316 மற்றும் 8754710083 ஆகிய எண்கள் தொடர்புகளில் சேமித்தவாறு கண்டறியப்பட்டன. அதன் விவரங்கள் இணைப்பு 4, 5, 6ல் தமது பார்வைக்காக கொடுக்கப்பட்டுள்ளது. அவை Abi, X Kot என்றும், X என்றும், N M. Vasi ஆகிய பெயர்களில் சேமிக்கப்பட்டது கண்டறியப்பட்டது. மேலும் எண் 9567529213 என்ற எண்ணிலிருந்து outgoing and incoming calls மற்றும் ஒரு incoming message பெறப்பட்டது கண்டறியப்பட்டது. அதனை இணைப்பு 7ஆக கொடுத்துள்ளோம். தொடர்பு X என்ற பெயரில் சேமிக்கப்பட்ட எண்ணில் உள்ள whatsup chat message ஒன்று இருப்பது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளோம். அடுத்து தொடர்பு Niyas Bpல் உள்ள எண்ணான 918248057826லிருந்து பெறப்பட்ட whatsup chat message இணைப்பு 8ல் அளிக்கப்பட்டுள்ளது. அடுத்து எண் 9567529213 என்ற எண்ணிலிருந்து ஒரு incoming call பதிவு Audio என்ற folderல் பதிவு செய்யப்பட்டது கண்டறியப்பட்டது. அதனுடைய விவரமும் மற்ற விவரங்களும் ஒரு குறுந்தகடில் சேமிக்கப்பட்டு தங்களது நீதிமன்றத்திற்கு அனுப்பி உள்ளோம். மேலும் அந்த ஆடியோ பதிவில் உள்ள சில பதிவுகள் (conversation) எமது அறிக்கையில் அளித்துள்ளோம். மேலும் அந்த கைபேசியில் சில whatsup படங்களும் கண்டறியப்பட்டு எமது அறிக்கையில் அளித்துள்ளோம். அந்த படங்களை இணைப்பு 9ல் அளித்துள்ளோம். மேலும் Apps களை பயன்படுத்தி whatsup video மற்றும் கோப்புகள் உருவாக்கப்பட்டவை இணைப்பு 10ல் அளித்துள்ளோம். இவற்றுடன் பெறப்பட்ட சிம்கார்டுகளின் விவரம் சிம்கார்டுகளையும் UFED 4PC என்ற கணினி கருவியால் ஆய்வு

செய்யப்பட்டு அதனுடைய தொடர்புகளையும் இணைப்பு 11 ஆக அளித்துள்ளோம். அதில் எண் 8754710083 என்று தங்களது நீதிமன்றத்தில் குறிப்பிட்ட எண் N M. Vasi என்ற பெயரில் சேமிக்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது. இரண்டாவது சிம்கார்டையும் (ஏர்டெல் UFED 4PC) என்ற கணினி கருவியில் ஆய்வு செய்யப்பட்டு அதனை இணைப்பு 12ஆக கொடுத்துள்ளோம். இந்த அறிக்கையை நானும் எனது Examiner / Scientific Officer திருமதி.ஹேமலதா, M.Sc., Computer Science அவர்கள் கையொப்பம் இட்டு திருபெரும்புத்தூர் நீதிமன்றத்திற்கு 28.11.2018 அன்று திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, குன்றத்தூர் போலிசார் மூலமாக மூடி முத்திரையிட்டும் ஒரு காகித உறையில் வைத்து அனுப்பி வைத்தேன். அறிக்கை எண் 107/2018, நாள் 26.11.2018 ஆகும். அந்த அறிக்கை இதுதான், அது அ.த.சா.ஆ 17 ஆகும். அந்த அறிக்கையுடன் கூடிய ஒரு சிடி மற்றும் 12 இணைப்புகளும் உள்ளது. அந்த சிடி இதுதான், அது அ.த.சா.ஆ 18 ஆகும். (எதிரி தரப்பில் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65(B)ன் கீழ் சான்று பெறப்படவில்லை என ஆட்சேபிக்கப்பட்டுள்ளது) அந்த ஆட்சேபனையுடன் அ.த.சா.ஆ 18 குறியீடு செய்யப்பட்டுள்ளது) ( மேற்படி ஆட்சேபனைக்கு அ.சா.16 இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65(B) நடைமுறைக்கு பிறகுதான் ஆய்வு செய்யப்பட்டது என பதில் கூறினார்.) அ.த.சா.ஆ18ல் உள்ள முதல் folder அ.த.சா.ஆ 18A, 2nd folder அ.த.சா.ஆ18B ஆகும். 3வது folder அ.த.சா.ஆ 18C, 4th folder அ.த.சா.ஆ18D ஆகும். இரண்டு செல்போன்கள் இவைகள் தான். ஜியோனி செல் போன் ஏற்கனவே சா.பொ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சாம்பங் செல்போன் ஏற்கனவே சா.பொ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ”

என சாட்சியமளித்திருக்கிறார். அ.சா.ஆ.17 ஆக அளிக்கப்பட்டுள்ள ஆய்வறிக்கை மற்றும் அ.சா.ஆ.18 ஆன C.D. ஆகியவற்றின் அடிப்படையிலும் அந்த அ.சா.ஆ.18A Folder. அ.சா.ஆ.18B Folder. அ.சா.ஆ.18C Folder. அ.சா.ஆ.18D Folder என 4 Folderகளை கொண்டிருப்பதும் ஜியோனி செல்போன் சா.பொ.6 , சாம்சங் செல்போன் சா.பொ.7 அ.சா.14 ஆக விசாரிக்கப்பட்ட தடய அறிவியல் துறை உதவி இயக்குநர் ஜமுனா சிவசங்கரன் மூலம் அரசுத்தரப்பு வழக்கு உறுதி செய்யப்படுகிறது. அ.சா.ஆ.18 C.D.யில் 4 Folder களும் 1,2 எதிரிகளின் வாய்மொழி மற்றும் காணொளி உரையாடல்களை கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல் Whats app மூலம் பரிமாறிக்கொண்ட குறுஞ்செய்திகளையும் இருவரும் ஒருவரையொருவர் அழைத்து பேசிக்கொண்டதும் உறுதிப்படுத்தப்படுகிறது.

சா.பொ.6 மற்றும் சா.பொ.7 கைப்பற்றப்பட்ட விதம் அரசுத்தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதை நாம் இங்கு நன்கு கவனிக்க வேண்டியுள்ளது. அ.சா.9 ஆக விசாரிக்கப்பட்ட விஜயன் தன்னுடைய சாட்சியத்தில்

> “ 02.09.2018 அன்று காலை 6 மணியளவில் கோயம்பேடு பேருந்து நிலையம் பைக் ஸ்டேன்டில் போலிசார்கள் நின்று கொண்டிருந்தார்கள். அங்கு எனக்கு தெரிந்த ஒரு ஆண் போலிசார் நின்று கொண்டிருந்தார், அவரிடம் என்ன சார் இந்த பக்கம் நின்று கொண்டிருக்கிறீர் என கேட்டேன். அப்போது அந்த போலிஸ்காரர் அபிராமி என்ற பெண் பைக்கை எடுப்பதற்காக இங்கு வர இருப்பதால் அவரை பிடிப்பதற்காக காத்துக்கொண்டிருப்பதாக சொன்னார் அவர் என்னிடம் பேசிக்கொண்டிருக்கும்போதே அங்கிருந்த பெண் போலிஸ்காரர்கள் அபிராமி வந்துவிட்டாள் அவளை பிடிக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டே ஓடினார்கள். அப்போது அபிராமி வண்டியை எடுத்து

| |
|---|
| கொண்டு ஏறி சுந்தரத்துடன் போகும் போது, போலிசாரை பார்த்துவிட்டு கீழே விழுந்துவிட்டார். அதில் சந்தரத்திற்கு கையில் அடிப்பட்டது. இரண்டு எதிரிகளையும் போலிசார் அந்த இடத்திலிருந்து பிடித்து கொண்டு பைக் ஸ்டேன்டில் வைத்து விசாரித்தார்கள். ” |

என சாட்சியமளித்திருப்பவர் பிறகு என்ன நடந்தது என்று கூறுகின்றபோது

| |
|---|
| “ பெண் போலிசார் அங்கு இருந்தார். அபிராமி முதலில் வாக்குமூலம் கொடுத்தார். அபிராமி வைத்திருந்த செல்போனையும் இருசக்கர வாகனத்தையும் போலிசார் எடுத்து கொண்டார்கள். நானும் என் நண்பன் ரமேஷிம் ஓரமாக நின்று கொண்டோம். அபிராமி சொன்னதை பெண் போலிஸ் ஒருவர் லேப்டாப்பில் டைப் செய்தார். அந்த போலிஸ் விசாரித்த போது தனக்கும் பிரியாணி கடையில் வேலை பார்க்கும் சுந்தரத்திற்கும் இரண்டு மாதத்திற்கு முன்பு தொடர்பு ஏற்பட்டதாகவும், நாம் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்றால் குழந்தைகளையும் தன் கணவரையும் கொன்றுவிட வேண்டும் என்ற எண்ணத்தில் யோசித்தேன். அதனால் தன் இரண்டு குழந்தைகளுக்கும் மாத்திரை கொடுத்து கொன்றுவிட்டதாக சொன்னார்.<br><br>தன் கணவர் வேலைக்கு போய்விட்டதாகவும் சொன்னார். என்னிடம் காண்பிக்கப்படும் 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் அத.சா.ஆ.6 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் மற்றொரு கையொப்பத்தை செல்போன்கள் கைப்பற்றியதற்காக போட்டேன் அந்த மகஜர் அதசாஆ.7 ஆகும். ரோஸ்கலர் ஸ்கூட்டி வண்டி எண் TN85C9360, Sumsung, Gionee என்ற இரண்டு செல்போன்களை அபிராமியிடமிருந்து போலிசார் வாங்கினார்கள். அந்த போன்களை என்னால் அடையாளம் காட்ட முடியும். Gionee போன் இதுதான், அது சா.பொ.6 ஆகும். Sumsung (black color) |

போன் இதுதான், அது சா.பொ.7 ஆகும். அதன்பிறகு சுந்தரத்திடம் விசாரித்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் 2வது எதிரி சந்தரத்தின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் மட்டும் என்னுடையதுதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் மட்டும் அத.சா.ஆ.8 ஆகும். ”

என சாட்சியமளித்திருக்கிறார்.

அ.சா.11 ஆக விசாரிக்கப்பட்ட சாட்சி ரமேஷ் தன்னுடைய முதல் விசாரணையில்

“ 02.09.2018 அன்று காலை 4 மணிக்கு நானும் என் நண்பர் விஜயனும் கோயம்பேட்டிற்கு இருசக்கர வாகனத்தில் போனோம், அந்த வண்டியை கோயம்பேடு பார்க்கிங்கில் போட்டுவிட்டு காய்கறி வாங்க மார்கெட்டிற்கு போனோம். காய்கறி வாங்கி டாடாஏசில் லோடு செய்துவிட்டு நானும் விஜயனும் பார்க்கிங் செய்த மோட்டார் சைக்கிளை எடுக்க காலை 6 மணிக்கு போனோம். பார்க்கிங்கிலிருந்து அந்த வண்டியை எடுத்து கொண்டு வெளியே வந்தபோது, என் நண்பன் விஜயனுக்கு தெரிந்த போலிஸ்காரர் ஒருவர் இருந்தார், அவருடன் பேசுவதற்கு விஜயன் போனான் விஜயனும் அந்த போலிஸ்காரரும் பேசிக்கொண்டிருந்தார்கள். நான் அருகில் நின்று கொண்டிருந்தேன். அப்போது அங்கிருந்த பார்க்கிங்கிலிருந்து சுந்தரமும், அபிராமியும் பார்க் செய்திருந்த வண்டியை எடுத்து கொண்டு வெளியே வந்தார்கள். அங்கிருந்த 5, 6 போலிசார்கள் அந்த இடத்தில் அபிராமியை மடக்கி பிடிக்க போகும்போது வண்டியுடன் அபிராமியும் சுந்தரமும் கீழே விழுந்தார்கள். சந்தரத்திற்கு கையில் அடிபட்டுவிட்டது, எந்த கை என்று ஞாபகம் இல்லை அந்த போலிஸ்காரர்கள் சுந்தரத்தை அருகில் இருந்த மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அபிராமியை அந்த இடத்தில்

வைத்து போலிசார் விசாரித்தார்கள். அப்போது அபிராமி தன்னுடைய குழந்தைகளுக்கு மாத்திரைகளை கொடுத்து கொல்ல முயன்றதாகவும், ஆனால் அவர்கள் அப்போது சாகலில்லை என்றும் அதனால் அவர்களின் கழுத்தை நெறித்து கொன்றுலிட்டதாகவும் வாக்குமூலம் சொன்னார். அதன்பிறகு சுந்தரம் அங்கு வந்தார், சுந்தரமும் அதேபோல் வாக்குமூலம் கொடுத்தார், அவர் தானும் அபிராமியும் உல்லாசமாக இருப்பதற்கு குழந்தைகள் இடையூறாக இருப்பதால் அந்த குழந்தைகளை கொன்றுவிட்டு வரும்படி அபிராமியிடம் தான் சொன்னதாகவும் சொன்னார்: அதற்காக சாட்சிகளாக இருந்து கையெழுத்து போடுவீர்களா என்று எங்களிடம் போலிசார் கேட்டார்கள். நாங்கள் ஒப்புக்கொண்டோம். அதன்படி எதிரிகள் சொன்னதை எழுதிய தாளில் நாங்கள் கையொப்பம் செய்தோம். 1வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம்

என்னுடையதுதான். அந்த கையொப்பம் அத.சா.ஆ.9 ஆகும். 2வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான், அந்த கையொப்பம் அ.த.சா.ஆ 10 ஆகும். அப்போது சுந்தரத்திடமிருந்து ஒரு செல்போனை போலிசார் வாங்கினார்கள். அந்த போன் வெள்ளை நிறம் ஆகும், ஜியோனி கம்பெனி ஆகும். அபிராமியிடமிருந்து கருப்பு கலர் சாம்சங் போனை போலிசார் வாங்கினார்கள். வண்டியையும் கைப்பற்றினார்கள். அந்த வண்டி பிங்க் கலர் ஸ்கூட்டி பெப் ஆகும். அதன் பதிவு எண் TN-85-C-9360 ஆகும். அந்த வண்டி இதுதான், அது சா.பொ.8 ஆகும் வண்டி கைப்பற்றியதற்காக கையொப்பம் செய்தோம், அந்த மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான், அந்த மகஜர் அ.த.சா.ஆ. 11 ஆகும். போன்களை கைப்பற்றியதற்காக எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் இரண்டு போன்களையும் கைப்பற்றியதற்கான மகஜரில் உள்ள முதல் கையொப்பம்

என்னுடையதுதான், அந்த ஆவணம் ஏற்கனவே அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த போன்கள் இவைகள் தான், அவைகள் ஏற்கனவே சா.பொ.6 மற்றும் சா.பொ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகு நாங்கள் புறப்பட்டு ஊருக்கு போய்விட்டோம். ”

என சாட்சியமளித்திருக்கிறார். ஆக, அ.சா.9 விஜயனும் அ.சா.11 ரமேஷும் தாம் பார்க்கிங் செய்த மோட்டார் சைக்கிளை எடுக்க காலை 6.00 மணிக்கு கோயம்போடு இருசக்கர வாகன நிறுத்துமிடத்திற்கு சென்றதாக கூறுகிறார்கள். அ.சா.9 விஜயன் மற்றும் அ.சா.11 ரமேஷ் ஆகியோரின் சாட்சியம் ஒன்றையொன்று வலுப்படுத்தி உறுதியூட்டக்கூடியதாகவே அமைந்திருக்கிறது. அ.சா.9 மற்றும் அ.சா.11ஆகியோர் கோயம்போடு பார்க்கிங் அருகே எதிரிகள் இருவரும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக கூறுகின்ற நிலையில் கோயம்பேட்டில் உள்ள இரு சக்கர வாகனம் நிறுத்தக்கூடிய இடத்தில் கண்காணிக்கக்கூடிய பொறுப்பில் உள்ள அ.சா.7 கோபாலகிருஷ்ணன் என்பவர் அளித்துள்ள சாட்சியம் முக்கியமானது. அவர் தன்னுடைய சாட்சியத்தில்

“ நான் கோயம்பேட்டையில் உள்ள இருசக்கர வாகனம் நிறுத்தக்கூடிய இடங்களை கண்காணிக்கக்கூடிய பொறுப்பில் இருக்கிறேன். 01.09.2018 அன்று குன்றத்தூர் போலிசார் வந்து டி-என்-85-C-9360 என்ற நெம்பரை சொல்லி என்னிடம் விசாரித்தார்கள். வண்டி உள்ளே இருக்கிறதா என்று செக் பண்ண வேண்டும் என்று சொன்னார்கள். எங்களிடம் உள்ள சிஸ்டத்தில் வண்டி நெம்பரை பதிவு செய்தால் அது உள்ளே பார்க்கிங் ஏரியாவில் இருக்கிறதா இல்லையா என்பதை சொல்லிவிடும். நான் சிஸ்டத்தில் டி-என்-

> 85-C-9360 என்ற எண்னை பதிவு செய்து தேடினேன், அந்த வண்டி நெம்பர் டி-என்-85-C-9360, 31.08.2018 அன்று மாலை 4.45 மணிக்கு உள்ளே வந்து உள்ளே இருப்பதை போல் காட்டியது. அந்த 31.08.2018 மாலை 4.45 மணிக்கு பதிவான சிசிடிவி கேமிராவில் பதிவான கேமிரா பதிவை நான் பார்த்தேன், அதில் ஒரு பெண் அந்த வண்டியை உள்ளே கொண்டு வந்து விடுவது பதிவாகியிருந்தது. அந்த பெண் யார் என்று சொல்ல முடியுமா என்றால் ஆஜரில் உள்ள 1வது எதிரி அபிராமியை சாட்சி அடையாளம் காட்டினார். போலிசார் கேமிரா புட்டேஜ் வேண்டும் என்று என்னிடம் கேட்டார்கள், அதை எடுத்து நான் போலிசாரிடம் கொடுத்தேன், அந்த புட்டேஜ் இதுதான், அது சா.பொ.5 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் படிவம் 95ல் உள்ள கையொப்பம் என்னுடையதுதான், அதில் உள்ள கோபாலகிருஷ்ணனின் கையொப்பம் அ.த.சா.ஆ4 ஆகும். அதற்காக நான் ஒரு சான்றிதழ் வழங்கினேன், அதில் என்னுடைய கையொப்பம் இருக்கிறது. அந்த சான்று அ.த.சா.ஆ5 ஆகும். ”

என சாட்சியமளித்திருக்கிறர். ஆக, அ.சா.22 ஆக விசாரிக்கப்பட்ட விசாரணை அதிகாரி சார்லஸ்

> “ நான் கடந்த 01.09.2018 அன்று டி 13, குன்றத்தூர் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்த போது, மூன்றாம் கட்டளை அக்னீஸ்வரன் கோவில் தெருவை சேர்ந்த திரு.விஜய் என்பவர் நிலையம் ஆஜராகி காலை சுமார் 5.30 அளவில் கொடுத்த புகாரினை பெற்று டி.13, குன்றத்தூர் காவல்நிலைய குற்ற எண் 1101/2018, சட்டப்பிரிவு 302 (2எண்ணிக்கை) இதச வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன். அந்த புகார் ஏற்கனவே அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் பதிவு செய்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ23 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் கொடுத்த புகாரினையும், முதல் தகவல் அறிக்கையின் அசலையும்

துரித தபால் மூலம் கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருபெரும்புத்தூர் அவர்களுக்கும் மற்றும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். மேற்படி வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே மேற்படி சம்பவ இடமான நெ.2, அக்னீஸ்வரன் கோவில் தெரு, மூன்றாம் கட்டனை, குன்றத்தூர், சென்னை என்ற இடத்திற்கு சென்று காலை சமார் 6.30 மணிக்கு சாட்சிகள் முத்து மற்றும் பஞ்சாட்சரம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடம் குறித்து பார்வைமகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். மேலும் சாட்சிகள் முத்து மற்றும் பஞ்சாட்சரம் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் தயாரித்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ24 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிறகு அன்றையதினமே காலை 7 மணி முதல் 8 மணி வரை சம்பவ இடத்தில் வைத்து பஞ்சாயத்தார்கள் கன்னியப்பன், ரவிசந்திரன், மணி, சௌந்தராஜன், சசிகுமார் ஆகியோர்கள் முன்னிலையில் இறந்து போன சிறுவன் அஜய், வயது 6, கார்னிக்கா, வயது 4 இருவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன் அஜயின் பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ25 மற்றும் கார்னிக்காவின் பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ26 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரேத விசாரணை மேற்கொண்ட பின்னர் இரண்டு பிரேதங்களையும் பெண் காவலர் 36528, திருமதி.பாக்கியசாந்தி, டி 13, குன்றத்தூர் காவலர் மூலமாக சம்மந்தப்பட்ட உரிய ஆவணங்களுடன் பிரேத பரிசோதனை மேற்கொள்ள வேண்டி அரசு பொது மருத்துவமனை குரோம்பேட்டைக்கு அனுப்பி வைத்தேன். அன்றையதினமே சம்பவ இடத்தில் வைத்து சாட்சிகள் விஜய், கவிதா மற்றும் பூபதி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து அவர்களது வாக்குமூலத்தை தனித்தனியே பதிவு செய்தேன். அன்றையதினமே சென்னை கோயம்பேடு பேருந்துநிலையத்தில்

பின்னர் அமைந்துள்ள இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் இடத்திற்கு சென்று இருசக்கர வாகனம் உள்ளே வரும் வழியில் உள்ள சிசிடிவி கேமிராவில் 3108.2018 அன்று 16.42 மணி முதல் 17.00 மணி வரை பதிவான விவரங்களை சிடி-யில் பதிவு செய்து கொடுக்குமாறு கேமிராக்களை பராமரிக்க ஒப்பந்தம் செய்திருந்த ஸ்ரீமங்கலம் ஏஜென்சி நிறுவனத்தில் பணிபுரிந்த திருகோபாலகிருஷ்ணன் என்பவரிடம் கேட்டேன். அதன்படி மேற்படி கோபாலகிருஷ்ணன் மேற்படி சிசிடிவி பதிவுகளை பதிவு செய்து சிடி-யும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65(பி) சான்றிதழையும் வழங்கினார். சிடி ஏற்கனவே அ.சா.பொ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரிவு 65பி இந்திய சாட்சிய சட்டத்தின் கீழ் வழங்கிய சான்றிதழ் ஏற்கனவே அ.சா.ஆ26 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சிடியை படிவம்91 மூலம் கைப்பற்றினேன். அந்த படிவம்91 அ.சா ஆ.27 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அப்பொழுதே சாட்சி கோபாலகிருஷ்ணன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 02.09.2018 அன்று காலை எனக்கு கிடைத்த தகவலின் படி எனது போலிஸ் பார்ட்டி சகிதம் கோயம்பேடு பேருந்து நிலையம் அருகே இருசக்கர வாகனம் நிறுத்தும் இடத்திற்கு சென்று கண்காணித்து கொண்டிருந்த போது காலை சுமார் 6 மணிக்கு இந்த வழக்கின் எதிரிகளான அபிராமி மற்றும் மீனாட்சிசுந்தரம் அவர்களை பார்த்து அவர்களை நோக்கி வேகமாக சென்ற போது எதிரி மீனாட்சிசுந்தரம் எங்களை பார்த்து இருசக்கர வாகனத்தில் ஏறி தப்ப முயன்ற போது கீழே விழுந்து அவருக்கு வலது கையில் அடிபட்டது. என்னுடன் வந்த போலிசார் மற்றும் பெண் போலிசார் உதவியுடன் எதிரிகள் அபிராமி மற்றும் மீனாட்சிசுந்தரம் ஆகியோர்களை கைது செய்தேன். பின்னர் எதிரி மீனாட்சிசுந்தரத்திற்கு வலது கையில் அடிபட்டதால் அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை அளித்துவிட்டு மீண்டும் கோயம்பேடு பேருந்து நிலைய இருசக்கர வாகனம் நிறுத்தும் இடத்திற்கு எதிரிகளை அழைத்து வந்தேன். பின்னர்

காலை 6.30 மணியளவில் சாட்சிகள் இரமேஷ் மற்றும் விஜயன் ஆகியோர் முன்னிலையில் எதிரி மீனாட்சிசுந்தரம் என்னிடம் ஆஜர் செய்த GIONEE 13132552 (Part I) 1-60950-1R-63000370 Android gold color செல்போனையும் எதிரி அபிராமி ஆஜர் செய்த Samsung JTNXE-DUOS-Android black color செல்போனையும் மகஜரில் கைப்பற்றினேன். ஜியோனி செல்போன் அ.சா.பொ6 மற்றும் சாம்சங் செல்போன் அ.சா.பொ.7 ஆகவும் அதற்கான கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ7 ஆகவும் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த இடத்தில் வைத்து எதிரி அபிராமி எந்தவித அச்சுறுத்தலும் துன்புறுத்தலும் ஆசை வார்த்தையும் இன்றி தானாக முன்வந்து சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை காலை 7 மணி முதல் சாட்சிகள் விஜயன் மற்றும் இரமேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் மடிகணினி மூலம் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி அபிராமி தன்னை அழைத்து சென்றால் குழந்தைகளை அமுக்கி மூச்சு திணறடித்து கொலை செய்த இடத்தையும் செயினை விற்பனை செய்த இடத்தையும் மாத்திரை வாங்கி கொலை செய்யலாம் என திட்டம் போட்டு மாத்திரை வாங்கிய மருந்து கடையையும் அடையாளம் காட்டுவேன் என சொன்னார். பின்னர் அதே இடத்தில் வைத்து அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி மீனாட்சி சுந்தரம் எவ்வித அச்சுறுத்தலும் துன்புறுத்தலும் ஆசை வார்த்தையும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காலை 8 மணி முதல் மடிகணினி மூலம் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி மீனாட்சிசுந்தரம் தன்னை அழைத்து சென்றால் அபிராமி குழந்தைகளை அமுக்கி மூச்ச திணறடித்து கொலை செய்த இடத்தையும் தான் வேலை செய்த ஓட்டலையும் தான் தங்கியிருந்த வீட்டையும் அடையாளம் காட்டுவேன் என சொன்னார். அதன் பின்னர் கோயம்பேடு பேருந்துநிலைய இருசக்கர வாகன நிறுத்தத்தில் அபிராமி அடையாளம் காட்டி ஆஜர் செய்த TVS Scooty pink color பதிவு எண் TN85C9360 என்ற

> இருசக்கர வாகனத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜர் தயார் செய்து அதை கைப்பற்றினேன். அந்த ஸ்கூட்டி அ.சா.பொ.8 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ 11 ஆகவும் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. ”

என சாட்சியமளித்துள்ளாா். அ.சா.22 ஆக விசாாிக்கப்பட்ட விசாரணை அதிகாாி சாா்லஸ் தான் சா.பொ.1 ஸ்கூட்டியை கைப்பற்றியதாகவும் சா.பொ.6 ஜியோனி செல்போன் சா.பொ.7 சாம்சங் செல்போன் ஆகியவற்றை கைப்பற்றியதாகவும் 1வது எதிாி அளித்துள்ள ஒப்புதல் வாக்குமூலத்தையும் மற்றும் 2வது எதிாி மீனாட்சி சுந்தரம் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தையும் பதிவு செய்ததாக கூறுகின்ற சாட்சியம் அ.சா.9 விஜயன் மற்றும் அ.சா.11 ரமேஷ் ஆகியோாின் சாட்சியத்தால் உறுதிப்படுத்தப்படுகின்ற நிலையில் அ.சா.22 விசாரணை அதிகாாி 1வது எதிாி அபிராமியை கைது செய்து சம்பவ இடத்தில் மேற்கொண்ட விசாரணை குறித்து காண்கின்றபோது அ.சா.22 தன்னுடைய சாட்சியத்தில் பின்வருமாறு கூறுகிறாா்.

> “ பின்னர் எதிரி அபிராமியை சம்பவயிடத்தில் விசாரணை செய்தபோது குழந்தைகளை கொலை செய்ய பயன்படுத்திய மாத்திரைகளை, மருத்துவரை பார்த்து மருந்து வாங்கியதாகவும் மருத்துவர் எழுதி கொடுத்த சீட்டும் மற்றும் மீதமுள்ள மாத்திரைகளையும் மற்றும் மாத்திரை வாங்கிய பில்லும் தனது வீட்டில் வைத்திருப்பதாக தெரிவித்தார். பின்னர் காலை சுமார் 11.50 மணிக்கு நெ.2, அக்னீஸ்வரன் கோவில் தெரு, மூன்றாம் கட்டளை, குன்றத்தூர், சென்னை என்ற தன் வீட்டிலிருந்து எதிரி அபிராமி எடுத்து ஆஜர் செய்த T.TRAFFIC MG Tablet-3 Nos., T.BCALM 0.5MG Tablet-3Nos.,

C.BECOSULOS Tablet-5Nos. ஆகியவைகளை சாட்சிகள் சரவணகுமார் மற்றும் கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலையில் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன் அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மாத்திரைகள் முறையே அ.சா.பொ.2 முதல் அ.சா.பொ.4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் அதே இடத்தில் வைத்து மகஜர் சாட்சிகள் சரவணகுமார் மற்றும் கார்த்திகேயன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரி அபிராமி குழந்தைகளை கொலை செய்ய மருந்து சீட்டு மூலம் மாத்திரை வாங்கிய கடையையும் எதிரி மீனாட்சிசுந்தரத்துடன் தப்பி செல்ல பணத்திற்காக ஒரு சவரன் செயினை விற்பனை செய்த கடையையும் அடையாளம் காட்டுவேன் என கூறியதால் எதிரியுடன் முதலில் நெ.4/323ஏ, குன்றத்தூர் மெயின்ரோடு, கோவூர் என்ற முகவரிக்கு சென்று அங்கே இயங்கி வந்த மணி மெடிக்கல்ஸ் என்ற கடைக்கு சென்றோம். எதிரி அபிராமி குழந்தைகளை கொல்ல மாத்திரை வாங்கிய கடை மணி மெடிக்கல்ஸ் ஸ்டோர் இதுதான் என அடையாளம் காட்டினார். பின்னர் எதிரி அபிராமியுடன் நெ.81/1, பல்லா தெரு, குன்றத்தூர், சென்னை என்ற முகவரியில் இயங்கி வந்த விஷால் நகை கடைக்கு சென்றோம் அங்கு எதிரி அபிராமி கொலை செய்த பிறகு எதிரி மீனாட்சிசுந்தரத்துடன் தப்பி செல்ல ஒரு சவரன் செயினை ரூபாய் 17,000/-க்கு விற்பனை செய்த கடை இதுதான என அடையாளம் காட்டினார். உடனே கடையின் உரிமையாளர் சாட்சி லலித்குமார் மேற்படி செயினை ஆஜர் செய்ய எதிரி அபிராமி அதனை அடையாளம் காட்டினார். பின்னர் எதிரி அபிராமி மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் வந்து எதிரிகளை திரேக பரிசோதனைக்கு உட்படுத்தி முறைப்படி நிலைய பாராவிடம் ஒப்படைத்தேன். ”

என சாட்சியமளித்துள்ளார்.

சப.பொ.2 முதல் சா.பொ.4 வரை உள்ள மாத்திரைகள் கைப்பற்றப்பட்டது குறித்து அ.சா.6 சரவண குமார் மற்றும் அ.சா.10 கார்த்திகேயன் ஆகியோர்களின் சாட்சியத்தை காண்கின்றபோது அ.சா.6 சரவணகுமார் 1வது எதிரி அபிராமி தன்னுடைய தாய்மாமா செல்வத்தின் மகள் என கூறுகிறார். அவரது சாட்சியம் நெருங்கிய உறவினரின் சாட்சியம். தன்னுடைய மாமா மகள் குறித்து அவர் பொய் சொல்லவேண்டிய அவசியம் எதுவும் அவருக்கு கிடையாது.

அ.சா.4 செந்தில் நடந்த விவரங்களைக்கூறுகிறார்

| |
|---|
| " ஆஜர் எதிரிகளில் அபிராமியை எனக்கு தெரியும். 30.08.2018 அன்று மதியத்திற்கு மேல், நேரம் சரியாக ஞாபகம் இல்லை, அபிராமி மருந்து சீட்டு கொண்டு வந்து மருந்து கேட்டார். நான் அந்த சீட்டை வாங்கி பார்த்தேன், அதில் எழுதியிருந்த மருந்து விவரத்தை பார்த்தேன். Trafic-mf என்ற 10 மாத்திரையும், Becalm 0.5mg என்ற 8 மாத்திரையும், Becosules என்ற 5 மாத்திரையும் அந்த மருந்து சீட்டில் எழுதப்பட்டிருந்தது. மேற்கண்ட 3 மாத்திரைகளையும் எடுத்து கொடுத்துவிட்டு அதற்கான ரூபாய்298.80பைசா வாங்கி கொண்டு மருந்தையும் மருந்துக்கு உண்டான சீட்டையும் திருப்பி கொடுத்துவிட்டேன். அதற்கு பிறகு 02.09.2018 அன்று மதியம் போல, நேரம் சரியாக ஞாபகம் இல்லை. குன்றத்தூர் ஆய்வாளர், மற்றும் 2 பெண் போலிசாருடன் அபிராமியை அழைத்து கொண்டு என் கடைக்கு வந்தார்கள், அபிராமி என் கடையை போலிசாரிடம் அடையாளம் காட்டினார். நான் கொடுத்த கேஷ்பில்லை வைத்து என்னை விசாரித்தார். அதில் குறிப்பிட்டுள்ள மருந்தை நான் கொடுத்தேன் என்று ஆய்வாளரிம் சொன்னேன். என் பில் புக்கை ஆய்வாளர் வாங்கி பார்த்தார். என் கடையின் உரிமத்தை வாங்கி பார்த்தார். பிறகு மருந்தாளுனர் என்பதற்கான என்னுடைய சான்றிதழையும் |

வாங்கி பார்த்தார். என்முன்பாக அபிராமியை ஆய்வாளர் விசாரித்தார். அப்போது அபிராமி ஆய்வாளரிடம் தன்னுடைய கள்ளகாதலன் சுந்தரம் என்பவர் போட்டு கொடுத்த திட்டத்தின்படி மருத்துவரிடம் சென்று மருந்துசீட்டை வாங்கி என் கடையில் வந்து மருந்து வாங்கி குழந்தைகளுக்கு பாலில் கலந்து கொடுத்து கொன்றதாக வாக்குமூலம் சொன்னார். அபிராமி சொன்னதை ஆய்வாளர் எழுதி கொண்டார். என்னிடம் காண்பிக்கப்படும் பில்புக்கில் உள்ள 30.08.2018 தேதியிட்ட பில்.எண் 5263 என்ற ரசீதின் கார்பன் காப்பி இதுதான், அது சா.பொ1 ஆகும். ”

என சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.10 ஆக விசாரிக்கப்பட்ட கார்த்திகேயன் என்பவரும் 1வது எதிரி அபிராமிக்கு நெருங்கிய உறவினர். அவர் 1வது எதிரி அபிராமியின் சித்தப்பர். அவர் தனது சாட்சியத்தில்

“ ஆஜர் எதிரிகளில் எனக்கு 1ம் எதிரி அபிராமியை தெரியும், அவர் என்னுடைய அண்ணன் சௌந்தராஜனின் மகள் ஆவார். ”

என கூறுபவர்

“ 01.09.2018 அன்று காலையில் 6.45 மணியிலிருந்து 7 மணிக்குள்ளாக என் அக்கா மகன் சரவணகுமார் நான் எனது வீட்டில் இருக்கும் போது எனக்கு போன் செய்து, அபிராமியின் கணவர் விஜய் தனக்கு போன் செய்ததாகவும், அப்போது அபிராமி குழந்தைகளுக்கு மாத்திரை போட்டு கொடுத்து கொன்றுவிட்டு ஓடிபோய்விட்டதாக தன்னிடம் சொன்னதாக சரவணகுமார் என்னிடம் சொன்னார். நான் என்னுடைய வீட்டிலிருந்து உடனே கிளம்பி

அபிராமியின் வீட்டிற்கு போனேன் அப்போது காலை 8 மணி இருக்கும். நான் அந்த வீட்டிற்கு போனபோது அங்கு நிறைய பேர் இருந்தார்கள். அவர்களிடம் நான் கேட்டபோது, குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு இரண்டு குழந்தைகளையும் கொண்டுபோய்விட்டதாக சொன்னார்கள். அங்கிருந்து புறப்பட்டு குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு போனேன். அன்று மாலை 4.30 மணியாவில் போஸ்டுமாடம் முடித்து இரண்டு குழந்தைகளின் பிரேதத்தை கொடுத்தாங்கள். அப்போது அங்கிருந்த நான், சரவணகுமார், விஜய் மற்றும் உறவினர்கள் எல்வோரும் சேர்ந்து பெரியபனிச்சேரியில் உள்ள அண்ணன் சௌந்தரராஜன் வீட்டிற்கு கொண்டுபோய் எங்களுடைய குலவழக்கப்படி சடங்குகள் செய்து மயானத்தில் அடக்கம் செய்தோம் அன்று விஜய் அப்செட்டாகவே இருந்தார். அப்போது அவனை கூப்பிட்டு கொண்டு நான், சரவணகுமார், விஜய் மூலரும் விஜய் வீட்டிற்கு இரவு 10.30 மணிக்கு வந்துவிட்டோம் இரவில் விஜயின் வீட்டில் தங்கியிருந்தோம் அடுத்த நாள் காலையிலும் அங்குதான் இருந்தோம். காலையில் போய் டிபன் வாங்கி வந்தேன், விஜய் சாப்பிடவில்லை, நானும் சரவணகுமாரும் சாப்பிட்டுவிட்டு அங்கே இருந்தோம். காலை 11.30 அல்லது 11.45 மணிக்கு அபிராமியை ஆய்வாளர் மற்றும் இரண்டு பெண் காவலர்கள் சேர்ந்து கூட்டி கொண்டு வந்தார்கள். எங்களை பார்த்து யார் என்று கேட்டார்கள். நான் அபிராமிக்கு சித்தப்பா முறை வேண்டும் என்று சொன்னேன் அபிராமி வீட்டிற்குள்ளிருந்து மாத்திரை சீட்டு. மாத்திரை, மாத்திரை இருந்த அட்டை ஆகியவற்றை எடுத்து கொடுத்தார். அவர் எடுத்து கொடுத்த மாத்திரைகளின் பெயர் Tafic-mf. T.Becolm, Becosules ஆகும். இந்த மாத்திரைகளை எடுத்ததற்கு சாட்சிகளாக இருக்கிறீர்களா என்று என்னையும் சரவணகுமாரையும் பார்த்து கேட்டார்கள். நாங்கள் இருப்பதாக சம்மதம் தெரிவித்தோம். போலிசார்கள் லேப்டாப்பில் வேலை செய்தார்கள். எங்களையும் அங்கேயே இருக்க சொல்லிலிட்டு அந்த லேப்டாப்பை வெளியே எடுத்து கொண்டு போய்விட்டு 20

| |
|---|
| நிமிடத்தில் வந்தார். அந்த தட்டச்சு செய்த மகரில் நான் மற்றும் சரவணகுமார் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படுகின்ற ஏற்கனவே அதாஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள கைப்பற்றுதல் மகரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான் போலிசார் என்னை விசரித்தார்கள். ” |

என சாட்சியமளித்திருக்கிறார். அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்ட செந்தில் என்பவரது சாட்சியமும் முக்கியமானது. அவர் தனது சாட்சியத்தில்

| |
|---|
| “ஆஜர் எதிரிகளில் அபிராமியை எனக்கு தெரியும். 30.08.2018 அன்று மதியத்திற்கு மேல், நேரம் சரியாக ஞாபகம் இல்லை, அபிராமி மருந்து சீட்டு கொண்டு வந்து மருந்து கேட்டார். நான் அந்த சீட்டை வாங்கி பார்த்தேன், அதில் எழுதியிருந்த மருந்து விவரத்தை பார்த்தேன். Trafic-mf என்ற 10 மாத்திரையும், Becalm 0.5mg என்ற 8 மாத்திரையும், Becosules என்ற 5 மாத்திரையும் அந்த மருந்து சீட்டில் எழுதப்பட்டிருந்தது. மேற்கண்ட 3 மாத்திரைகளையும் எடுத்து கொடுத்துவிட்டு அதற்கான ரூபாய்298.80பைசா வாங்கி கொண்டு மருந்தையும் மருந்துக்கு உண்டான சீட்டையும் திருப்பி கொடுத்துவிட்டேன். அதற்கு பிறகு 02.09.2018 அன்று மதியம் போல, நேரம் சரியாக ஞாபகம் இல்லை. குன்றத்தூர் ஆய்வாளர், மற்றும் 2 பெண் போலிசாருடன் அபிராமியை அழைத்து கொண்டு என் கடைக்கு வந்தார்கள், அபிராமி என் கடையை போலிசாரிடம் அடையாளம் காட்டினார். நான் கொடுத்த கேஷ்பில்லை வைத்து என்னை விசாரித்தார். அதில் குறிப்பிட்டுள்ள மருந்தை நான் கொடுத்தேன் என்று ஆய்வாளரிம் சொன்னேன். என் பில் புக்கை ஆய்வாளர் வாங்கி பார்த்தார். என் கடையின் உரிமத்தை வாங்கி பார்த்தார். பிறகு மருந்தாளுனர் என்பதற்கான என்னுடைய சான்றிதழையும் வாங்கி பார்த்தார். என்முன்பாக அபிராமியை ஆய்வாளர் விசாரித்தார். அப்போது அபிராமி ஆய்வாளரிடம் தன்னுடைய கள்ளகாதலன் சுந்தரம் |

என்பவர் போட்டு கொடுத்த திட்டத்தின்படி மருத்துவரிடம் சென்று மருந்துசீட்டை வாங்கி என் கடையில் வந்து மருந்து வாங்கி குழந்தைகளுக்கு பாலில் கலந்து கொடுத்து கொன்றதாக வாக்குமூலம் சொன்னார். அபிராமி சொன்னதை ஆய்வாளர் எழுதி கொண்டார். என்னிடம் காண்பிக்கப்படும் பில்புக்கில் உள்ள 30.08.2018 தேதியிட்ட பில்.எண் 5263 என்ற ரசீதின் கார்பன் காப்பி இதுதான், அது சா.பொ1 ஆகும். போலிசார் என்னை கடையில் வைத்து விசாரித்தனர். ”

என சாட்சியமளித்துள்ளார். ஆக, அ.சா.22ஆகிய விசாரணை அதிகாரியின் சாட்சியம் அ.சா.4 செந்தில், அ.சா.6 சரவணகுமார், அ.சா.10 கார்த்திகேயன் அ.சா.9 விஜயன், அ.11 ரமேஷ், அ.சா.7 கோபாலகிருஷ்ணன், அ.சா.8 செல்வம், அ.சா.15 குமார் மற்றும் அ.சா.19 கார்த்திகேயன் ஆகியோர்களின் சாட்சியங்கள் மூலமும் அரசுத்தரப்பு வழக்கு நிறுவப்பட்டுள்ளது.

இந்த வழக்கை பொருத்தவரையில், 128, மூன்றாம் கட்டளை , எண்.2.அக்னீஸ்வரன் கோயில் தெரு என அ.சா.ஆ.2 பார்வை மகசரில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் அ.சா.1 விஜய் குடும்ப தலைவராக இருக்க 1ம் எதிரி குடும்பத்தலைவியாகவும் 2 குழந்தைகள் அஜய் மற்றும் கார்னிகா ஆகியோர்கள் அந்த வீட்டில் வசித்ததும் அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

30.08.2018 அன்று குழந்தைக்கு 1ம் எதிரி பால் கொடுத்தார் எனவும் தனக்கும் பால் கொடுத்தாகவும் அந்த பால் கசப்பாக இருந்ததால் அதை தான் குடிக்கவில்லை எனவும் அ.சா.1 கூறுகிறார். அ.சா.1, 01.09.2018 அன்று அதிகாலை தனது

மனைவியாகிய 1ம் எதிரியின் சகோதரர் பிரசன்ன மணிகண்டனுடன் வீட்டிற்கு வந்தபோது குழந்தைகள் இருவரும் இறந்து கிடந்ததை பார்த்துள்ளார். ஆனால் 1வது எதிரி அபிராமி வீட்டில் இல்லை. மாறாக 1வது எதிரி எங்கிருந்தார் என்பதற்கு அ.சா.14 ஆக விசாரிக்கப்பட்ட குன்றத்தூரில் குடியிருந்த அதே குன்றத்தூரிலேயே விஷால் ஜுவல்லரி என்ற கடையை 25 ஆண்டுகளாக நடத்தி வரும் அ.சா.14 லலித்குமார் தன்னுடைய சாட்சியத்தில்

| |
|---|
| " 31.08.2018 அன்று மதியம் 1 மணியளவில் ஆஜர் எதிரி அபிராமி என் கடைக்கு வந்து செயினை அடமானம் வைப்பதாக சொன்னார், நான் அந்த நகையை வாங்கி கொண்டு ரூபாய் 12 ஆயிரம் தான் வரும் என்று சொன்னேன், அதற்கு உடல்நிலை சரியில்லை அதனால் அவர் தனக்கு கூடுதலாக பணம் தேவை என்றும், அந்த நகையை விலைக்கு எடுத்து கொள்ளுங்கள் என்றும் சொன்னார். நான் அந்த நகையை ரூபாய் 17ஆயிரம் விலைமதித்து ரூபாய் 17ஆயிரம் ரொக்கத்தை அபிராமிக்கு கொடுத்துவிட்டு நகையை நான் கிரையத்திற்கு வாங்கி கொண்டேன். 02.09.2018 அன்று மதியம் அளவில் குன்றத்தூர் காவல்நிலையத்திலிருந்து ஆய்வாளரும் இரண்டு பெண் காவலரும் அபிராமியை கூட்டி கொண்டு என் கடைக்கு வந்தார்கள். வந்து என்னிடம் அபிராமி விற்றுவிட்டு போன நகையை அடையாளம் காட்ட சொன்னார்கள். நான் அபிராமி என்னிடம் விலைக்கு கொடுத்துவிட்டு போன நகையை ஆய்வாளரிடம் காட்டினேன். அந்த ஆய்வாளர் அபிராமியிடம் என்ன நடந்தது என்பதை என்னிடம் சொல்ல சொன்னார். அப்போது அபிராமி தன் குழந்தைகள் இருவரை மருந்து வைத்து கொன்றுவிட்டதாக என்னிடம் சொன்னார். நான் அதிர்ச்சி அடைந்தேன். என்னிடம் வாக்குமூலம் வாங்கி கொண்டு போய்விட்டார்கள். ஆஜர் 1வது |

எதிரி அபிராமிதான் அன்று என்னிடம் தங்க நகையை விற்று பணம் வாங்கிபோனவர். அன்று நான் கிரையம் வாங்கிய நகையை இன்று நான் கொண்டு வந்திருக்கிறேன். இதுதான் அந்த நகை ஆகும். ”

என சாட்சியமளித்திருக்கிறார். ஆக, லலித்குமார் சாட்சியத்தின்படி 02.09.2018 அன்று அபிராமியை குன்றத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் 2 பெண் காவலர்கள் அழைத்துக்கொண்டு அ.சா.14 லலித்குமரின் நகைக்கடைக்கு வந்துள்ளார்கள். முன்னதாக 31.08.2018 அன்று ரூ.17,000/-க்கு அபிராமி நகையை விற்றுவிட்டுச் சென்றுள்ளார் என்பது தெரிய வருகிறது.

அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்ட பிந்து என்பவரின் சாட்சியம் பின்வருமாறு உள்ளது. அந்த பிந்து என்பவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோயிலில் முத்தமிழ் தெருவில் காருண்யா ஹாஸ்டல் எனப்படும் விடுதியில் சமையல் வேலை செய்து வருபவர். அவர் தன்னுடைய சாட்சியத்தில் 1 வது எதிரி தங்கிச் சென்றது குறித்து கூறுகின்றபோது

“ அந்த ஹாஸ்டலில் வேலைக்கு போய்வரும் பெண்களும் இன்டர்வியூக்கு வந்து போகும் பெண்களும் வந்து தங்கி செல்வார்கள். 01.09.2018 அன்று காலை 7மணிக்கு 25 வயது மதிக்கதக்க ஒரு பெண் வந்தார். விடுதியில் தங்குவதற்கு இடம் வேண்டும் என கேட்டார். அவர் தனது பெயர் அபிராமி என்றும் சென்னையிலிருந்து வந்திருப்பதாகவும் சொன்னார். விடுதியில் தங்க அறை வேண்டும் என கேட்டார். அந்த அபிராமியிடம் நான் எங்கள் மேடம் கிளாடிஸ்கில்டா வெளியே போயிருப்பதாகவும் 5 மணிக்குதான் வருவார் என்று சொன்னேன். அதுவரைக்கும் காத்திருப்பதாக அபிராமி சொன்னார். குளிப்பதற்கு மட்டும் ஏற்பாடு செய்து கொடுக்கும்படி சொன்னார். நான் மேடம்

கிளாடிஸ்கில்டாவிடம் கேட்டுவிட்டு அபிராமி குளிக்க சம்மதம் கொடுத்தேன். குளித்து விட்டு வந்து காத்திருப்பதாக அபிராமி என்னிடம் சொன்னாள். ஆனால் விடுதியின் மேல் மாடியில் குளிப்பதற்காக போன அபிராமி கீழே வந்திருக்கிறார், அவர் எங்களிடம் சொல்லாமல் விடுதியை விட்டு வெளியே போய்விட்டாள். பிறகு மாலை செய்திதாளை பார்த்துவிட்டு அபிராமி கொலை வழக்கில் சம்மந்தப்பட்டிருக்கிறார் என்பதை தெரிந்து கொண்டேன். பிறகு மறுநாள் 02.09.2018ம் தேதி அன்று குன்றத்தூர் ஆய்வாளர் நாகர்கோவிலில் உள்ள எங்கள் விடுதிக்கு விசாரணைக்காக வந்தார். அபிராமியின் புகைப்படத்தை என்னிடம் காட்டி ஆய்வாளர் என்னிடம் கேட்டார். நான் நடந்த விவரத்தை ஆய்வாளரிம் சொன்னேன். ஆஜரில் உள்ள முதல் எதிரி அபிராமிதான் 01.09.2018 அன்று நாகர் கோவிலில் உள்ள எங்கள் விடுதியில் வந்து அறை கேட்ட நபர் ஆவார். ”

என 1ம்எதிரியை அடையாளம் காண்பித்து சாட்சியமளித்துள்ளார். ஆக, அ.சா.8 பிந்து என்பவரின் சாட்சியத்திலிருந்து 1வது எதிரி நாகர்கோயிலுக்கு சென்று அங்கு காருண்யா விடுதியில் தங்க இடம் கேட்டதை அறிந்துகொள்ள முடிகிறது. ஏன்? 1வது எதிரி நாகர்கோயில் செல்லவேண்டும் எனற நியாயமான ஐயம் எழுகின்றது.

1வது எதிரி குழந்தைகள் இருவருக்கும் 2வது எதிரியுடன் பேசியது போன்று பாலில் மாத்திரைகளை கலந்துகொடுத்துவிட்டு நகையை விற்று பணம் பெற்றுக்கொண்டு பிறகு கோயம்பேடு பேருந்து நிலையம் சென்று அங்கே தன்னுடைய இருசக்கர வாகனமாகிய சா.பொ.8 ஆகிய ஸ்கூட்டி டி.என்.35 சி 9360 என்ற வாகனத்தை நிறுத்திவிட்டு தப்பிச்சென்றதை அறிந்துகொள்ள முடிகிறது.31.08.2018 அன்று 4.45 மணிக்கு தான் அந்த இருசக்கர வாகனத்தை கோயம்பேடு பேருந்து

நிறுத்தத்தில் 1வது எதிரி நிறுத்தினார் என்பது அ.சா.7ன் சாட்சியத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. சுமார் 3.30 மணி அளவில் முன்னதாக நகையை விற்று ரூ.17000/- பெற்றது அ.சா.14 லலித்குமாரின் சாட்சியத்தின் மூலம் நிரூபிக்கப்படுகிறது. இதிலிருந்து 1ம் எதிரி தன்னுடைய சொந்த குழந்தைகளை ஊரில் விட்டுவிட்டு தன்னுடைய இருசக்கர வாகனத்தை கோயம்பேடு வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்திவிட்டு நாகர்கோயில செல்லவேண்டிய அவசியம் எனன என்ற கேள்வி எழுகின்றது. 1,2 எதிரிகள் கைது செய்யப்பட்டது குறித்து அ.சா.9 விஜயன் என்பவரும் அ.சா.11 ரமேஷ் என்பவரும் தெளிவாக சாட்சியமளித்துள்ளனர். சம்பவத்திற்கு பிறகு 02.09.2018 அன்று காலை 6.00 மணிக்கு கோயம்பேடு இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் 1,2 எதிரிகள் இருவரையும் காவல் துறையினர் பார்த்ததும் காவல் துறையினரை பார்த்ததும் அவர்கள் சா.பொ.8 இருசக்கர வாகனம் மூலம் தப்பிச் செல்ல முயன்றதையும் அ.சா.9ம் அ.சா.11ம் தெளிவாக சுட்டிக்காட்டுகிறார்கள்.

1வது எதிரி அ.சா.4ன் மருந்துக்கடையில் மாத்திரை வாங்கியது குறித்து அ.சா.4 செந்தில் தெளிவாக சாட்சியமளித்துள்ளார். 1வது எதிரியை தவிர்த்து குழந்தைகளை வேறுயாரும் கொல்வதற்கான சாத்தியக்கூறுகள் கிடையாது. அ.சா.1க்கு குழந்தைகளை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் மற்றும் செயல் இருந்ததாக ஒரு துளி அளவு கூட ஐயம் எழ முகாந்திரம் இல்லை. அதற்கான சாட்சியங்களோ சாத்தியக்கூறுகளோ இல்லை. குழந்தைகள் தங்களுடைய தாயர் அளிக்கும் பாலை எந்தவிதமான ஐயத்திற்கும் அப்பாற்பட்டு அருந்தக்கூடியவர்கள். 1வது எதிரிக்கு குழந்தைகளை கொலை செய்ய வேண்டும் என எண்ணம் இருந்ததாக எதிரிகள்

தரப்பில் எந்த விதமான ஆதாரமோ சாட்சியங்களோ எந்த ஒன்றும் கிடையாது. 1வது எதிரி கைது செய்யப்பட்ட பிறகு தான் மருந்து வாங்கிய அ.சா.4ன் கடையை அடையாளம் காண்பித்து அங்கே சா.பொ.1 மருந்துகளுக்குண்டான இரசீது கைப்பற்றப்பட்டுள்ளது. 30.08.2018 அன்று மருந்துகளை வாங்கியது குறிப்பாக Alprazolam, Becalm 0.5 Mg மருந்து வாங்கியது அரசு தரப்பில் அ.சா.4 சாட்சியத்தின் மூலம் நிருபிக்கப்பட்டுள்ளது.

அ.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகசர் அ.சா.6 சரவணகுமார் அ.சா.10 கார்த்திகேயன் ஆகியோர் மூலம் 02.09.2018 அன்று காலை 11.50 மணியளவில் மருந்து அட்டைகளை 1வது எதிரி அபிராமி விசாரணை அதிகாரியான அ.சா.22 ன் வசம் அளித்ததும் அதற்கு சாட்சிகள் அ.சா.6 சரவணகுமாரும், அ.சா.10 கார்த்திகேயனும் இருந்ததும்அரசு தரப்பில் நிருபிக்கப்பட்டுள்ளது. அ.சா.6 சரவணகுமாரும், அ.சா.10 கார்த்திகேயனும் போலிசாரின் கையிருப்பு சாட்சிகள் கிடையாது. அவர்கள் 1வது எதிரி அபிராமிக்கு மிகமிகநெருங்கிய உறவினர்கள். அவர்கள் பொய் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது. அ.சா.6 சரவணகுமார் தன்னுடைய மாமன் மகளுக்கு எதிராகவும் அ.சா.10 கார்த்திகேயன் தன்னுடைய மகள் போன்ற அண்ணன் மகளுக்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்க வேண்டிய அவசியம் கிடையாது. இவர்கள் அ.சா.1 விஜய்க்கு எதிராக வேண்டுமானாலும் சாட்சியம் அளிப்பதற்குண்டான சாத்திய கூறுகள் உண்டே தவிர தன்னுடைய நெருங்கிய இரத்த வழி உறவினர் ஆன 1ம் எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்க வேண்டிய அவசியமோ தேவையோ அற்றவர்கள்.முன் விரோதம் எதுவும் எதிரிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்படவில்லை. எனவே, இயற்கையாக, இயல்பாக

அமைந்த சாட்சியமே அ.சா.6 சரவணகுமார் அ.சா.10 கார்த்திகேயன் ஆகியோர்களின் சாட்சியம். 1வது எதிரி வசம் இருந்து கைப்பற்றப்பட்ட மாத்திரைகள் வேதியியல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு தடய அறிவியல் துறை நஞ்சியல் பிரிவு அலுவலர் அ.சா.12 பூர்விஷா ரவி, அவற்றில் Alprazolam என்ற நச்சுப்பொருள் இருப்பதாக தெளிவுப்படுத்தி இருக்கிறார். இந்த சூழ்நிலையில் 1வது எதிரிக்கு எதிரான சூழலையும் அரசு தரப்பில் எதிரிகள் தான் தங்களுடைய திருமணத்தை தாண்டிய உறவிற்கு குழந்தைகள் இருவரும் இடையூறாக இருக்கிறார்கள் என முடிவு செய்து குழந்தைகளை இரக்கமின்றி கொலை செய்திருப்பதையும் நிருபித்துள்ளார்கள்.

இங்கே குறிப்பிட்டு கூற வேண்டியது என்னவென்றால் அ.சா.1 விஜய் தன்னுடைய சாட்சியத்தில் தனக்கு அளித்த பால் கசப்பாக இருந்தது என்பது குறித்து கூறியபோது

> “ 30.08.2018 அன்று இரவு நான் பணி முடித்து வீட்டிற்கு வந்த பிறகு என் மனைவி அபிராமி பாத்திரத்தில் பால் கலந்து எடுத்து வந்து இரண்டு குழந்தைகளுக்கும் எனக்கும் கொடுத்தார். நான் அந்த பாலை குடித்தேன் அது கசப்பாக இருக்கிறது என்று சொன்னேன். அதற்கு சர்க்கரை போட மறந்துவிட்டேன் போட்டு தருகிறேன் என்று போனார், அதனால் நான் எனக்கு பால் வேண்டாம் எனக்கு டயர்டாக இருக்கிறது நான் தூங்க போகிறேன் என்று சொல்லிலிட்டு தூங்க போகிறேன். ”

என சாட்சியம் அளித்திருக்கிறார். மேற்சொன்ன சாட்சியத்தை காண்கின்றபோது பால் கசந்து இருப்பதை அ.சா.1 விஜய் தெரிந்துக்கொண்டுள்ளார். ஆனால் பால் கசக்கிறது என்பதற்காகவே அதில் நச்சுப்பொருள் குறிப்பாக மாத்திரைகள் கலக்கப்பட்டது என

யாரும் நினைத்துக்கூட பார்க்க மாட்டார்கள். அ.சா.1ன் சாட்சியத்தின் இந்த பகுதியை காண்கின்றபோது அ.சா.1 விஜயை கூட 1, 2 எதிரிகள் கொலை செய்ய திட்டமிட்டிருப்பார்கள் என்ற ஐயம் எழுகிறது.

மேற்சொன்னவாறான பின்னனியில் இந்த வழக்கை காண்கின்றபோது மேற்குறிப்பிட்ட மதிப்பீட்டிலிருந்தும் வழக்கின் பொருண்மைகளிலிருந்தும் குற்றமானது கொலைதான் என அறிந்துக்கொள்ள முடிகிறது. பாலில் நச்சு மருந்துகளை கலந்து கொடுத்ததன் மூலம் மரணம் விளைவிக்கும் செயலை 1வது எதிரி செய்துள்ளார். இதற்கு 2வது எதிரி 1வது எதிரியுடன் செய்த கூட்டு சதி காரணமாக உள்ளது. 1ம் எதிரியின் செயலுக்கும் மரணத்திற்கும்இடையேயான காரணத் தொடர்பின் சான்றானது கொலையாகும் மரணம் விளைவிக்கும் குற்றத்தையே 1, 2 எதிரிகள் செய்ய திட்டமிட்டு 1ம் எதிரி அதை நிறைவேற்றி முடித்திருக்கிறார் என்பதை புலப்படுத்துகிறது.

இந்த வழக்கில் அரசு தரப்பில்

1. குழந்தைகள் இருவரின் மரணமானது மாத்திரைகள் வழி நஞ்சூட்டல் வாயிலாக ஏற்பட்டது.

2. 1வது எதிரி, மரணத்திற்கு காரணமான மாத்திரைகளை வாங்கி தன் வீட்டில் வைத்திருந்தது.

3. இறந்துபோன குழந்தைகளுக்கு பாலில் எதிரிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்படுவது போன்று குழந்தைகளின் பிரேத பரிசோதனை அறிக்கையில் உடம்பில் பால் இருந்தது குறித்து குறிப்பிடாததை கண்டாலும் நேரம் ஆகிய காரணத்தால் குழந்தைகளின்

உடம்பில் பால் இருக்க வேண்டிய அவசியம்இல்லை என்கின்ற நிலையில் குழந்தைகளுக்கு நச்சு கலந்த மாத்திரைகளை உட்கொள்ளச் செய்யும் வாய்ப்பு 1ம் எதிரிக்கு மட்டுமே இருந்தது- ஆகிய சூழல்கள் அரசுதரப்பில் நன்கு நிறுவப்பட்டுள்ளது. இந்த வழக்கே நஞ்சூட்டல் கொலை வழக்கு. எனவே சூழ்நிலை சாட்சியத்திற்கு வெளியே எதிரிகள் தரப்பில் மிக விரிவான விதத்தில் வாதிடுவது போன்றெல்லாம் வழக்கை வைக்க முடியாது.

இந்த வழக்கில் நன்கு தெரியும் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின் வாயிலாக 1வது எதிரி நஞ்சு கொண்ட மருந்துகளை வாங்கியது, தன் வீட்டில் வைத்திருந்தது ஆகியவற்றிற்கு அனுமதிக்கக்கூடிய அனுமானம் கொண்டு அரசுதரப்பு வழக்கை நியாயப்படுத்த முடிகிறது. உள்நோக்கம் இந்த வழக்கில் நன்கு நிருபிக்கப்பட்டுள்ளது. எனவே கொலையாகா மரணம் விளைவிக்கும் குற்றம் கிடையாது இது. இந்த இரண்டு மரணங்களும் கொலையாகும் மரணம் விளைவிக்கும் குற்றத்தின் கீழ் வருபவையே.

குற்றத்தை செயல்படுத்துவதற்கான கூட்டுசதி 1, 2 எதிரிகளுக்கு இருந்தது இந்த வழக்கில் நிலைநாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கு சூழ்நிலை சாட்சிய வழக்காக அமைந்துள்ளது. குற்றம் சாட்டப்பட்டவர்களின் குற்றத்தன்மையை சுட்டிக்காட்டுவதற்கான சாட்சியங்களே இந்த வழக்கில் உள்ளது. எதிரிகளின் குற்றமற்ற தன்மையை காண்பிப்பதற்கான சாத்திய கூறுகள் இந்த வழக்கில் இல்லை. எ.சா.1 முதல் எ.சா.6 வரை உள்ள சாட்சிகளின்

சாட்சியமோ எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.26 வரை சான்றாவணங்களோ எதிரிகட்கு உதவக்கூடியவை அல்ல.

இந்த வழக்கு சூழ்நிலை சாட்சியத்தின் அடிப்படையில் அமைந்த வழக்கு. எதிரிகளின் குற்றத்தன்மைக்கான அனுமானத்திலிருந்தும் மேற்சொன்னவாறு சுட்டிக்காட்டப்பட்ட சூழ்நிலைகள் நம்பத்தகுந்த வகையிலும் உறுதியான வகையிலும் நிலைநாட்டப்பட்டுள்ளது.

இத்தகைய சூழ்நிலைகள் குற்றம்சாட்டப்பட்ட 1, 2 எதிரிகளின் குற்றத் தன்மையை தவறின்றி சுட்டிக்காட்டும் உறுதியான போக்கு உடையதாக அமைந்துள்ளது. இவ்வழக்கில் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் சான்றாவணங்கள் மற்றும் சூழ்நிலைகள் ஆகியவற்றை ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொண்டு பார்க்கின்ற போது எதிரிகளால் குற்றம் செய்யப்பட்டுள்ளது, மற்றவர்களால் அல்ல என்ற மனித சாத்திய கூறுகளுக்குள் அனைத்தும் இருந்தன என்ற முடிவிலிருந்து தப்பிக்க இயலாத வகையில் முழுமையான சங்கிலித் தொடராக சூழ்நிலைகள் எதிரிகளுக்கு எதிராக அமைந்துள்ளது.

சூழ்நிலை சாட்சியமானது முழுமையாக அமைந்துள்ளது. இந்த வழக்கில் எதிரிகளின் குற்றத்தன்மையை காட்டும் வாத ஆதாரம் தவிர வேறு எந்த வகை கருத்தையும் விளக்க முடியாதவாறு சூழ்நிலை சாட்சியம் உள்ளது. இந்த வழக்கில் அளிக்கப்பட்டுள்ள அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் குற்றம் சாட்டப்பட்டுள்ள எதிரிகளின் குற்ற தன்மையோடு இசைந்து போவது மட்டுமின்றி எதிரிகளின் குற்றமற்ற தன்மைக்கு முரணாகவும் இருக்கிறது.

சாட்சிய சங்கிலித் தொடரில் இடைவேளி விடப்படாமல் மெய்ப்பிக்கப்பட்டு சூழ்நிலைகள் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர்களின் குற்ற பொறுப்பின் கருத்துக்கு பொருத்தமாகவும் எதிரிகளின் குற்றமற்ற தன்மைக்கு முற்றிலும் பொருத்தமற்றும் அமைந்துள்ளது. எதிரிகளின் செயலானது அனைத்து மனித சாத்திய கூறுகளாலும் எதிரிகளால் தான் செய்யப்பட்டுள்ளது என காண்பிக்கும் வகையில் அமைந்துள்ளது. இந்த வழக்கில்எதிரிகளின் குற்ற ஏற்பு நிறுவப்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையில் எதிரிகள் தரப்பில் அளிக்கப்பட்டுள்ள எ.த.சா.1 முதல் 6 வரையுள்ள சாட்சிகளின் சாட்சியங்களும் எ.த.சா.ஆ. 1 முதல் எ.த.சா.ஆ. 26 வரையுள்ள சான்றாவணங்களும் எதிரிகளின் குற்றமற்ற தன்மையை நிருபிக்க போதுமானவையாக அமையவில்லை. எதிரிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்படும் முன் தீர்ப்புகள் எதுவும் இந்த வழக்கின் பொருண்மைகளுக்கும் சூழ்நிலைகளுக்கும் முற்றிலும் பொருந்தக்கூடியதாக அமையவில்லை.

இந்த வழக்கில் அ.சா.1, அ.சா.2, அ.சா.5, அ.சா.6 மற்றும் அ.சா.10 ஆகியோர் இயற்கையான சான்றுரைஞர்கள். அவர்கள் சாட்சியம் நம்பப் பட வேண்டும். இந்த வழக்கில் அளிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியத்தை மதிப்பிடுகின்றபோது குற்றம் நடைப்பெற்ற இடத்தின் சூழல்களையும் அமைப்பையும் சாட்சிகளின் புரிந்துக்கொள்ளும் அளவையும் (Level of Trust) கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இறந்துபோன குழந்தைகளின் உறவினர்கள் ஆகிய அ.சா.1 அப்பா, அ.சா.6 சரவணகுமார் அ.சா.10 கார்த்திகேயன் ஆகியோர்களின் சாட்சியம் மருத்துவர்களின் சாட்சியத்தோடு

இசைந்து போவதாக உள்ளநிலையில் குழந்தைகள் மாத்திரைகளின் நஞ்சுண்டு இறந்துள்ள நிலையில் அவர்களின் சாட்சியத்தை நிராகரிக்க முடியாது.

> “ சூழ்நிலைச் சான்றை மதிப்பிட அடிப்படை விதி என்னவெனில் குற்றப்பொறுப்புக்கான அனுமானத்தை நியாயப்படுத்த குற்றச்சாட்டில் சிக்க வைக்கும் பொருண்மைகள் ( inculpatory facts) குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றமற்ற தன்மையுடன் பொருந்தாததாக இருக்க வேண்டும் மற்றும் அவருடைய குற்றப்பொறுப்புத் தவிர வேறு எதையும் எவ்வித காரண ஆதாரமும் இல்லாமல் விளக்க முடியாதவாறு அது இருக்க வேண்டும்.

> “நீதிமன்றமானது விழிப்புடன் இருக்க வேண்டும் மற்றும் தெளிவின்மைகளும் சந்தேகங்களும் சான்றின் இடத்தைப் பிடித்துக் கொள்ளாமல் இருக்க உறுதி செய்ய வேண்டும். சந்தேகமானது, எவ்வளவு வலுவாக இருந்தாலும் சட்டச் சான்றிற்கு அது ஒரு மாற்று (substitute) ஆகாது. குற்றச்சாட்டானது கடுமையாக இருக்கும்போது சான்றின் தரமானது உயர்ந்ததாக இருக்க வேண்டும். " உண்மையாக இருக்கலாம்" ( may be true) மற்றும் " உண்மையாக இருக்க வேண்டும்" (must be true) என்பனவற்றிற்கு இடையில் நீண்டதான இடைவெளி உள்ளது என்பதை நீதிமன்றம் கருத்தில் கொள்ள வேண்டும்.” ”

மேற்சொன்ன சூழ்நிலைகளால் அரசுத்தரப்பில் அளிக்கப்பட்டுள்ள சாட்சியங்கள் எதிரிகளின் குற்றத்தன்மையை நிருபிக்க போதுமானது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வர முடிகிறது. உள்நோக்கம் என்பது பொதுவாக நடத்தையின் வாயிலாக மெய்ப்பிக்கப்படுவது.

“ குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றமற்ற தன்மை இருக்கக்கூடிய வாய்ப்புச் சிறிதளவு கூட இருப்பின் அந்த அனுகூலத்தை அவருக்கு அளிக்க வேண்டும். மெய்ப்பிக்கும் சுமையானது, எடுத்துக்காட்டாக, ஒரு விலக்களிப்பை மெய்ப்பித்தல், குற்றம் சாட்டப்பட்டவர் பேரில் இருப்பினும், " மெய்ப்பிக்கப்பட்டது" என்ற சொல்லுக்கு அரசுத் தரப்பின் மீது மெய்ப்பிக்கும் சுமை இருக்கும் போது, வேறுவிதமாக மற்றும் தாராளமாக பொருள் விளக்கும் அளிக்க வேண்டும்.

உள்நோக்கம் என்பது ஒது குறிப்பிட்ட செயலை ஒருவர் செய்ய உந்துவதாகும். உள்நோக்கமின்றி ஒரு செயலுமில்லை அது ஒவ்வொரு தன்னிச்சையான செயலுக்கும் இருக்க வேண்டும். பொதுவாக கூறின் நல்லறிவுடைய நபர்களின் தன்னிச்சையான செயல்கள் ஓர் உந்து உணர்ச்சியை அல்லது உள்நோக்கத்தைக் கொண்டிருக்கும். சரியான பொருளில் உள்நோக்கம் என்பதானது ஒரு செயலுக்கு இட்டுச்செல்லுவதாக கூறப்படும் மனக்கிளர்ச்சியாகும். நிறைய சமயங்களில் இது ஒருவரின் நடத்தை வாயிலாக மெய்ப்பிக்கப்படும். முந்தைய அச்சுறுத்தல்கள், பழைய வாய்ச் சண்டைகள் அல்லது தரப்பினரிடையேயான முந்தைய வழக்குகள் ஆகியன.”

இங்கே உள்நோக்கம் என்பது 1, 2 எதிரிகளுக்கிடையே இருக்கின்ற திருமணத்தை தாண்டிய உறவும் அதற்கு குழந்தைகள் இடையூறு என அவர்கள் நினைத்ததும் அதன் வழி அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையும் குழந்தைகளின் இறப்பிற்கு பிறகு அவர்களின் பிந்தைய நடவடிக்கைகளும் இந்த வழக்கில் உள்நோக்கத்திற்கு முக்கிய பங்கு வகிக்கிறது. இவ்வழக்கில் எதிரிகள் இருவரின் குற்ற ஏற்புரைகளாகிய ஒப்புதல்

வாக்குமூலங்களும் அதனை ஒட்டிய கைப்பற்றுதல்களும் அரசுத்தரப்பில் அய்யத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 106 ஐ இங்கே பொருத்த முடிகிறது. 1வது எதிரியின் 2 குழந்தைகளும் மருந்து கலந்த பாலை பருகி அதனால் ஏற்பட்ட நஞ்சால் இறந்துகிடந்தது நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த குழந்தைகளுக்கு மரணம் எவ்வாறு நிகழ்ந்தது என்பதை 1 வது எதிரி விளக்க கடமைப்பட்டவர். இதனை சாட்சிய சட்டம் பிரிவு 106ம் தெளிவாக எடுத்துரைக்கிறது. 1வது எதிரிக்கு தான் குழந்தைகளின் மரணம் குறித்து நன்கு தெரியும். 1வது எதிரி தரப்பில் விளக்கம் அளிக்கத்தவறுவது 1வது எதிரிக்கு எதிராகவே முடியும். எனவே குழந்தைகள் இறந்ததற்கான சூழ்நிலையை விளக்கும் பொறுப்பு 1வது எதிரிக்கு உள்ளது. இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 106 பின்வருமாறு உள்ளது.

> “ பிரிவு 106 ஏதாவது ஒரு நபரின் அறிவிற்கு மட்டுமே தனிச் சிறப்பாக தெரிந்து உள்ள எந்த ஒரு பொருண்மையையும் மெய்ப்பிக்கும் சுமையானது அவர் மீது உள்ளது. ”

மேற்சொன்ன இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 106ஐ கருததில் கொண்டு பார்க்கின்றபோது இந்த வழக்கில் உள்ள ஒவ்வொரு சூழ்நிலைகளும் எதிரிகளை தண்டிப்பதற்கு ஆதரவாகத்தான் அமைந்துள்ளது. குழந்தைகளிடமிருந்து எந்த நேரத்தில் எந்த நிலையில் பிரிந்து சென்றார் என்பதை 1வது எதிரி தான் மெய்ப்பிக்க கடமைப்பட்டவர். குழந்தைகள் தன் வீட்டில் எவ்வாறு மரணம் அடைந்தார்கள் என்பதையும் 1வது எதிரி தான் மெய்ப்பிக்கவேண்டும். குழந்தைகளின் இறப்பிற்கான

சூழ்நிலைகளை விளக்க வேண்டிய பொறுப்பு 1வது எதிரிக்கு உள்ளது. ஏனென்றால் குழந்தைகளின் இறப்புக்கான பொருண்மைகள் 1வது எதிரிக்கு மட்டுமே தெரிந்திருக்க முடியும். அவர் தான் பொருண்மைகளை மெய்ப்பிக்கவேண்டும்.

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 106ன்படி 1வது எதிரிக்கு மெய்ப்பிக்கும் சுமை கொடுக்கப்பட்டாலும் இந்த வழக்கை பொருத்தவரையில் வழக்கின் அடிப்படையிலான பொருண்மைகளும் சூழ்நிலைகளும் 1,2 எதிரிகளின் குற்றத்தன்மையையும் அரசு தரப்பில் நன்கு ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது. வீட்டுக்குள் குழந்தைகள் இறந்து கிடக்கின்ற நிலையில் சூழ்நிலையை விளக்க வேண்டிய சட்ட கடமை 1வது எதிரிக்கு உண்டு. ஆனால் 1வது எதிரி தரப்பில் அந்த சூழ்நிலைகள் விளக்கப்படவில்லை. இருந்தாலும் அரசு தரப்பில் 1வது எதிரியின் குற்ற செயல்பாடுகளால் தான் இவ்வழக்கில் குழந்தைகள் இருவரும் மரணம் அடைந்தார்கள் என்பதை ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளார்கள்.

மேற்சொன்னவாறான பின்னணியில் இவ்வழக்கினை பரிசீலனை செய்து பார்க்கின்றபோது இவ்வழக்கு 1,2 எதிரிகள் இருவரும் கூட்டாக சேர்ந்து சதி செய்து தங்களதுதிருமணத்திற்கு அப்பாற்பட்ட உறவிற்கு குழந்தைகள் இருவரும் தடையாக இருந்ததால் அவர்களை கொலை செய்ய சதி திட்டம்தீட்டி அதன் அடிப்படையில் 1வது எதிரி குழந்தைகள் இருவருக்கும் நஞ்சு கலந்த மாத்திரைகளை கொடுத்து மரணம் ஏற்படுத்தியுள்ளார் என்பது அரசு தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது. இங்கே 1, 2 எதிரிகளின் திட்டமிடலும ஒருங்கிணைப்பும் இருந்தது என்பதையும் நன்கு அறிந்துகொள்ள முடிகிறது.

இவ்வாறு 1,2 எதிரிகள் இருவரும் குற்றமுறு சதித்திட்டம் தீட்டி 1வது எதிரி குழந்தைகளுக்கு நஞ்சு கலந்த மாத்திரைகளை கொடுத்து குழந்தைகள் இருவருக்கும் கொலையாகும் மரணம் விளைவித்திருக்கின்ற காரணத்தால் 1 வது எதிரி மீதான இ.த.ச. பிரிவு 120(B) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302 மற்றும் இ.த.ச. பிரிவு 302( 2 எண்ணிக்கைகள்)படியான குற்றச்சாட்டுகளையும் 2வது எதிரியின் மீதான இ.த.ச. பிரிவு 120(B) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302 மற்றும் இ.த.ச. பிரிவு 302 உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 109 ( 2 எண்ணிக்கைகள்)படியான குற்றச்சாட்டுகளையும் அரசு தரப்பில் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் மூலம் நீதிமன்றம் உள நிறைவை அடைகின்ற வண்ணம் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நன்கு நிறுவப்பட்டுள்ளது.

மேற்கூறியவாறான பின்னணியில் இவ்வழக்கை பரிசீலனை செய்து பார்க்கின்றபோது 1 வது எதிரி மீதான இ.த.ச. பிரிவு 120(B) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302 மற்றும் இ.த.ச. பிரிவு 302( 2 எண்ணிக்கைகள்)படியான குற்றச்சாட்டுகளையும் 2வது எதிரியின் மீதான இ.த.ச. பிரிவு 120(B) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302 மற்றும் இ.த.ச. பிரிவு 302 உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 109 ( 2 எண்ணிக்கைகள்)படியான குற்றச்சாட்டுகளையும் அரசு தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதால் இவ்வழக்கு 1 வது எதிரி இ.த.ச. பிரிவு 120(B) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302 மற்றும் இ.த.ச. பிரிவு 302( 2 எண்ணிக்கைகள்) ஆகியவற்றின்படியும் 2வது எதிரி இ.த.ச. பிரிவு 120(B) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302 மற்றும் இ.த.ச. பிரிவு 302 உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 109 ( 2

எண்ணிக்கைகள்)ஆகியவற்றின்படியும் தண்டிக்கப்படவேண்டிய குற்றவாளிகள் என தீர்மானிக்கிறேன்.

குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 235(2)ன் அடிப்படையில் எதிரிகள் இருவரிடமும் தண்டனை குறித்து வினவ வேண்டியது அவசியமாக அமைந்திருக்கிறது. 1வது எதிரியிடம் கேட்கப்பட்ட கேள்வியும் அவர் அளித்த பதிலும் பின்வருமாறு சுட்டிக்காட்டப்படுகிறது.

<u>1வது எதிரியிடம் கேட்கப்பட்ட கேள்வி:</u> இ.த.ச. பிரிவு 120(B) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302 மற்றும் இ.த.ச. பிரிவு 302( 2 எண்ணிக்கைகள்) ஆகியவற்றின்படி தங்களுக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்வு கண்டுள்ளது. எனவே தங்களுக்கு அளிக்கவிருக்கின்ற தண்டனை பற்றி தாங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

<u>1 வது எதிரியின் பதில் :</u>

நான் பண்ணவில்லை. நான் என் தம்பியை இழந்துவிட்டேன். என் அம்மா, அப்பாவுடன் செல்லவேண்டும். குறைந்த தண்டனை கொடுங்கள்.

<u>2வது எதிரியிடம் கேட்கப்பட்ட கேள்வி:</u> இ.த.ச. பிரிவு 120(B) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302 மற்றும் இ.த.ச. பிரிவு 302 உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 109 ( 2 எண்ணிக்கைகள்) ஆகியவற்றின்படி தங்களுக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்வு கண்டுள்ளது. எனவே தங்களுக்கு அளிக்கவிருக்கின்ற தண்டனை பற்றி தாங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

<u>2வது எதிரியின் பதில்</u>

பிணையே கொடுக்காமல் ஏற்கனவே ஏழு வருடங்கள் சிறையில் ரிமாண்டிலேயே இருந்துவிட்டேன். கம்மியாக கொடுங்கள். என் பெற்றோர்க்கு 70 வயதாகிறது. நான் வீட்டில் ஒரே பையன்.

இவ்வழக்கு எதிரிகள் இருவரும் அளித்த பதில் பரிசீலிக்கப்பட்டது. எதிரிகளுக்கு குறைந்த தண்டனை வழங்க முடியாது. எதிரிகள் மீது நிரூபிக்ப்பட்ட குற்றம் மரணம் விளைவிக்க குற்றமுறு சதித் திட்டம் தீட்டி 2 பிஞ்சு குழந்தைகளுக்கு கொலையாகும் மரணம் விளைவித்த குற்றம் . எனவே எதிரிகளிடம் கருணை காட்டவேண்டிய அவசியம் இல்லை. குறைந்த பட்ச தண்டனை வழங்க முடியாது.

ஒரு பெற்ற தாய் குழந்தைகளை பராமரிக்க வேண்டிய கடப்பாட்டிற்கு உள்ளானவர். தன்னுடைய 2 குழந்தைகளையும் 2ம் எதிரி மீது கொண்ட ஆசை

காரணமாக கொலை செய்ய முற்பட்டது கொடூரமானதொரு துன்பியல் நிகழ்வு. தன்னை ஒரு தாய் வளர்த்து ஆளாக்கி திருமணம் தனக்கு நடந்திருப்பதை 1வது எதிரி கவனத்தில் கொள்ளவில்லை. குழந்தைகளை பராமரிக்கவேண்டிய கடப்பாடு தாயாகிய 1ம் எதிரிக்கு உண்டு.

சாமானியரின் பார்வையிலும் அவர்கள் கேட்கும்போது 2 குழந்தைகளை எதிரிகள் கொன்றது மிகக் கொடிய கொலையாகத் தான் தெரியும் . 1வது எதிரி இளம் பெண்.2 ம் எதிரியும் இளம் வயதினர் தான். இளம் பெண்ணாகிய 1வது எதிரியையும் 2வது எதிரியையும் தூக்கிலிட முடியாது. நாம் அப்படி செய்யக்கூடாது. மகாத்மா காந்தியடிகள்கூறியதை இங்கே மேற்கோளாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடவுள் தந்த உயிரை பறிக்க மனிதனுக்கு உரிமை இல்லை.

மரணதண்டனையை அகிம்சைக்கு எதிரானதாகவே

பார்க்கிறேன். உயிரை அளிப்பவர் மட்டுமே அதை

எடுக்க முடியும்.

– மகாத்மா காந்தி, ஹரிஜன் 27 ஏப்ரல் 1940.

எதிரிகள் இருவரும் 2 இளம் குழந்தைகளின் உயிரை பறித்துவிட்டார்கள் என்பதற்காகவே அவர்கள் இருவரின் உயிரையும் பறிக்கவேண்டியதில்லை. கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என்ற அணுகுமுறையை நாம் கடைபிடிக்க வேண்டிய அவசியம்

இல்லை. குழந்தைகளின் உயிரை பறித்து மிகப்பெரும் கொடுமை செய்த எதிரிகளை குழந்தைகள் இருவரின் உயிரை பறித்தார்கள் என்பதற்காகவே நாம் 3 வது மற்றும் 4வதாக இரண்டு உயிர்களை பறித்துவிடக்கூடாது. மாண்புமிகு உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர் திரு. வி.ஆர். கிருஷ்ணய்யர் அவர்கள் தன்னுடைய தீர்ப்புகள் சிலவற்றில் இதை குறிப்பிட்டுள்ளார்.

மாச்சி சிங் எதிர் பஞ்சாப் மாநிலம் (Machhi Singh and others V State of Punjab CDJ 1983 SC 017) என்னும் வழக்கில், உச்ச நீதிமன்றம் கீழ்க்காணும் தீர்ப்பை வழங்கியது: குற்றத்தின் கடுமையை அதிகப்படுத்தும் காரணிகள், குற்றத்தின் கடுமையைத் தணிக்கும் காரணிகள் ஆகிய இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்தும், குற்றத்தின் கடுமையைத் தணிக்கும் காரணிகளுக்கு முழுமதிப்புக் கொடுத்தும்தான் ஆயுள் தண்டனை வழங்குவதா, மரண தண்டனை வழங்குவதா என்னும் முடிவுக்கு வர வேண்டும்.

தண்டனை வழங்கும்போது நீதிமன்றம், கீழ்கானும் கேள்விகள் எழுப்பி அவற்றுக்குப் பதில் காணவேண்டும் என்றும் அத் தீர்ப்பு கூறியது :

1. ஆயுள் கால சிறைத் தண்டனை போதுமானதல்ல என்றும் மரண தண்டனை கொடுக்கப்பட வேண்டும் என்றும் கருதும் வகையில், இழைக்கப்பட்ட குற்றத்தில் ஏதேனும் அசாதரணமான அம்சம் இருக்கிறதா?

2. குற்றம் புரிந்தவருக்கு சாதகமாக, அவரது குற்றத்தின் கடுமையைத் தணிக்கும் காரணிகள், சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஆகியவற்றுக்கு முழுமதிப்புக் கொடுத்து அவற்றைக் கருத்தில் கொண்ட பிறகும், மரண தண்டனையைக் கொடுப்பதைத் தவிர வேறு மாற்று இல்லை என்று கருதப்படக்கூடிய வகையில் குற்றம் புரியப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலை இருக்கின்றதா?

இந்த வழக்கில் தீர்ப்புக் கூறிய நீதிநாயகம் தாக்கர், ' அரிதினும் அரிதான ' என்பதற்கான அளவுகோல்களைக் கீழ்க்கண்டவாறு வரையறுத்தார் :

1. கொலை செய்யப்பட்ட முறை ( எடுத்துக்காட்டுகள் : ஒருவரை உயிரோடு எரித்துக் கொல்லுதல் ; ஒருவரது உடலைக் கண்டதுண்டமாக வெட்டிக்கொல்லுதல்)

2. கொலைக்கான தூண்டுதல் : ஒழுக்கக்கேடான, இழிவான தன்மையை வெளிப்படுத்தும் தூண்டுதல்கள் (எடுத்துக்காட்டுகள் : கூலிக்குக் கொலை செய்தல் ; ஒருவரது சொத்தை அபகரிக்க அவரை ஈவிரக்கமின்றிக் கொலை செய்தல் ; தேசத்தைக் காட்டிக் கொடுப்பதற்காகக் கொலை செய்தல்)

3. சமூக விரோத அல்லது சமுதாயத்தால் வெறுக்கப்படுகின்ற தன்மை வாய்ந்த குற்றம் புரிதல் ( எடுத்துக்காட்டுகள் : சமுதாயத்தின் கோபத்தைத் தூண்டிவிடுகிற வகையில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவரையோ, சிறுபான்மையினரைச்

சேர்ந்தவரையோ கொலை செய்தல் ; வரதட்சனையை வலுக்கட்டாயமாகப் பெறும் பொருட்டுக்கொலை செய்தல்)

4. கொலைக் குற்றத்தின் பரிமாணங்கள் ( எடுத்துக்காட்டுகள் : குடும்பத்தின் உறுப்பினர்கள் அனைவரையும் கொல்லுதல்; குறிப்பிட்ட சமுதாயத்தையோ, குழுவையோ சேர்ந்த அனைவரையும் கொல்லுதல்)

5. கொலையுண்டவரின் ஆளுமை ( எடுத்துக்காட்டுகள் : கள்ளங்கபடில்லாத குழந்தை; நிராதரவான பெண் ; தனிப்பட்ட காரணத்துக்காக அன்றி, அரசியல் காரணத்துக்காகக் கொலை செய்யப்படுபவரும், தனது சேவைகளின் காரணமாக மதிக்கவும் நேசிக்கவும் படக்கூடியவருமான ஒரு தலைவர்)

கொலைக்குற்றத்துக்கு மரண தண்டனை மட்டுமே வழங்குவதுதான் நியதி என்பதற்கு மாறாக ' அரிதினும் அரிதான ' வழக்குகளில் மட்டுமே மரண தண்டனை வழங்கப்படவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு கூறியது.

மேலும் மாண்புமிகு உச்சநீதிமன்றம் M.C. MEHTA Vs. State of Tamilnadu and others AIR 1997 SC P.699 என்ற வழக்கில்

All the world waits for my coming. All the earth watches with interest to see what I shall become. Civilization hangs in the balance, For what I am, the world of tomorrow will be. I am the child.

You hold in your hand my destiny. You determine, largely, whether I shall succeed or fail, Give me, I pray you, these things that make for happiness. Train me, I beg you, that I may be a blessing to the world".

Manie Gene Cole It may be that the aforesaid appeal lies at the back of the saying that "child is the father of man". To enable fathering of a valiant and vibrant man, the child must be groomed well in the formative years of his life. He must receive education, acquire knowledge of man and materials and blossom in such an atmosphere that on reaching age, he is found to be a man with a mission, a man who matters so for as the society is concerned.

2. Our Constitution makers, wise and sagacious as they were, had known that India of their vision would not be a reality if the children of the country are not nurtured and educated.

என்ற வழக்கில் குழந்தையே மனிதனின் தந்தை என குழந்தைகளின் மாண்பை குறிப்பிட்டதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு தாயின் கருவறைக்குள் இருக்கும் குழந்தை வெளி உலகத்தைப் பார்த்து சொல்வதாக இந்த கவிதை அமைந்திருக்கிறது. இதைத்தான் மேற்சொன்னவாறு ஆங்கிலத்தில் நமது மாண்புமிகு உச்ச நீதிமன்றம் எடுத்துரைத்திருந்தது.

நான் குழந்தை

எனது வருகைக்காக இந்த உலகமே காத்துக்கொண்டிருக்கிறது.

நான் என்ன ஆவேன் என உலகில் அனைவரும்

அக்கறையுடன் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள்.

நாகரீகம் நூலிழையில்

ஊசலாடிக்கொண்டிருக்கிறது.

ஏனெனில்

நான் எப்படியிருக்கின்றேன்

என்பதைப் பொறுத்துதான்

நாளைய உலகம் அமையும்.

நான் குழந்தை

என் தலை விதி உங்கள் கையில் உள்ளது.

நான் வெல்வேனா, தோற்றுப்போய் விடுவேனா,

என்பதைப் பெரிதும் நிர்ணயிப்பது

நீங்கள்தான்

உங்களைக் கையெடுத்துக் கும்பிடுகிறேன்.

மகிழ்ச்சியுடன் இருக்க என்ன தேவையோ அவற்றை

எனக்கு தாருங்கள்.

உங்களைக் கெஞ்சிக்கேட்கிறேன்.

நான் இந்த உலகின் நற்பேறு எனப்பிறர்

கூறுமளவிற்கு

என்னை ஆளாக்குங்கள்.

சராசரி பெண்மணி இத்தகைய கள்ளங்கபடமில்லாத குழந்தைகளைக் கொல்லும் கொடும் பாதக செயலை செய்யமாட்டார். 1,2 எதிரிகளுக்கு அதிகபட்சமான தண்டனையான மரண தண்டனை வழங்குவதற்கான சூழ்நிலைகள் மிக மிக துல்லியமாக இந்த வழக்கில் பொருந்தவில்லை. கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என்ற கோட்பாட்டை இங்கே பொருத்த வேண்டாம் என நினைக்கிறேன். கள்ளங்கபடமில்லாத குழந்தைகள் மீது நிகழ்த்தப்பட்ட கொலைக்குற்றத்திற்கான பரிமாணம் ஆகியவற்றால் எதிரிகட்கு வெறுமனே ஆயுள் தண்டனை மட்டுமே வழங்கினால் போதுமானதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது .

இந்த வழக்கை அரிதிலும் அரிதான வழக்காக கருத இயலாது என முடிவு செய்து குற்றவாளிகளாகிய இவ்வழக்கு எதிரிகள் ஆயுள் தண்டனையை மீதமுள்ள அவர்களது வாழ்நாள் முழுவதையும் சிறையில் அனுபவிக்க வேண்டும். வெறுமனே ஆயுள் தண்டனை மட்டும் வழங்கினால் போதுமானதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மாறாக,மேலே கண்ட பத்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறு

Swamy Shraddananda @ Murali Manohar Mishra ... Appellant

Vs.

State of Karnataka ---Respondent,

in Criminal Appeal No.454 of 2006, மற்றும்

Hari & Anr. .... Appellant

vs.

The State of Uttar Pradesh ... Respondent

in Criminal Appeal 186/2018

ஆகிய இரு வழக்குகளிலும்வழங்கப்பட்டது போல் எதிரிகளுக்கு ஆயுள் தண்டனை வழங்கி அவர்கள் இறுதிமூச்சு வரை ( சாகும் வரை )சிறையில் இருந்து தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தால் நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேற்கூறியவாறான பின்னணியில் இவ்வழக்கை பரிசீலனை செய்து பார்க்கின்றபோது 1வது எதிரியின் மீதான இ.த.ச. பிரிவு 120(B) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302 மற்றும் இ.த.ச. பிரிவு 302( 2 எண்ணிக்கைகள்) ஆகியவற்றின்படியான குற்றச்சாட்டுகளும் 2ம் எதிரியின் மீதான இ.த.ச. பிரிவு 120(B) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302 மற்றும் இ.த.ச. பிரிவு 302 உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 109 ( 2 எண்ணிக்கைகள்) ஆகியவற்றின்படியான குற்றச்சாட்டுகளும் அரசு தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என கண்டுணர்ந்து இவ்வழக்கு 1 வது எதிரிக்கு இ.த.ச. பிரிவு 120(B) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302 ன்கீழ் ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்கி அவர் இறுதி மூச்சுவரை (சாகும்வரை)

சிறையில் இருந்து தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் அத்துடன் ரூ.5000/- அபராதம்விதித்தும் அபராதம் கட்டத்தவறினால் 3 வருடங்கள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தும் 1வது எதிரியின் மீதான இ.த.ச. பிரிவு 302 (2 எண்ணிக்கை) ன் கீழ் ஒவ்வொரு எண்ணிக்கைக்கும்ஒவ்வொரு ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்கியும் அவர் இறுதி மூச்சுவரை (சாகும்வரை) சிறையில் இருந்து தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் அத்துடன் ரூ.5000/- அபராதம் விதித்தும் அபராதம் கட்டத்தவறினால் 3 வருடங்கள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தும் அதேபோல் 2 வது எதிரிக்கு இ.த.ச. பிரிவு 120(B) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302 ன்கீழ் ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்கி அவர் இறுதி மூச்சுவரை (சாகும்வரை) சிறையில் இருந்து தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் அத்துடன் ரூ.5000/- அபராதம் விதித்தும் அபராதம் கட்டத்தவறினால் 3 வருடங்கள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தும் 2வது எதிரியின் மீதான இ.த.ச. பிரிவு 302 உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 109 (2 எண்ணிக்கை) ன் கீழ் ஒவ்வொரு எண்ணிக்கைக்கும்ஒவ்வொரு ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்கி அவர் இறுதி மூச்சுவரை (சாகும்வரை) சிறையில் இருந்து தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் அத்துடன் ரூ.5000/- அபராதம் விதித்தும் அபராதம் கட்டத்தவறினால் 3 வருடங்கள்கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தும் தீர்ப்பு வழங்குவதே சரியானது என தீர்மானிக்கப்பட்டு இவ்வழக்கில் தீர்வுகாணப்படுகிறது..

இறுதியில், இவ்வழக்கு முதல் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவு 120(B) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302 மற்றும் இ.த.ச. பிரிவு 302( 2 எண்ணிக்கைகள்) ஆகியவற்றின்படியான குற்றச்சாட்டுகளும் 2ம் எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவு 120(B) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302 மற்றும் இ.த.ச. பிரிவு 302 உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 109 ( 2 எண்ணிக்கைகள்) ஆகியவற்றின் கீழான குற்றச்சாட்டுகளும் அரசு தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்று கண்டுணர்ந்து இவ்வழக்கு 1 வது எதிரிக்கு இ.த.ச. பிரிவு 120(B) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302 ன்கீழ் ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்கி அவர் இறுதி மூச்சுவரை (சாகும்வரை) சிறையில் இருந்து தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் அத்துடன் ரூ.5000/- அபராதம்விதித்தும் அபராதம் கட்டத்தவறினால் 3 வருடங்கள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தும் 1வது எதிரியின் மீதான இ.த.ச. பிரிவு 302 (2 எண்ணிக்கை) ன் கீழ் ஒவ்வொரு எண்ணிக்கைக்கும் ஒவ்வொரு ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்கியும் அவர் இறுதி மூச்சுவரை (சாகும்வரை) சிறையில் இருந்து தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் அத்துடன் ரூ.5000/- அபராதம் ஒவ்வொரு எண்ணிக்கைக்கும் விதித்தும் அபராதம் கட்டத்தவறினால் 3 வருடங்கள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தும் அதேபோல் 2 வது எதிரிக்கு இ.த.ச. பிரிவு 120(B) உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 302 ன்கீழ் ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்கி அவர் இறுதி மூச்சுவரை (சாகும்வரை) சிறையில் இருந்து தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் அத்துடன் ரூ.5000/- அபராதம் விதித்தும் அபராதம்

கட்டத்தவறினால் 3 வருடங்கள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தும் 2வது எதிரியின் மீதான இ.த.ச. பிரிவு 302 உடன் இணைந்த இ.த.ச. பிரிவு 109 (2 எண்ணிக்கை) ன் கீழ் ஒவ்வொரு எண்ணிக்கைக்கும்ஒவ்வொரு ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்கி அவர் இறுதி மூச்சுவரை (சாகும்வரை) சிறையில் இருந்து தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் அத்துடன் ரூ.5000/- அபராதம் ஒவ்வொரு எண்ணிக்கைக்கும் விதித்தும் அபராதம் கட்டத்தவறினால் 3 வருடங்கள்கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தும் தண்டனை தீர்ப்பும், தீர்ப்பு தண்டனையும் வழங்கப்படுகிறது. முதல் எதிரிக்கு விதிக்கப்பட்ட மொத்த அபராதத்தொகை ரூ.15,000/-. 2வது எதிரிக்கு விதிக்கப்பட்டமொத்த அபராதத்தொகை ரூ.15,000/-. ஆக இவ்வழக்கில் மொத்தமாக விதிக்கப்பட்ட மொத்த அபராதத்தொகை ரூ. 30,000/-.

இவ்வழக்கில் உள்ள வழக்குச்சொத்துக்களான இந்நீதிமன்ற P.I. No. 9/2025ல் உள்ள சா.பொ.1 முதல் சா.பொ.7 ஆகியவற்றை இவ்வழக்கில் மேல்முறையீடு எதுவும் இருப்பின் மேல்முறையீடு முடிந்த பிறகு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது. சா.பொ.8 இருசக்கர வாகனத்தை இவ்வழக்கில் மேல்முறையீடு எதுவும் இருப்பின் மேல்முறையீடு முடிந்த பிறகு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அரசுக்கு ஆதாயம் செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பானது சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் சுருக்கெழுத்தில் வடித்துக்கொள்ளப்பட்டு பின்னர் கணிணியில் தட்டச்சில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு ஜுலைத் திங்கள் 24ஆம் நாள் ஆகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

CHEMMAL
Principal District and Sessions Judge
Digitally signed by CHEMMAL
Location: KANCHEEPURAM
Date: 2025.07.24 16:40:02 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி
மகளிர் நீதிமன்றம் , காஞ்சிபுரம்
(முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம்)
காஞ்சிபுரம்.

அரசு தரப்பு சாட்சிகள்

| | | |
|---|---|---|
| அ.சா.1 | -- | திரு. விஜய் |
| அ.சா.2 | -- | திருமதி. கவிதா ராமகிருஷ்ணன் |
| அ.சா.3 | -- | திரு, பூபதி |
| அ.சா.4 | -- | திரு. செந்தில் |
| அ.சா.5 | -- | திரு. முத்து |
| அ.சா.6 | -- | திரு. சரவணகுமார் |
| அ.சா.7 | -- | திரு. கோபாலகிருஷ்ணன் |
| அ.சா.8 | -- | திருமதி. பிந்து |
| அ.சா.9 | -- | திரு. விஜயன் |
| அ.சா.10 | -- | திரு. கார்த்திகேயன் |

| | | |
|---|---|---|
| அ.சா.11 | -- | திரு. ரமேஷ் |
| அ.சா.12 | -- | திருமதி. பூர்விஷா ரவி |
| அ.சா.13 | -- | டாக்டர். பிரியா |
| அ.சா.14 | -- | திரு.லலித்குமார் |
| அ.சா.15 | -- | திரு. குமார் |
| அ.சா.16 | -- | திருமதி. ஜமுனா சிவசங்கரன் |
| அ.சா.17 | -- | திரு.விஜயன் |
| அ.சா.18 | -- | திரு. செல்வம் |
| அ.சா.19 | -- | திரு. கார்த்திகேயன் |
| அ.சா.20 | -- | திருமதி. J.R. ஜெயந்தி |
| அ.சா.21 | -- | திருமதி. பாக்கிய சாந்தி |
| அ.சா.22 | -- | திரு. சார்லஸ் |
| அ.சா.23 | -- | திருமதி. ேஹமலதா |
| அ.சா.24 | -- | திரு. கைலாசம் |
| அ.சா.25 | -- | திரு.வேலு |

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள்</u>

| | | |
|---|---|---|
| எ.த.சா.1 | -- | திரு. புகழேந்தி |
| எ.த.சா.2 | -- | திருமதி. அனுராதா |
| எ.த.சா.3 | -- | திரு. மெல்வின் ராஜாசிங் |
| எ.த.சா.4 | -- | திரு. ராஜிவ் பிரின்ஸ் ஆருண் |
| எ.த.சா.5 | -- | திரு. சுப்பையா |
| எ.த.சா.6 | -- | திருமதி. நல்லம்மை |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 01.09.2018 | புகார் |
| அ.சா.ஆ.2 | 01.09.2018 | பார்வை மகசர். |
| அ.சா.ஆ.3 | 02.09.2018 | கைப்பற்றுதல் மகசர். |
| அ.சா.ஆ.4 | 01.09.2018 | படிவம் -95(அ.சா.ஆ.27)ல் உள்ள அ.சா.7ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.5 | 01.09.2018 | இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65(b)ன்கீழ் சாட்சி கோபாலகிருஷ்ணன் அளித்த சான்றிதழ் |
| அ.சா.ஆ.6 | 02.09.2018 | 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.9ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.7 | 02.09.2018 | கைப்பற்றுதல் மகசர் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.8 | 02.09.2018 | 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.11ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.9 | 02.09.2018 | 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.11ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.10 | 02.09.2018 | 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.11ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.11 | 02.09.2018 | கைப்பற்றுதல் மகசர். |
| அ.சா.ஆ.12 | 23.10.2018 | Xerox copy of Toxicology Report No.2529/18. |
| அ.சா.ஆ.12 A | 23.10.2018 | Toxicology Report No.2529/18. |
| அ.சா.ஆ.13 | 23.10.2018 | Xerox copy of Toxicology Report No.2530/18. |
| அ.சா.ஆ.13A. | 23.10.2018 | Toxicology Report No.2530/18. |
| அ.சா.ஆ.14. | 23.10.2018 | Toxicology Report No.2631/18. |
| அ.சா.ஆ.15 | 01.09.2018 | குழந்தை அஜய்-ன் பிரேத பரிசோதனை சான்றிதழ் |
| அ.சா.ஆ.16 | 01.09.2018 | குழந்தை கார்னிகாவின் பிரேத பரிசோதனை சான்றிதழ் |
| அ.சா.ஆ.17. | -- | Computer Forensic Analysis report No.107/2018. |
| அ.சா.ஆ.18 | -- | CD-1-CF-107/2018. |
| அ.சா.ஆ.19 | 30.12.2019 | பிரேத பரிசோதனை அறிக்கை எண். 772/2018ன் மீதான விவரங்கள் கோரி குன்றத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிய வினாக்களுக்கு மருத்துவர் ப்ரியா அளித்த விவரங்கள் பதில் கடிதத்துடன் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.20 | 30.12.2019 | பிரேத பரிசோதனை அறிக்கை எண். 773/2018ன் மீதான விவரங்கள் கோரி குன்றத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிய வினாக்களுக்கு மருத்துவர் ப்ரியா அளித்த விவரங்கள் பதில் கடிதத்துடன் |
| அ.சா.ஆ.21 | 03.06.2019 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.22 | -- | Call details extraction report. |
| அ.சா.ஆ.23 | 01.09.2018 | முதல் தகவல் அறிக்கை. |
| அ.சா.ஆ.24 | 01.09.2018 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.25 | 01.09.2018 | குழந்தை அஜய் பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.26 | 01.09.2018 | குழந்தை கார்னிகா பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.27 | -- | படிவம்-95 |
| அ.சா.ஆ.28 | 02.09.2018 | சட்டப்பிரிவு மாற்று அறிக்கை |
| அ.சா.ஆ.29 | 29.11.2018 | சட்டப்பிரிவு மாற்று அறிக்கை |
| அ.சா.ஆ.30 | -- | இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65(b)ன்கீழ் சாட்சி ே◌உறமலதா அளித்த சான்றிதழ் |
| அ.சா.ஆ.31 | 27.12.2023 | அ.சா.ஆ.30 சான்றிதழ் அனுப்பி வைக்கப்பட்டதற்கான கடிதம். |
| அ.சா.ஆ.32 | 14.10.2023 | இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65(b)ன்கீழ் Reliance JIO INFOCOMM LTD அளித்த சான்றிதழ். |

எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள் –

| | | |
|---|---|---|
| எ.த.சா.ஆ.1 | 30.08.2018 | மணி மெடிக்கல்ஸ் ரொக்க இரசீதின் நகல். |
| எ.த.சா.ஆ.2 | 25.07.2019 | மருந்து இரசீது, |
| எ.த.சா.ஆ.3<br><br>எ.த.சா.ஆ.4<br><br>எ.த.சா.ஆ.5<br><br>எ.த.சா.ஆ.6 | 12.02.2019<br><br>19.08.2019<br><br>08.12.2020<br><br>-- | மருந்து இரசீதின் நகல்<br><br>மருந்து இரசீது.<br><br>பொது தகவல் அதிகாரி, அரசு மருத்துவமனை , தாம்பரம் அவர்கள் அளித்த பதில் மற்றும் கோரிக்கை மனு.<br><br>Report given by Dr. Vinoth for the Questionnaires given by the Inspector Police, Kundrathur Police station for 2 Postmortem reports. |
| எ.த.சா.ஆ.7 | -- | மருந்து இரசீது. |
| எ.த.சா.ஆ.8 | 30.05.2023 | Requisition letter send to the public information officer, Goods and Service Tax office, under RTI Act from R. Kishore Kumar Advocate. |
| எ.த.சா.ஆ.9. | 31.07.2023 | Reply received from the Public information officer, Assistant Commissioner, Varatharajapuram. |
| எ.த.சா.ஆ10. | 25.02.2019 | Requisition letter send to the public information officer, Special Prison for women undr RTI Act from J.B. Salamon Peter Kamaldoss, Advocate. |
| எ.த.சா.ஆ.11 | 25.02.2019 | சென்னை புழல் மகளிர் தனி சிறையிலிருந்து வந்த பதில் |

| | | |
|---|---|---|
| எ.த.சா.ஆ.12 | 25.02.2019 | சென்னை புழல் மகளிர் தனி சிறையிலிருந்து வந்த பதில் |
| எ.த.சா.ஆ.13 | 25.02.2019 | சென்னை புழல் மகளிர் தனி சிறையிலிருந்து வந்த பதில் |
| எ.த.சா.ஆ.14 | 25.02.2019 | சென்னை புழல் மகளிர் தனி சிறையிலிருந்து வந்த பதில் |
| எ.த.சா.ஆ.15 | 25.02.2019 | சென்னை புழல் மகளிர் சிறையிலிருந்து வந்த பதில் |
| எ.த.சா.ஆ.16 | 25.02.2019 | Requisition letter send to the public information officer, State, Crime Records Bureau Under RTI Act from J.B. Salamon Peter Kamaldoss, Advocate. |
| எ.த.சா.ஆ.17 | 25.02.2019 | Reply received from public information officer, State Crime Records Bureau, Chennai. |
| எ.த.சா.ஆ.18 | 11.04.2019 | Requisition letter send to the Public Information Officer, Additional director of police, Chennai RTI Act from J.B. Salamon Peter Kamaldoss, Advocate. |
| எ.த.சா.ஆ.19 | 11.04.2019 | Reply received from Additional director of Police, State Crime records Bureau, Chennai. |
| எ.த.சா.ஆ.20 | 11.04.2019 | Requisition letter of Abirami send to the Public Information officer, Deputy Commissioner of Police, St. Thomas Mount. |
| எ.த.சா.ஆ.21 | 11.04.2019 | Reply received from Deputy Commissioner of Police, Avadi. |
| எ.த.சா.ஆ.22 | 11.04.2019 | Reply received from Inspector of Police, Kundrathur. |
| எ.த.சா.ஆ.23 | 28.08.2019 | Requisition letter send to the Public Information |

| | | |
|---|---|---|
| | | officer, VAO Office Moondram Kattalai given by G.Suresh Advocate. |
| எ.த.சா.ஆ.24 | 28.08.2019 | Reply received from Public Information officer, Deputy Thasildar, pallavaram. |
| எ.த.சா.ஆ.25 | 31.07.2023 | Report received from VAO, Moondram Kattalai. |
| எ.த.சா.ஆ.26 | 07.08.2023 | Xerox copy of Medical sheet of prisoner Abirami given by Central Prison Puzhal,Chennai. |

Court Side Documents:

| | | |
|---|---|---|
| Ex.C.1. | 15.06.2023 | General diary entry SL.No.9443406 dated:01.09.2018. |
| Ex.C.2. | 15.06.2023 | Photo Number 283. |
| Ex.C.3. | 15.06.2023 | Photo Number 281, 285. |
| Ex.C.4. | 15.06.2023 | General diary entry SL.No.9443407 dated:01.09.2018. |
| Ex.C.5. | 04.07.2023 | General diary entry SL.No.9443409 dated:02.09.2018. |
| Ex.C.6. | 04.07.2023 | General diary entry SL.No.3171914 dated:03.06.2019. |

<u>அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்</u>

| | |
|---|---|
| சா.பொ.1 | மணி மெடிக்கல்ஸ் பில் புக் S.No. 5201 to 5600 உள்ள பில் புத்தகம்-1<br>மணி மெடிக்கல்ஸ் உரிமம் நகல்-1 |
| சா.பொ.2 | Traffic MG Tablet – 3 Nos. |
| சா.பொ.3 | T Becalm 0.5 mg Tablet -3 Nos. |
| சா.பொ.4 | Becosules Tablet – 5 Nos. |
| சா.பொ.5 | Master ® 1.5 x Compatible CD-R 700 MB/80 M in என்ற பெயர் கொண்ட பதிவு ஆகியிருந்த CD ஒன்று |
| சா.பொ.6 | எதிரி அபிராமி பயன்படுத்திய செல்போன் GIONEE ISS 3252 ( Part) I IEC 609 50 IR 63000370 Android Gold colour Cell phone. |
| சா.பொ.7 | எதிரி சுந்தரம் பய்னபடுத்திய செல்போன் SAMSUnG 17NXF DVOS Android கருப்பு நிறம்எ ன்ற பெயர் கொண்ட செல்போன் |
| சா.பொ.8 | TN85 C9360 TVS Scooty pink colour ( Return to police custody |

CHEMMAL
Principal District and Sessions Judge
Digitally signed by CHEMMAL
Location: KANCHEEPURAM
Date: 2025.07.24 16:39:19 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி
முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம்
(மகளிர் நீதிமன்றம்,காஞ்சிபுரம்)
காஞ்சிபுரம்.

தீர்ப்புரை

அமர்வு வழக்கு எண். 77/2018
முதன்மை மாவட்ட அமர்வு
நீதிமன்றம், காஞ்சிபுரம்
(மகளிர் நீதிமன்றம்,காஞ்சிபுரம்)
நாள்- 24.07.2025.